கோகுலம்

GOKULAM

ஜூன் '90 விலை ரூ. 3/—





ஓடி விளையாடும் போது,
பாடி மகிழும் போது...

மகிழ்ச்சி மேலும் பெருகவே
ஃபன்பைட் கையில் இருக்குதே.



காம்ப்கோ வழங்கும்
ஃபன்பைட்.

க்ரீம் நிறைந்த, அருமையான
சாக்கலேட். இதன் உள்ளே
மொறுமொறுவென வேஃபர்.
அதைச் சுற்றிலும் சுவையான
சாக்கலேட்.


குதூகலமும் கொண்டாட்டமும்
மேலும் சிறக்க.

இந்தியாவின் மிகப் பெரிய, அதிநவீன ஆலை அளிப்பது

காம்ப்கோ லிமிடெட், மங்களூர்


Other Campco chocolates | Milk | TURBO | Eclairs | TOFFEE | Campco beverages | WINNER

R K SWAMY/CL/7804



கோகுலம்

1990 ஜூன் மாத இதழ்
மலர்: 8 ○○ இதழ்: 5



அன்புத் தம்பி, தங்கைகளே!

உங்கள் வளமும் வாழ்வும் மங்காமல் நலம்சூழ ஓங்கு புகழும் உயர் கல்வியும் பெற்று வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

இது அம்பேத்கார் நூற்றாண்டு. இந்த இதழில் இவரைப் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்று இடம் பெற்றிருக்கிறது.

இது பாரதிதாசன் நூற்றாண்டு. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வார இதழ்கள் பலவற்றிலும் இந்த பாரதிக்குத் தாசனைப் பற்றிப் பற்பல செய்திகளும் கவிதைகளும் வந்ததை வரவு வைத்திருப்பீர்கள்.

இதற்குமுன் காந்திஜி, பாரதியார், நேரு போன்ற எத்தனையோ பேரறிஞர்களின் நூற்றாண்டுகளைக் கொண்டாடியிருக்கிறோம்.

இந்த நூற்றாண்டுகளைக் கொண்டாட முழு உரிமை பெற்றவர்கள் நீங்கள்தான் என்பதை உணர்வீர்களா? இதனால் அதிகப்படியான பயன் உங்களுக்குத்தான் என்பதை அறிவீர்களா? எப்படி?

உங்களுக்காகக் காத்திருக்கும் காலம் அதிகம் அல்லவா? நூற்றாண்டு நாயகர்களைப் போல் வாழ்ந்து, அந்தப் பட்டியலில் இடம் பிடிக்க வாருங்கள், வாருங்கள் என்றுதான் இந்த நூற்றாண்டு விழாக்கள் உங்களை இருகரம் நீட்டி வரவேற்கின்றன.

அதுசரி, சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பிடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் எவை?

முதலில் நீங்கள் எங்கு போய்ச் சேர வேண்டும் என்ற இலக்கைத் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். உங்கள் இலக்கிலே சாதனை புரிந்தவர்களைத் தேடிப் பிடியுங்கள். அவர்களைப்போல் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் அவர்கள் சென்ற பாதையிலேயே உங்கள் பயணத்தைத் துவங்குங்கள்!

அதற்கு இந்த நூற்றாண்டு நாயகர்களின் வாழ்க்கை வரலாறுகள் உங்களுக்கு உறுதுணையாய் இருக்கும். அடிப்படை விஷயங்கள் பொதும்படைதான். உதாரணமாகப் படுக்கையிலிருந்து எழுவது எப்போது, பெரியோரிடம் நடந்து கொள்ளும் முறை என்ன, எப்படியெல்லாம் படிப்பது, கொடுத்த வாக்கை சத்தியத்தை எப்படி மதிப்பது, தன் நலம் மறந்துப் பிறர் நலத்தில் நாட்டம், உண்மையான மகிழ்ச்சி எது — இவையெல்லாம் அனேகமாய் அறிஞர்களிடம் ஒன்றுபோல் இருப்பதைக் காண்பீர்கள்.

ஆம். அவர்கள் வாழ்க்கை வரலாறு உங்களுக்கு உற்சாகமூட்டும். படியுங்கள்; வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள்.

அன்பு அண்ணன்,

தேசபந்து


(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

இந்த இதழில்





இராமாயணத்தில் கதாநாயகர் ஸ்ரீராமர். கதாநாயகனுக்கு மேற்பட்ட ஒரு பாத்திரம் ஒரு காவியத்தில் இருக்கக் கூடாது. இந்த மரபுக்கு மாறாக, இராமாயணத்தில் பரதன் தனது அரும் பெரும் குணங்களால் ஸ்ரீ ராமரையும் விஞ்சி விட்டான்.

இராமர், சித்திரை மாதம் நவமி திதி, புனர்வசு நட்சத்திரத்திலே அவதரித்தார். மறுநாள் தசமி திதி பூச நட்சத்திரத்திலே பரதன் தோன்றினார்.

அப்போது ராமருடைய குணமும் பரதனுடைய குணமும் நூற்றுக்கு நூறு என்று சமமாகவேயிருந்தது.

திருமணம் ஆனபின் முன்னிருந்ததைவிட மூன்று மடங்கு பரதருடைய பண்பு வளர்ந்தது. "மும்மையின் நிறை குணத்தவன், நின்னினும் நல்லனால்," என்று கோசலை ராமரிடம் கூறுகின்றார்.

இதற்குப் பதினான்கு நாட்களுக்குப் பிறகு பரதருடைய பண்பு ஆயிரம் மடங்காகப் பெருகிற்று.

"ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ," என்று குகன் பரதனைப் பாராட்டுகின்றான்.

ஸ்ரீராமரும் தன் தம்பியரில் பரதனையே அதிகம் பெருமையுடையவராகக் கருதியிருந்தார்.

"எத்தாயர் வயிற்றும் பின்பிறந்தார்கள் எல்லாம் ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதலுண்டோ" என்று ராமரே இலக்குவனிடம் கூறுகின்றார்.

வாலி ராமரைப் பார்த்து, "ராகவா! பரதனுக்கு அண்ணனாகப் பிறந்தாயே, பரதனுடைய பண்பு உனக்கும் இருக்க வேண்டாமா?" என்று ஏசுகின்றான்.

பரதர் ஸ்ரீ ராமரைப் போலவே மரவுரியுடுத்து, சடைமுடி வைத்து, நந்தியம்பதியில் இராமருடைய பாதுகைக்கு முடி சூட்டி, இந்திரியங்களை

பரதன் விரதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

யவித்து அந்தியும் பகலும் நீர் அறாத கண்களுடன் தவம் புரிந்தார்.

தென்திசையையன்றி வேறு திசைகளை நோக்க மாட்டார். வெறுந் தரையில் படுப்பார். ''ராம... ராம...'' என்று இடையறாது ஜெபிப்பார்.

சத்ருக்னரும் பாதுகையைப் பூசித்தார். இதற்கு ஒரு காரணம் உண்டு. வைகுண்டத்தில் ஒரு நாள் திருமால் வழக்கத்துக்கு மாறாகப் பாதுகையைப் பள்ளியறைக்குள் விடுத்துப் பாம்பணையில் படுத்தார். பெருமானுடைய திருமுடிக்குச் சீற்றம் உண்டாயிற்று. முடி, பாதுகை முதலியன தவஞ்செய்து அப்பதவி பெற்றவை.

முடி, ''ஏ, பாதுகையே! உனக்கு அறிவிருக்கின்றதா? கண்ட இடமெல்லாம் மிதிக்கின்ற நீ படுக்கையறைக்குள் வரலாமா? போ, வெளியே'' என்றது.

பாதுகை, ''முடியே! நானே வரவில்லை. பகவானுடைய திருவடிதான் என்னை உள்ளே விட்டது. வீணாக என்மீது ஏன் கோபிக்கின்றாய்? எய்தவன் இருக்க அம்பை நோகலாமா?'' என்றது.

''பாதுகையே! அதிகம் பேசாதே. நீ மிக இழிந்த பொருள். உள்ளே



யிருக்க உனக்குத் தகுதி கிடையாது. நான் பெருமானுடைய தலைக்குமேல் இருக்கும் தகுதியுடையவன். என்னுடன் பேசவும் உனக்கு யோக்கியதை கிடையாது; ஆதலினால் சீக்கிரம் போ, போ.'' என்றது.

''முடியே! ஏன் வீண் பெருமை பேசுகின்றாய்? எனக்கென்று ஒரு செயலும் கிடையாது. ஐயன் திருவடியை ஒட்டிக் கொண்டிருப்பவன். அப்பாதத்தை நம்பினோர் நலம் பெறுவர். அடியார்கள் அனைவரும் அடியைத் தானே விரும்புகின்றார்கள். 'அடி சேராய்' என்றுதானே பாடுகின்றார்கள். ஆனபடியால் என்னை இகழாதே!''

சங்கும் சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து, ''ஏ, செருப்பே! உனக்கென்ன அதிகம்வாய்? உன்னை, நசுக்கி எறிவோம். வாயை மூடிக் கொண்டு வெளியே போ,'' என்றன.

பாதுகை நாராயணரைப் பார்த்து, ''கருணைக் கடலே! நீர் என்னை உள்ளே விடுத்து இவர்களைக் கொண்டு இகழச் செய்வது முறையா?'' என்று முறையிட்டது.

திருமால், ''பாதுகையே! நீ வருந்தற்க.'' என்று கூறிவிட்டுப் பின்னர் முடியைப் பார்த்து, ''முடியே! நீ தற்பெருமை பேசிப் பாதுகையை நிந்தித்தபடியால், அடுத்து வரும் ராமாவதாரத்தில் பதினான்கு வருடங்கள் இப்பாதுகையின் மீது இருக்கக் கடவது; சங்கமே! சக்கரமே! நீவிர் என் முன் பாதுகையை இகழ்ந்தபடியால் ராமாவதாரத்தில் நீவிர் சத்ருக்னனாகவும் பரதனாகவும் பிறந்து, இப்பாதுகையைப் பதினான்கு ஆண்டுகள் வழிபடக் கடவது என்றார்.

அதனால் பதினான்கு ஆண்டுகள் பாதுகைக்கு முடிசூட்டிப் பரதர் விரதம் இருந்து பாதுகையைப் பூசித்தார்.

ஓரோராயினும் தாழவுரை. சிறியவர் என்று ஏழைகளை மனம்வருந்த இகழ்ந்தால், மறுபிறப்பில் நாம் அச்சிறியவருக்கு அடங்கி நடக்குமாறு விதியமையும். அதனால் தற்பெருமை கூடாது. சிறியோரை இகழ்தல் கூடாது.

போட்டி முடிவு-

போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் ஒரே மலைப்பாக இருக்கிறது. 912 பேர்! வரதனுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு எவ்வளவு வகையான ஆறுதல்கள்! அவனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்க எவ்வளவு வழிகள்! நான் ரமேஷாக இருந்தால் வரதனிடம் சவுக்கைக் கொடுத்து என்னை அடிக்கச் சொல்லித் தண்டனையை அனுபவிப்பேன் என்று ஒரு தம்பி எழுதியிருக்கிறான்!

முதல் பரிசு ரூ. 25/- பெறுபவர்:


1. டி. வி. சுந்தரம்,
த.பெ./திரு. கே. வேணுகோபாலன்,
2, டி. வி. சுப்ரமணியம் தெரு,
ஜோதி நகர், அரக்கோணம் — 631 003.

இரண்டாவது பரிசு ரூ. 15/- பெறுவோர்:

1. ரா. புஷ்பராஜ்,
த/பெ. திரு. எஸ். ராஜேந்திரன்,
191, 3 வது கிராஸ் ரோடு,
நேரு நகர், காரைக்கால் — 609 605.
2. ஜி. உமாசுதா,
12, லட்சுமி நகர்,
ஆதம்பாக்கம்,
சென்னை — 600 088.

ஆறுதல் பரிசு ரூ. 5/- பெறுவோர்:

1. சி. சந்திரமோகன்,
த/பெ. திரு. டி. ஆர். சீனிவாசன்,
வழக்கறிஞர், ஜெயம்கொண்டான்,
திருச்சி மாவட்டம். — 621 802.



டி. வி. சுந்தரம்

நீயாக இருந்தால்...

2. கு. சு. சம்பந்தமூர்த்தி,
   த/பெ. திரு. கு. கன்னியப்பன்,
   23, வாணியர் தெரு,
   சைதாப்பேட்டை, சென்னை — 600 015.

3. இரா. இரமேசு,
   8 ஜி, கே6, மெயின் கேம்ப்,
   எண்ணூர் தெர்மல் பவர் ஸ்டேஷன்,
   எண்ணூர், சென்னை — 600 057.

4. வி. சாந்தி,
   த/பெ. திரு. ஏ. வீரபத்ரன்,
   7, நவக்ரக தெரு,
   திருவாரூர் — 600 012.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்.

முதல் பரிசு பெற்ற முடிவு

உடனே காவல் நிலையம் சென்று, நடந்தவற்றைக் கூறி வரதனை விடுதலை செய்து, அவனிடம் மன்னிப்புக் கேட்பேன். ஆயிரம் குற்றவாளிகள் தப்பலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது.

— டி. வி. சுந்தரம், அரக்கோணம்.

இரண்டாவது பரிசு பெற்ற முடிவு

போலீஸ் ஸ்டேஷன் சென்று, உண்மையைக் கூறி வரதனை விடுவிப்பேன். இதைச் செய்யாவிட்டால் வரதன் குற்றவாளி என்ற பட்டம் பெற்று, தண்டிக்கப்படுவான். என்றும் அப்பழி அவனைவிட்டு அகலாது. அந்தப் பாவம் என்னை வந்து சேரும். தெரிந்த பிறகும் நல்லவர்களைக் குற்றவாளியாக்கல் முறையல்ல.

— ரா. புஷ்பராஜ், காரைக்கால்.

உண்மையைக் கூறி வரதனை விடுவித்து, அவசரப்பட்டு அவனைக் குற்றவாளியாக்கிய கொடுமைக்குத் தலைகுனிவேன். தக்க தண்டனை தரச் சொல்லி வரதனை வேண்டுவேன். இனி அவசரப்பட்டுபிறர் மீது பழி போடும் எந்த முடிவையும் எடுக்காது செயல்பட முடிவெடுப்பேன்.

— ஜி. உமாகதா, சென்னை — 86.

ஆறுதல் பரிசு முடிவுகள்:

1. அணிகலன்களை அணிந்தால் வரதன் மாதிரி மற்றவர்களுக்கும் பழி ஏற்படலாம். எனவே வளர்ந்து பெரியவனாகும்வரை அணிகலன்கள் வேண்டாம் என்று மோதிரத்தைத் தந்தையிடம் கொடுத்து விடுவேன்.
— சி. சந்திரமோகன், ஜெயம்கொண்டான்.

2. அஜாக்கிரதையாக இருந்தால் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நண்பர்களிடம் கூறி, ஒரு பொருளை அதற்குரிய இடத்தில்தான் வைக்க வேண்டும் என்று உணர்த்துவேன்.
கு. சு. சம்பந்தமூர்த்தி, சென்னை — 15.

3. எனது ஞாபக மறதியால் தண்டனையை அனுபவித்த வரதனுக்கு அந்த மோதிரத்தையே பரிசளித்து மன்னிப்பு வேண்டுவேன்.
— இரா. இரமேசு, சென்னை — 57.

4. வரதனை எனது கவனக்குறைவால் குற்றம் சாட்டிய நான்தான் குற்றவாளி; தண்டனைக்கு உரியவன்.
— வி. சாந்தி, திருவாரூர்.


ஜி. உமாகதா


ரா. புஷ்பராஜ்



கோடை விடுமுறையில் வெளியூர்ப் பயணம் மேற்கொள்வார்கள் சில மாணவ மாணவிகள். பல்வேறு காரணங்களால் அவ்வாறு வெளியூர் போக முடியாத மாணவ, மாணவிகள் அந்த விடுமுறைக் காலத்தைப் பயனுள்ள வகையில் செலவழிப்பதும் உண்டு. இங்கே சில பள்ளி மாணவ மாணவிகள் இந்தக் கோடை விடுமுறையின் போது தாங்கள் பயன் தரும் வகையில் கற்றுக் கொண்டவற்றைப் பற்றிச் சொல்கிறார்கள்: —

பி. ராஜேஸ்வரி:

இந்தி கத்துக்கிட்டிருக்கேன். ரொம்ப நாளாகவே எனக்கு இந்தி கத்துக்கணும்னு ஆசை. பள்ளிக் கூடத்திலே தமிழை இரண்டாவது மொழிப் பாடமா எடுத்துக்கிட்டிருக்கேன். அதனால ஒய்வு வேளைகளிலே, முக்கியமா இது மாதிரி நீண்ட ஸம்மர் வெகேஷன்லே இந்தி கத்துக்கறது சௌகரியமா இருக்கு. என்னது...? டெலிவிஷன்ல தேசிய நிகழ்ச்சிகளைப் பார்த்துப் புரிஞ்சுக்கறதுக்காகத்தான் இந்தி கத்துக்கறேனான்னு கேட்கறீங்களா? இல்லே. இல்லே... என் அப்பா அரசு ஊழியர். அவருடைய வேலையை எந்த ஊருக்கு வேணுமானாலும் மாத்திப் போடுவாங்க. தமிழ் நாட்டைத் தவிர வேறே மாநிலத்துக்கு அவருக்கு மாற்றல் ஆனா, இந்தி அந்தந்த


என்ன

கோடை

இடங்களிலே உதவும்னுதான் முக்கியமா நான் கத்துக்கிட்டு வர்றேன். அது மட்டுமில்லாம, வெகேஷன்ல எந்த ஊருக்கும் போகாத சூழ்நிலையிலே உபயோகமா காலத்தைச் செலவிடறதும் என்னோட முக்கிய நோக்கம்.

எஸ். சுரேஷ் பாபு:

நீச்சல் கத்துக்கறேன். கொஞ்ச நாளைக்கு முன்னால் எங்க சொந்த ஊருக்குப் போயிருந்தேன். அப்போ, ஊரை ஒட்டி இருந்த குளத்திலே ஒரு பையன் தவறி விழுந்துட்டான். அவனை உடனே காப்பாத்தணும்னு துடிச்சேன். ஆனா எனக்கு நீச்சல் தெரியாது. எங்கே நானும் ஆபத்திலே மாட்டிக்கிடுவேனோன்னு பயந்து தயங்கி நின்னுக்கிட்டிருந்தேன். அப்போ அந்தப் பக்கமா வந்த நாலஞ்சு பெரியவங்க குளத்துக்குள்ளே பாய்ந்து அந்தப் பையனைக் காப்பாத்திட்டாங்க. என்னால அவனைக் காப்பாத்த முடியலியேன்னு வருத்தப்பட்டேன். எப்படியாவது நீச்சல் கத்துக்கிட்டு, அந்தக் குறையையும் தீர்த்துடணும்னு நினைச்சேன். இப்ப இந்த லீவிலே நீச்சல் கத்துக்கறேன். அப்பப்ப நேரம் கிடைக்கற போது தொடர்ந்து கத்துக்கிட்டு வரப் போறேன். தண்ணீர்ல தத்தளிக்கிற இன்னொரு உயிரைக் காப்பாத்தறது மட்டும் என்னோட நோக்கமில்லே; நீச்சல் போட்டிகளிலே கலந்துக்கிட்டு வெற்றியும் பரிசும் வாங்கலாமில்லையா?



விடுமுறையில் கற்றீர்கள்?



எம். ஆர். ரேவதி:

தையல் கத்துக்கறேன். எத்தனையோ பத்திரிகைகளைப் பார்க்கறேன்: விதவித மான, அழகழகான டிரெஸ். விலைக்கு வாங்கறதானால் கட்டுப்படி ஆகுமா? அப்பா அம்மாதான் அந்தக் காஸ்ட்லி டிரெஸ்ஸையெல்லாம் வாங்கித் தருவாங் களா? நாமே கத்துக்கிட்டா என்னன்னு தோணுச்சு. அப்பாவைக் கேட்டேன். 'ஹோம் டிபார்ட்மெண்ட் அம்மாவைக் கேட்டுக்க'ன்னுட்டார். அம்மா உடனே சம்மதிச்சுட்டாங்க. வீட்டிலே கிழிஞ்சு போன துணிகளை அவசரத் தேவைக்காகத் தைக்கறதிலேயிருந்து புதுப் புது டிசைனா கற்பனை பண்ணி அழகழகான டிரெஸ் தைக்கற வரைக்கும் எவ்வளவோ செய்ய முடியும்னு எனக்குப் புது நம்பிக்கையும் தெம்பும் வந்திடுச்சு. கொஞ்சம் கொஞ்ச மாத் தையல் கத்துக்கிட்டு வீட்டுக்கு மட்டு மில்லாம, தோழிகளுக்கும் பிற உறவுக்காரங் களுக்கும் கூடத் தையல் உதவி செய்யலாம். எனக்கே மாடர்ன் டிரெஸ் போட்டுக்க ரொம்ப ஆசை. அதையும் நிறைவேத்திக்க லாம். என் அப்பா கேட்டார்: ''தையல் கலையிலே டிப்ளமா வாங்கப் போறியா?''

எனக்கு அதிலே அவ்வளவு ஆர்வமில்லே. டிப்ளமா வாங்கி டைலர் கடை வைக்கறது என் ஆசை இல்லே. நல்லா தையல் கலை யைக் கத்துக்கணும்; வீட்டுக்கும் தெரிஞ்ச வங்களுக்கும் உபயோகமா இருக்கணுங் கறதுதான் என் ஆசை.

பி. ஆர். திலீப்குமார்:

என் பெற்றோர் 'மலேஷியன் சோஷியல் சர்வீஸ்' என்ற பெயரில் ஒரு சமூக சேவை மையம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். அனாதை இல்லம், குழந்தைகளுக்கான காப்பகங்களை அந்த மையத்தின் ஆதரவில் நடத்திக்கிட்டு வர்றாங்க. என்னோட வெகேஷன்ல நான் தினமும் அந்தப் பகுதி களுக்குப் போய், ஆதரவற்ற குழந்தைகளு டன் விளையாடி அவர்களுடன் சந்தோஷ மாக இருந்தேன். தங்களுக்கு ஓர் ஆதரவு கிடைச்சதிலே அந்தக் குழந்தைகளுக்குத்தான் எவ்வளவு சந்தோஷம்! என் படிப்பை முடிச்சப்புறம் ஒரு நல்ல சமூக சேவகனா மாறணும்னு ஆசைப்படறேன். 'சமுதாயத் திலே யாருக்காவது எந்த வகையிலாவது உபயோகப்படறா மாதிரி வாழறதுதான் பிறவி எடுத்த பயன்'னு என் அப்பா அடிக்கடி சொல்லுவார். அவர் சொன்னது போலவே நான் உருவாகணும்னு ஆசைப்படறேன். இந்தப் பயிற்சி எனக்கு ரொம்பவும் ஹெல்ப் பண்ணும்னு நம்பறேன். இதனால ஆதர வற்ற குழந்தைகளுக்கு எப்படியெல்லாம் நாம உதவலாம்; உடல் ஊனமுற்றவர் களுக்கு எவ்வாறெல்லாம் நாம ஊன்று கோலாக இருக்க முடியும்னு எல்லாம் நான் நிறையக் கத்துக்கிட்டிருக்கேன்.





ஒய். ஆர். கீதா:

'லீவு நாள்ல ஏன் வேஸ்ட்டா பொழுதைக் கழிக்கறே? ஏதேனும் உபயோகமா நேரத்தை செலவிடக் கூடாதா?'ன்னு எங்க அம்மா கேட்ட போது, உடனே நான் கரண்டியைத் தூக்கிட்டேன். பயப்படாதீங்க; சமையல் செய்யக் கத்துக்கப் புறப்பட்டேன்னு சொல்ல வந்தேன். ரொம்ப நாளாகவே என் மனசுக்குள் ஒரு ஆசை. அம்மாவோட சமையலை எத்தனை நாள் ரசிச்சுச் சாப்பிட்டிருக்கோம்! அதே போல எத்தனையோ தரம் கேலியும் பண்ணியிருக்கோம். சுலபமா சமையலைப் பத்தி 'கமெண்ட்' அடிச்சுடலாம்; ஆனா அதை செஞ்சு பார்த்தாத்தான் அதன் அருமை தெரியும்னு யோசிச்சேன். இந்த வெகேஷன்ல சமையல் செய்யக் கத்துக்கப் போறேன்னு சொன்னதுமே அம்மாவுக்குக் கொஞ்சம் தயக்கம்தான்; அப்பாவுக்கோ, எவ்வளவு செலவாயிடுமோன்னு கவலை! ஆனா, அம்மா என் ஆர்வத்தைப் புரிஞ்சுக்கிட்டு எனக்குப் பக்கத்திலேயிருந்து சொல்லிக் கொடுக்கறாங்க. அம்மா மாதிரி எக்ஸ்பர்ட்டா ஆக முடியாட்டாலும் நிச்சயம் ஏ.கிளாஸ் காப்பி போடுவேன். என்னது, இன்ஸ்டன்ட் காப்பியா? இல்லே, ஃபில்டர் காப்பி. சுத்தமான காப்பி! தோசை வார்க்கவும் கத்துக்கிட்டிருக்கேன்!

இ. அரவிந்த்:

லீவிலே பொழுது போகாம பழைய புத்தகங்களைக் குடைஞ்சிக்கிட்டிருந்தேன். ஏதாச்சும் காமிக்ஸ் கிடைக்குமா, ஸ்டோரி புக்ஸ் கிடைக்குமான்னு தேடிப் பார்த்தேன். அப்போ, நான் அதுவரைக்கும் பார்த்திராத ஒரு புக் கெடச்சுது. அதுவும் நோட் புக். பிரிச்சுப் பார்த்தா, உள்ளே அழகழகா ஸ்டாம்ப் ஒட்டியிருந்திச்சு. வெவ்வேற கன்ட்ரி, விதவிதமான ஸ்டாம்ப்ஸ். இந்த நோட்புக் யாரோடது?

'என்னோடதுதான்டா. நான் ஸ்கூல் படிக்கும் போது சேகரிச்சது'ன்னு என் அம்மா சொன்னாங்க. 'அட!' ஆச்சரியப்பட்டேன். அவங்க ஹாபியை நான் கன்டினியூ பண்றேன். எனக்கு என்னோட சொந்தக்காரப் பெரியவங்க நிறையப் பேர் எனக்கு ஸ்டாம்ப் தந்து ஹெல்ப் பண்றாங்க.

இதிலே இன்னொரு அட்வான்டேஜும் இருக்கு அங்கிள். நான் கேள்விப்படாத பல ஆப்பிரிக்க நாடுகள், அராபிய நாடுகளைப் பத்தி இந்த ஸ்டாம்ப் மூலமா தெரிஞ்சுக்கிட்டேன். மேப்பிலே அந்தந்த நாடு எங்கே இருக்குதுன்னு தெரிஞ்சுக்கறேன். அது மட்டுமில்லே, அந்தந்த நாடுகள்ல என்னென்ன விசேஷம், தலைநகர் என்ன, மக்கள் தொகை என்னன்னு நிறைய சமாசாரங்களைப் பெரியவங்ககிட்டே கேட்டோ, வேறே புத்தகம் படிச்சோ தெரிஞ்சுக்கறேன்.

ஸ்டாம்ப் சேர்க்கற ஹாபி, வெறும் ஸ்டாம்ப் கலெக்ஷன் மட்டுமில்லே, பொது அறிவு கலெக்ஷனும் கூடதான்னு தெரிஞ்சுக்கிட்டேன்.

அங்கிள் ஒரு ரிக்வெஸ்ட், உங்ககிட்டே ஏதாச்சும் ஸ்டாம்ப் கிடைச்சா தர்றீங்களா?

படங்கள், பேட்டி: ரிபு சங்கர்.



தபால்தலை சேகரிப்பது எப்படி?

* எந்த ஒரு தபால்தலையும் முக்கியமானதே. நமக்கு அயல்நாட்டுத் தபால்தலை எப்படி அவசியமோ, அதேபோல், அயல் நாட்டினருக்கு நமது இந்தியத் தபால்தலைகள் பொக்கிஷம். அதனால், சர்வ சாதாரணமாக உங்களுக்குக் கிடைக்கும் நம் நாட்டுத் தபால்தலைகளை அலட்சியப்படுத்தாதீர்கள். கவனமாகப் பாதுகாத்து வாருங்கள்.

* எந்த ஒரு தபால்தலையையும் கையால் பிய்த்து எடுக்கவே கூடாது. துளையிடப்பட்ட கிழிப்பு மூலைகள் (பெர்ஃபோரேஷன்) கிழிந்துவிடும். அதனால், காகிதத்தோடு தபால்தலையைக் கத்தரித்து எடுத்து, நீரில் முக்கி, சில நிமிடங்கள் ஊற வைக்க வேண்டும். அதற்குப் பிறகு எடுத்தால் தானாகவே எளிதில் காகிதத்தைவிட்டு வந்துவிடும். பெரிய செய்தித்தாள்களில் இவற்றைப் பரத்திப் போட்டு, மேலே ஒரு பலகையையும் அழுத்தி வைத்துவிட்டால், ஈரம் போய்விடும்.

* எந்த ஒரு தபால்தலையையும் நேரடியாக ஆல்பத்தில் ஒட்டக்கூடாது. இதற்கான கடைகளில் 'ஹிஞ்சஸ்' என்று ஓர் ஒட்டுவால் விலைக்குக் கிடைக்கும். இது என்னவோ என்று மலைக்க வேண்டாம். ஒரு செ.மீ. அகலமும் இரண்டு செ. மீ. நீளமும் கொண்ட கோந்து தடவப்பட்ட, பட்டர் பேப்பரால் ஆன ஓர் ஒட்டுவால். இதை இரண்டாக மடித்து, ஒரு பகுதியைத் தபால்தலையில் ஒட்ட வேண்டும். இன்னொரு பகுதியை ஆல்பத்தில் ஒட்ட வேண்டும்.

ஏற்கெனவே ஆல்பத்தில் ஒட்டியிருக்கும் தபால்தலையை விட அதேபோல் இன்னொன்று நன்றாக, தெளிவாகக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். 'ஹிஞ்சஸ்' போட்டு ஒட்டியிருந்தால் பழையதை எளிதாக எடுத்துவிட்டுப் புதியதை மீண்டும் ஒட்டலாம்.

* தபால்தலைகள் மூன்று வகை:

1. அரசுப் பணிகளுக்கானவை (சர்வீஸ்) அடிக்கடி மாறாது.

2. நிரந்தரமானவை (டெபெனெட் சீரிஸ்) சில குறிப்பிட்ட ஆண்டுகள் வரை புழக்கத்தில் இருக்கும். பிறகு மாற்றப்படும்.

3. சிறப்புத் தபால்தலைகள் (கமெம்மரேடிவ் சீரிஸ்)

உலகெங்கும் தினமும் நூற்றுக்கணக்கில் சிறப்புத் தபால்தலைகள் வெளியாகின்றன. இவை எல்லாவற்றையும் சேகரிக்க மிகுந்த வசதி படைத்தவர்களால் மட்டுமே முடியும். அதனால் பெரும்பாலானவர்கள் ஏதாவது ஒரு வகை (தீமெமேடிக்)யை மட்டுமே சேகரித்து வருகிறார்கள்.

(உ-ம்) உலக நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒன்று:

* விலங்குகளில் ஏதாவது ஒன்று.
* பறவைகளில் ஏதாவது ஒன்று.
* பூச்சிகளில் ஏதாவது ஒன்று.
* அறிவியல் அறிஞர் வரிசை.
* எழுத்தாளர் வரிசை.

என்று இப்படி எவ்வளவோ கூறிக்கொண்டே போகலாம். அண்மையில் ஒருவர் 'கொலை செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள்' என்று கூட ஒரு தலைப்பில் தனிச் சேகரிப்பை வகைப்படுத்திக் காட்டினார்! எல்லாம் அவரவர் கற்பனை, ஆர்வம், வசதி ஆகியவற்றைப் பொறுத்தது.

* தபால்தலைகளைச் சேகரிக்க அயல்நாட்டு நண்பர்களின் உதவி தேவை. நீங்களே நாலைந்து பேராகச் சேர்ந்து கொள்ளலாம். ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கடையில் பலவகை கலந்த 'அசார்டெட்' பாக்கெட் ஒன்றை வாங்கி, டூப்ளிகேட்டை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளலாம். மீதி உள்ள தபால்தலைகளை அயல்நாடுகளில் உள்ள



நண்பர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் 'தியமெடிக் கலெக்ஷன்' ஒரே மாதிரி இருக்கக் கூடாது. உதாரணமாக 5 பேர் ஒரு குழுவாகச் சேர்ந்து செயல்பட்டால், பட்டாம்பூச்சியைப் பற்றிச் சேகரிப்பவர் ஒருவராக மட்டுமே இருக்க லாம். இப்படி இருந்தால்தான் பிரச்னை களுக்கு இடமிருக்காது.

* தொடக்கத்தில் அட்டை போடும் பழுப்புக் காகிதத்தால், அல்லது பழைய 'கிராப்' நோட் காகிதத்தில் ஆல்பம் தயா ரிக்கலாம். இரண்டு பக்கமும் ஒட்ட வேண் டுமானால் இடைக்காகிதம் (இண்டர் லீவ்ஸ்) விட வேண்டும். ஒவ்வொரு நாட்டுக் கும் ஒரு பக்கத்தை ஆரம்பத்தில் விடுங்கள். தைக்காமல் 'பஞ்ச்' பண்ணி 'ஃபைலில்' தொகுத்து வையுங்கள். கணிசமான அளவு சேர்ந்து விட்டால் பிறகு 'ஆல்பம் ஷீட்ஸ்' தனியாக வாங்கி அதற்கு மாற்றிக் கொள் ளுங்கள்.

* 'ஆல்பம் ஷீட்ஸ்' என்பவை உங்கள் 'கிராப் நோட்' காகிதங்கள் போன்றவையே. உலகெங்கும் இவை ஒரே அளவானவை. தரத்தில், விலையில் மாறுபட்டவை. ஜூனி யர்களுக்கான சேகரிப்புக்கு என்று கூறி னால் கடைக்காரர்களே மலிவு விலையி லான ஷீட்களைத் தருவார்கள். இவற்றிற்கு 'இண்டர்லீவ்ஸ்' என்ற இடைக்காகிதம் (பெரும்பாலும் பாலீஷ் செய்யப்பட்ட டிரே சிங் காகிதம்) போட வேண்டும்.

* கடைகளில் கிடைக்கும் அச்சிடப்பட்ட ஆல்பங்கள், எந்த நாட்டுத் தபால்தலை எப்படி இருக்கும் என்பதை உங்களுக்கு அறி விக்கத்தான். வளர்ந்தபிறகு இது பயன் படாது.

* ஒவ்வொரு தபால்தலை வெளியாகும் போதும் அந்த நாட்டு அரசு அந்தத் தபால் தலை வெளியாகும் முக்கியத்துவம், வெளி யாகும் நாள், மதிப்பு, உள் ஓவியம் அல்லது படத்தின் ஒரிஜினல் வண்ணம், அச்சடித்த முறை, எங்கு எவ்வளவு பிரதிகள் அச்சிடப் பட்டன, கிழிப்பதற்கான ஓட்டை வரிகளின் (பெர்ஃபோரேஷன்) அளவு, ஒரு ஷீட்டுக்கு எவ்வளவு தபால்தலைகள் போன்ற தொழில்நுட்ப விவரங்களடங்கிய ஒரு சிறப்பு மலரை (பப்ளிசிடி ஃபோல்டர்) வெளியிடுகிறது. இதில் அந்தத் தபால்தலை யின் அதே அளவான படமும் இருக்கும். இது, தபால்தலை வெளியாகும் போது கூடவே வெளியாகி, விலைக்குக் கிடைக்கும்.


* முக்கிய நாளிதழ்களில் தபால்தலை வெளியாகும் விவரங்கள் முன்னதாகவே தபால்தலையின் நேர்நகலோடு வெளியிடப் படுகின்றன. பெரிய நகரங்களின் (சென்னை, கோவை, மதுரை, திருச்சி) தலைமை அஞ்சல் நிலையங்களில் தபால் தலை சேகரிப்புப் பிரிவுகள் (ஃபிலாடெலிக் பீரோ) இயங்குகின்றன. இவர்களிடம் பதிவு செய்து கொண்டால், கட்டணம் ஏதுமின்றி, சிறப்பு மடலில் உள்ள விவரங்கள் எல்லாம் அடங்கிய ஓர் அறிவிப்பு, தபால்தலை வெளி யாவதற்கு முன்னதாக இலவசமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இதற்கு உதவி யாகச் சென்னை, திருச்சி, மதுரை, கோவை யில் இயங்கும் ஃபிலாடெலிக் அசோசியே ஷன்ஸ்'சில் உறுப்பினராகி, முன் பணம் செலுத்தினால், அவர்களே தபால்தலை வெளியானதும் வாங்கி நமக்கு அனுப்பி வைப்பார்கள்.

* உங்கள் சேகரிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து உங்களுக்குப் பெருமை தேடித்தர வேண்டும் என்றால் நண்பர்களின் உதவி மிகமிக முக்கியம். உங்கள் நண்பர்களின் விட்டுக் கொடுக்கும் குணம், உங்களது இணக்கமான போக்கு எல்லாம் இதற்குப் பேருதவியாக இருக்கும்.

— சேரநம்பி.

அட்டைப் படத்தில்: அரவிந்த்

வண்ணப்படம்: ராஜா பொன்சிங்.





மீதிக் கதை என்ன?

ஆசிரியர் கணக்கு விடைத்தாளுடன் உள்ளே வந்தார். ஒவ்வொரு மாணவனாக அழைத்து அவனுடைய மதிப்பெண்ணைக் கூறி விடைத்தாளை அளித்தார். எல்லோருடைய விடைத்தாளையும் கொடுத்தாகிவிட்டது, மாதவனுடையதைத் தவிர.

''மாதவா,'' என்று அழைத்த ஆசிரியர், ''நீ நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கிறாய். முதல் மார்க் உன்னுடையதுதான். உனக்கு அடுத்தபடியாகக் குமார், எண்பத்தொன்பது வாங்கியிருக்கிறான். ராமானுஜம் நினைவு அறக்கட்டளையின் முதல் பரிசு ரூபாய் ஐந்நூறும் உனக்குத்தான். இரண்டாவது பரிசு ரூபாய் இருநூறு குமாருக்கு. எனது பாராட்டுக்கள்,'' என்று கையைக் குலுக்கி வாழ்த்தைத் தெரிவித்தார்.

மாணவர்கள் மகிழ்ச்சியோடு எழுப்பிய கரவொலி வகுப்பறையைக் கிடுகிடுக்கவைத்தது. ஆசிரியர் கொடுத்த விடைத்தாளைக் கூட மாதவனால் பிரித்துப் பார்க்க முடியவில்லை. நண்பர்களின் அன்புத் தொல்லைகள்.

இரவு சாப்பிட்டதும் அமைதியாக விடைத்தாளைப் பிரித்துப் பார்த்தான். ஆசிரியர், பல இடங்களில் 'நன்றாகச் செய்யப்பட்டுள்ளது' என்று எழுதியிருந்தார். மாதவன், மார்ஜினில் சிவப்பு மையால் போடப்பட்டிருந்த மதிப்பெண்களைக் கூட்டிப் பார்த்தான். அவனுக்குத் திகைப்பாக இருந்தது. மறுபடியும் கூட்டினான். எண்பதுதான் வந்தது! மூன்றாவது முறை, நாலாவது முறை கூட்டினான். அதே எண்பதுதான்! ஆனால் வெளிப் பக்கத்தில் நூற்றுக்கு நூறு என்று எழுதப்பட்டு ஆசிரியரது சுருக்கொப்பமும் இருந்தது.

ஆக, அவன் வாங்கியிருப்பது எண்பதுதான். ஆனால் ஆசிரியரோ கவனக் குறைவாக அதை நூறு என்று கணக்கெடுத்துக்கொண்டு, முதல் பரிசு என்று இராமானுஜம் நினைவுப் பரிசு ஐந்நூறு ரூபாயையும் அறிவித்து விட்டார்!

கவனக் குறைவால் ஏற்பட்ட ஒரு தவறு. அவனுக்குத் தகுதி இல்லாத ஒரு பரிசுக்கு அவனைத் தேர்ந்தெடுத்து விட்டது.

இனி உங்கள் கற்பனையை ஓடவிடுங்கள். கதையை இருபது வரிக்குள் முடித்து, கீழுள்ள கூப்பனோடு, 20.6.90க்குள் ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். நல்ல முடிவுகளுக்குக் கட்டாயம் பரிசு உண்டு. பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும்.

கோகுலம் — மீதிக் கதை என்ன?

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

....

பின்கோடு : ....



மாயச் சுவர்

(வாண்டு மாமா — பக். 112 — ரூ. 10 — வானதி பதிப்பகம்.)

'நம் சிறுவர்கள் தைரியசாலிகளாய் வளர வேண்டும். அதற்குத் துப்பாக்கிக் கதைகள் எழுதுவதில் தப்பில்லை,'' என்று தமிழ்வாணன் அவர்கள் ஆரம்பித்த போது அந்த நாளில் குழந்தை எழுத்தாளர்கள் பலர் எதிர்த்தார்கள்.

இன்று, 'பேய்க் கதைகளைக் கூறக் கூடாது. குழந்தைகளுக்கு என்பது மற்றொரு சாராரின் வாதம்' என்று முன்னுரையில் சொல்லி ஆவி, பேய், ரத்தக் காட்டேரி சம்பந்தப்பட்ட பதினோரு கதைகளைத் தொகுத்தளித்திருக்கிறார் ஆசிரியர் வாண்டு மாமா. அவரே சொல்வது போல், 'இத்தொகுப்பில் உள்ள பதினோரு கதைகள் உங்கள் இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்யும்.' இந்தத் 'திகில் கதைகள்' கூடச் சிறுவர் இலக்கியத்துக்குத் தேவைதான் என்று தோன்றுகிறது. 'அஞ்சி அஞ்சி சாவார், இவர் அஞ்சாத பேரில்லை அவனியிலே,' என்று பாரதியார் கேலி செய்வதிலிருந்து மீளுவதற்காகவேனும் நெஞ்சுரம் பெறுவதற்கு இந்த மாதிரிக் கதைகளைப் படிக்கலாம். ஆனால் ஒன்று. பூச்சி பொட்டுகளைக் கண்டாலே பயந்து நடுங்கும் தம்பி தங்கைகள், 'இது வெறும் கதைதான்; உண்மையில் நடந்ததல்ல' என்று முதலில் நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு அப்புறம் படிக்க வேண்டும்.

பிறந்த பூமி

(கொ. மா. கோதண்டம் — பக். 104 — ரூ. 9 — இரண்டு நூல்களும்: வானதி பதிப்பகம் 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை — 600 017.)

'உலகத்திலேயே மிகவும் அழகான இடங்கள் மலையும் வனங்களும் ஆகும்' — இது குறிஞ்சிச் செல்வர் கொ. மா. கோதண்டத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை. அனுமானமோ, கற்பனையோ அல்லாமல் அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று, கண்டு, கேட்டு, ரசித்து அனுபவித்த உண்மைகளின் அடிப்படையில் உருவான 13 கதைகளின் தொகுப்பு இந்தப் பிறந்த பூமி. கதைகளில் விலங்குகளின் உரையாடல்களைக் கேட்கலாம்; அவற்றின் மனத்து நினைவுகளைப் புரிந்து கொள்ளலாம். உங்களுக்கெல்லாம் நன்கு அறிமுகமான ஆதிவாசிச் சிறுவன் நீலனுடன் தோழமை கொண்டு அவன் எடுத்துக்காட்டும் காட்டின் இயற்கை எழிலை அறிவியல் உண்மைகளை அறிந்து பெறும் புதுப் புது அனுபவங்களில் சிலிர்த்துப் போகலாம்.

ராஜாவின் ரோஜா

(டாக்டர் கு. கணேசன் — பக். 82. ரூ. 8 — கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.)

நோய் நாடி நோய் முதல் நாடி, அது தீர்க்கும் வகை நாடிச் சொல்ல மட்டும்தான் உங்கள் டாக்டர் கு. கணேசனுக்குத் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அழகழகான கதைகள் சொல்லவும் அறிந்தவர் அவர் என்பதை இந்தக் கதைத் தொகுப்பைப் படித்தால் நீங்கள் நிச்சயம் ஒப்புக் கொள்வீர்கள். இவருடைய கதைகளில் 'படிப்பினை' சொல்லாத கதைகளைப் பார்க்க முடியாது. ஒவ்வொன்றிலும் உண்மையொளி வீசுவதால், இதில் இடம் பெறும் பாத்திரங்கள் ஒன்று நமக்கு ரொம்ப நெருக்கமானவர்கள் போலவோ, அல்லது எங்கோ, எப்போதோ பார்த்தவர்கள் போலவோ, தோன்றுகிறார்கள். அதனால் கதாபாத்திரங்களோடு நாம் ரொம்ப ஒட்டிக் கொண்டு விடுகிறோம். இதில் உள்ள ஒன்பது கதைகளில் இவர் தம்மையே வைத்து எழுதியிருக்கும் இரண்டு கதைகள் டாப்.

வாழ்க வளர்மதி

(ராஜலட்சுமி சுப்பிரமணியம் — பக். 64 — ரூ. 6 — அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளைத் தெரு, வ. உ. சி. நகர், வேலூர் — 632 001.)

படிக்க ஆரம்பித்தால் முடித்துவிட்டுத்தான் வைக்கலாம் என்கிற மாதிரி ஒரு விறுவிறுப்பான துப்பறியும் நாவலை ஒரு சிறுமியைக் கதாநாயகியாய் வைத்துச் சிறுவர்களுக்காக எழுத முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ராஜலட்சுமி சுப்பிரமணியம். அட அட! வளர்மதி என்ற பெரிய இடத்துப் பெண் கடத்தப்பட்ட பிறகு, அவள்தான் எத்தனை துணிச்சலும் புத்திசாலித்தனமும் காட்டி, கடத்தல் பேர்வழிகளைக் காவலரிடம் பிடித்துக் கொடுக்கிறாள்! அந்த அனுபவத்தில் அவள் சிறுவர் சிறுமியர்க்கு, பெற்றோர் பெரியோருக்கு, இந்தச் சமுதாயத்துக்குப் போதிக்கும் படிப்பினைகள் மிகவும் பயனுள்ளவை. உணர்ந்து புரிந்து கொள்ளத் தக்கவை. படித்துப் பயன் பெறலாம்.

மூக்குக் கண்ணாடியைத் தெரியுமா?

சித்திரம்: ஆழி

சேர நம்பி


பார்வைக் குறைவுகளை நிவர்த்தி செய்து கொள்ள மூக்குக் கண்ணாடி அணிவது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. 'இது எப்படித் தோன்றியது?', 'இதை யார்- எங்கு- எந்த ஆண்டு கண்டு பிடித்தார்கள்?' என்ற வினாக்களுக்கு ஒரே வரியில் பதிலளிப்பது கடினமாகும். மூக்குக்கண்ணாடி காலப் போக்கில் பல மாறுதல் களைப் பெற்று இன்றுள்ள வடிவை அடைந்துள்ளது.




தனக்கடியில் வைக்கப்படும் பொருள்களின் உருவைப் பெருக் கிக் காட்டும் தன்மை, நடுவில் குவிந்த கண்ணாடிக்கு உண்டு என்பதை சீன, கிரேக்க, சுமேரிய மக்கள் அறிந்திருந்த னர். அதனால் நடுவில் குழி வான கண்ணாடித் தட்டில் நீரை நிரப்பி, ஒரு படம் அல்லது எழுத்தின் மேல் அதை வைத்து எளிதாகப் படித்தார்கள்.



அறிவில் சிறந்த சிலர், தட்டையான சிறு கண்-ணாடிப் பெட்டியைத் தயார் செய்து, அதில் நீரை நிரப்பி, மூடி, 'சீல்' வைத்து எளிதாக, பாதுகாப்போடு பயன் படுத்திக் கொண்டனர். இந்த நீர்க் கண்ணாடியையே இன்றைய மூக்குக் கண்ணாடியின் முன்னோடி எனலாம். இது 4000 ஆண்டுகளுக்கு முன்பு ரோம் நாட்டில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. சாஸ்டன் என்ற மன்னன் மதநூல்களைப் படிக்க இதைப் பயன்படுத்தினான். இந்தவகைக் கண்ணாடிகளைச் சீனமக்கள் சர்வ சாதாரண மாகப் பயன்படுத்தியதை 'மார்க்கோ போலோ' குறிப்பிடுகிறார்.




இந்தவகைக் கண்ணாடியை உருண்டை வடிவில் செய்து மோதிரத்தில் பதித்துக் கொண்டு பயன் படுத்தினான் ரோம் நாட்டு நீரோ மன்னன்.



இந்த நீர்க்கண்ணாடியின் அடிப்படையி லேயே தடிப்பான கண்ணாடித் துண்டு களைப் பெரிதாக வெட்டிப் படிக்க வேண் டிய பொருள்கள் மீது வைத்துப் பெரிதாகத் தெரியும்படி செய்து கொண்டார்கள் சீனர் கள். 'மேக்னி∴பையிங் கிளாஸ்' என்னும் இதுவே மூக்குக் கண்ணாடியின் முன்னோடி. இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இது பயன்பட்டு வந்தது.


இந்தத் தட்டையான நீர்க்கண்ணாடியைச் சீன மக்கள் 'Y' வடிவக் கவண்டு மரக் குச்சியில் பதியவைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாக இது எளிதில் எங்கும் எடுத்துச் செல்லப்பட்டது!





வளைந்த மெல்லிய மூங்கில் பட்டைகளைக் கொண்டு சட்டமோ வட்டமோ செய்து, அதில் கண்ணாடியைப் பதிய வைத்துத் தேன் மெழுகால் இறுக்கிக்கொண்டு நெற்றிக்கு மேல் கயிற்றைக் கட்டி, அதில் இதைத் தொங்க விட்டுக் கொண்டனர். தேவைப்பட்ட போது எடுத்துப் படிக்கப் பயன்படுத்தினர். சீனர்கள் மட்டும் இதற்கு 'ராஸ் கிரிஸ்டல்' என்ற வகைக் கற்களைப் பயன்படுத்தினர். ஒரே ஒரு கண்ணாடியை வைத்துக் கொண்டு இருகண்களாலும் பார்வையைச் செலுத்திப் படித்தனர்.

1260-ஆம் ஆண்டில் பிரான்சைச் சேர்ந்த 'வில்லியம் ருப்ருக்' என்பவர் மங்கோலியாவில் தான் பயணம் செய்தபோது, மக்கள் இரு கண்களையும் மூடக்கூடிய கண்ணாடியை அணிந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். இவையும் மரக் குச்சிகளிலேயே பதிக்கப்பட்டு நெற்றியிலிருந்து தொங்க விடப் பட்டிருந்தன என்றும் குறிப்பிடுகிறார்.



மறுப்பு ஏதுமின்றி ஒப்புக்கொள்ளக்கூடிய சான்று 1317-இல் கிடைத்துள்ளது. இத்தாலியில் உள்ள கல்லறை ஒன்றில், 'மூக்குக் கண்ணாடியை முதன் முதலில் கண்டுபிடித்த 'டி ஆர்மேடா பிளாரென்ஸ்' இங்குதான் உறங்குகிறார். இறைவனே, இவர் பாவங்களுக்கான தண்டனையைத் தந்து இவரது பாவங்களை மன்னிக்கவும்' என்று எழுதியுள்ளது. வரலாற்று அடிப்படையில் 'மூக்குக் கண்ணாடி' என்ற சொல்லை முதலில் பயன்படுத்தப் பட்டது இந்தக் கல்லறையில்தான்!

டி ஆர்மேடா பிளாரென்ஸ் கண்டுபிடித்த மூக்குக்கண்ணாடி பிரபலமடையாமல் போனதற்கு மதவாதிகளே காரணம். பார்வைக் குறைவு என்பது செய்த பாவங்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட தண்டனையாகும்; அதை நிவர்த்தி செய்ய எடுக்கும் முயற்சிகள் யாவும் இறைவனுக்குக் கோபத்தை வரவழைப்பவை என்ற நம்பிக்கை அந்த நூற்றாண்டில் ஐரோப்பா எங்கிலும் பரவியிருந்தது.




ஆயினும், டி ஆர்மேடா பிளாரென்ஸ் கண்டுபிடிப்பின் செய்தி, வெனிஸ் வாயிலாக ஜெர்மனிக்குப் பரவியது. 1386-ஆம் ஆண்டில் ஜெர்மனியப் பிரபுக்களில் ஒருவரான 'சாசர்' மூக்குக் கண்ணாடியைச் செய்து கொண்டு, அதைத் துணிவாக வெளியில் அணிந்து கொண்டும் உலாவினார். அரசாங்கத்தின் செல்வாக்கு மிகுந்த இவரே, உலகின் முதல் மூக்குக்கண்ணாடி அணிந்த மனிதர். இவரைப் பின்பற்றி எல்லோரும் மூக்குக் கண்ணாடி அணியத் தொடங்கினர்.



போப்பாண்டவர் நாலாவது கிளமெண்டசுக்கு சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட காணிக்கைப் பொருட்களில் மூக்குக் கண்ணாடியும் இடம் பெற்றிருந்தது!

16-ஆம் நூற்றாண்டில் இத்தாலிய டாக்டர் 'ஜியாம் பட்டிஸ்தா டெல்லா போர்டா,' லென்ஸ் பற்றிய சில அடிப்படைத் தகவல்களை எழுதி வைத்தார்.

'டாக்டர் ஜியாம் பட்டிஸ்தா டெல்லா போர்டா' எழுதி வைத்ததை மேலும் விரிவு படுத்தி 1604 - ஆம் ஆண்டில் ஜோனஸ் கல்பர், கண்ணாடி களைப் பற்றித் தெளிவான வழிகாட்டி நூல் ஒன்றைப் பதிப்பித்தார். கண்பார்வை பற்றியும், குறைபாடுகளை நீக்கிக் கொள்ளக் கண்ணாடி அணிவதைப் பற்றியும் உலகில் முதன் முதலில் வெளியான நூல் இதுதான்.




தொடக்ககால மூக்குக் கண்ணாடி பிரேம்கள் அரை வட்ட வடிவில் செய்யப்பட்டன. கண்ணாடியின் மேல் பகுதி வளைவு வெறுமே இருக்கும். ஆரம்பத்தில் மரக்குச்சிகளால் ஆன பிரேம்கள், நாளடைவில் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், இரும்பு ஆகிய வற்றாலும் செய்யப்பட்டன. ஆமை ஓடுகளாலும் செய்யப்பட்டன.



'பிளாஸ்டிக்' கண்டுபிடிக்கப்படும் வரை, பிரேம்கள் 'சிலலாய்டு' என்ற ஒரு மெல்லிய பொருளாலும் கூடச் செய்யப்பட்டன. இப்பொழுதெல்லாம் 'ஷெல்', 'சன் அமைக்கா', என்றழைக்கப்படும் பலவகைப் பொருட்களால் கண்கவர் வண்ணங்களில் உருவாக்கப்படுகின்றன.

தொடக்க காலத்தில் பார்வைக் கண்ணாடிகள், சாதாரணக் கண்ணாடிகளைக் குவித்தோ, குழித்தோ தேய்த்துச் செய்யப்பட்டன. கண் வைத்தியத்திற்கென தனிக் கல்விமுறை 1860 - ஆம் ஆண்டுகளில் அறிமுகப் படுத்தப் பட்டது. இதில் தேறி பட்டம் பெற்றவர்கள் மட்டுமே கண்வைத்தியம் செய்து தேவையான 'பவர்' உள்ள கண்ணாடியைப் பரிந்துரைக்கலாம் என்ற சட்டமும் இங்கிலாந்தில் கொண்டு வரப்பட்டது.




கிட்டப் பார்வை (ஷார்ட் சைட்) உள்ளவர்கள் கான்கேவ் (குழிந்த) லென்ஸையும்



தூரப் பார்வை (லாங் சைட்) உள்ளவர்கள் கான்வெக்ஸ் (குவிந்த) லென்ஸையும் அணிகிறார்கள்.

இன்று நாம் காணும் 'சைட் டெஸ்டிங் போர்டு' இங்கிலாந்து கண் மருத்துவர்களால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிமுகம் செய்து வைக்கப் பட்டது.



ஒருவருக்குத் தூரப் பார்வையோடு கிட்டப் பார்வையும் இருந்தால், இரண்டு தனித்தனிக் கண்ணாடிகளை அணியும் வழக்கத்தை மாற்றி, ஒரே கண்ணாடியில் இரு பகுதிகளையும் இணைத்து 1760 - இல் ஒரு மாற்றம் செய்தார் பெஞ்சமின் பிராங்கிளின்.



மூக்குக் கண்ணாடி அணியாமலே, மூக்குக் கண்ணாடி அணியும் பயனைப் பெற முடியுமா என்று நிபுணர்கள் ஆராய்ந்தார்கள். 1938 - ஆம் ஆண்டு, முதல் பிளாஸ்டிக் ஸ்கேரல் கான்டேக்ட் லென்ஸை அமெரிக்காவின் டி. ஓப்ரிக், எப். முல்லர் ஆகிய இருவரும் அறிமுகப் படுத்தினர். கண்ணாடியைப் பிரேமில் போட்டுக் கொள்ளாது, கண்ணுக் குள்ளேயே பதிய வைத்துக் கொள்ளும் முறை இது. இதற்கென சருகுகளைப் போன்ற மெல்லிய பிளாஸ்டிக் கண்ணாடிகள் தயாரிக்கப் பட்டன!

இந்த பிளாஸ்டிக் ஸ்கேரல் காண்டேக்ட் லென்ஸ் முறையில் செயற்கைக் கண்ணீர் கொடுக்கும்படி இருந்தது. இதில் மேலும் மாற்றம் செய்து 1948-ஆண்டில், அமெரிக்க டாக்டர் 'கெவின் டூறயால்' 'கோர்னியல் காண்டேக்ட் லென்சை' அறிமுகப் படுத்தினார். இதற்குச் செயற்கைக் கண்ணீர் தேவையில்லை. உறுத்தலும் இல்லை.



காண்டேக்ட் லென்ஸ்கள் அறிமுகமாவதற்கு முன்னதாக உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியனார்டோ டாவின்ஸ் 1508-இல் தன்னுடைய ஓவியங்கள் சிலவற்றில் கண்களின் வெள்ளைப் பகுதியை மட்டுமே மூடவல்ல ஓர் உத்தியைக் கையாண்டு இந்த முயற்சிக்கு உருக் கொடுத்துள்ளார்.

வாகனங்களை ஓட்டிச் செல்லுவோருக்கு எதிரே வரும் வாகனங்களின் விளக்கால் கண்கள் கூசாமல் இருக்க அண்மையில் 'ஆண்டி ரிப்ளேக்ஷன்' மூக்குக் கண்ணாடி ஒன்று அறிமுகமாகியுள்ளது. இது வாகன விபத்துக்களைத் தடுக்க உதவுமாம்.

மூக்குக் கண்ணாடிகள் இப்படியும் இருந்தன:



16-ஆம் நூற்றாண்டு




19-ஆம் நூற்றாண்டு



19-ஆம் நூற்றாண்டு கடைசி

காண்டாமிருகங்களின் பார்வைக் குறைவைச் சரிசெய்யக் கடினமான பிரேமுடன் கூடிய ஒரு 'ஸ்பெஷல்' கண்ணாடியைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்களாம்!



ஜெர்மனியில், பார்வை பழுதுபட்ட காவல் பருந்து ஒன்றுக்கு அதன் எஜமானர் அருமையான மூக்குக் கண்ணாடியைச் செய்து போட்டிருக்கிறார்!



பொழுது போக்குகளை உதறித் தள்





பேரளம் புகழ்மதி

எந்நாளும் நெஞ்சில் நீங்காத இடம்பெற்ற என்னுயிர் எழிலே, இனிய நிலவே, இளந்தளிரே!

இதுவரை உனக்கு நான் சுட்டிக் காட்டிய தடைகள் அனைத்தும் உனது நேரடியான பகைவர்கள். சற்று எச்சரிக்கையாக இருந்தால் அவர்களை வெகு எளிதில் இனம் கண்டு விரட்டியடித்து விடலாம். ஆனால் மற்றொரு வகையான தடை ஒன்று உள்ளது. அத்தடை உனக்கு எதிரியாகத் தோற்றமளிக்காது; உன்னுடைய தோழன் போல அது வேடமிட்டுக் கொண்டு வரும். உன் உயிர் காக்கும் நண்பன் போல, உனக்கு ஊக்கம் தருகின்ற டானிக்போல தன்னை அலங்கரித்துக் கொண்டு 'மாரிச மான்' போல உன்னை மயக்க வரும்.


நில்! கவனி! புறப்படு! 6

அதன் பெயர்தான் பொழுது போக்கு. 'பொழுது போக்கு' என்ற போர்வையிலே உன்னுடைய பொறிகள் ஐந்தையும் தானே குத்தகை எடுத்துக் கொண்டு உன் பொன்னான எதிர்காலத்தைப் பாழடிக்கும்.

'பாடங்களை நன்கு படிக்க வேண்டும்; நூற்றுக்கு 95 மதிப்பெண்கள் பெறும் வகையில் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்' என்ற உன் சபதத்தையெல்லாம் சப்தமே இல்லாமல் உடைத்தெறிந்து விட்டுத் தன் சபலக் கோட்டைக்கு உன்னைப் பொழுது போக்குகள் அழைத்துச் சென்று விடும்; சில நேரங்களில் இழுத்தும் சென்று விடும்.

எனவே நீ பகைவனாகவே தோற்றமளித்த மற்ற தடைகளை விட உறவினனாகத் தோற்றமளிக்கும் இந்தத் தடை மீது மிகுந்த எச்சரிக்கையோடு இரு! மேலும் ஓர் ஆபத்தான விஷயம்! இந்தத் தடை உன் பெற்றோரின் ஆசிர்வாதத்துடனேயே — அவர்களின் அரவணைப்புடனேயே உன்னை ஆக்கிரமிக்கும். உன்னுடைய பெற்றோர் தங்களை அறியாமல் இந்தப் பொழுதுபோக்குகளை உங்கள் மீது திணித்து விடுவார்கள். சுருக்கமாகச் சொன்னால், பெற்றோர்தான் இதற்கு மூல வேர்.

இவை நம்மை நோக்கி மூன்று வடி



வங்களில் வருகின்றன. அவை:

1. தேவையற்ற பொழுதுபோக்கின் படைத்தளங்கள்!

2. திகட்டுகின்ற திருவிழாக்களின் நடைமுறைகள்!

3. திணறடிக்கும் உறவினர்களின் வழிமுறைகள்!

முதல் வடிவம் இருக்கிறதே, அது எப்பொழுதும் தன்னைப் பகட்டான விதத்தில் அலங்கரித்து வரும். பளபளப்பான புனித அழகு போலத் தன்னை அது வேடமிட்டு மறைக்கும்.

இரண்டாவது வடிவம் இருக்கிறதே, அது எப்பொழுதும் பக்தி மயமாகத் தன்னை அலங்கரித்து வந்து நம்மை ஏமாற்றும்.

மூன்றாவது வடிவம் இருக்கிறதே, அது எப்பொழுதும் தன்னைப் பாச மயமாக அலங்கரித்து வந்து நம்மை ஏமாற்றும்.

முதல் வடிவத்தை இப்பொழுது பார்ப்போம். தேவையற்ற பொழுதுபோக்கின் படைத்தளங்கள். இவை இரு வகையில் இன்று எங்கும் பிரபலமாக விளங்குகின்றன. கிராமப்புறங்களில் தெருக்கூத்து, நாடகம், எரிந்த கட்சி — எரியாத கட்சி பாட்டுகள், வில்லுப் பாட்டு, பொம்மலாட்டம், கிராமபோன், கேசட் ரிகார்டுகள் இப்படிப் பளபளப்பான போர்வையைத் தங்களுக்குள் போர்த்திக் கொண்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் வீடியோக்கள், டி.வி.க்கள், டு—இன்—ஒன்கள், ஏ.ஸி. தியேட்டர்கள், பொழுதுபோக்குக் கண்காட்சிகள், சர்க்கஸ்கள், திரைப்படங்கள் எனப் பல்வேறு பளபளப்புகளில் 'புனிதமான திறமைகள்' என்ற போர்வைகளில் தங்களை மறைத்துக் கொண்டு வரும். 'புனிதமான திறமைகள்' என்ற போர்வையில் புழுதிமயமான குப்பைகளை நம் உள்ளத்தில் அவை நிலைநிறுத்தும். காந்தியடிகள் கண்ட 'அரிச்சந்திரன்' அவரை 'மகான்' ஆக்கியது போல நம்மையும் இந்த நாடகம் நல்வழிக்குக் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையோடு நாம் காண்கின்ற நாடகங்கள், தெருக்கூத்துகள், வில்லுப்பாட்டுகள் நம் உயர்ந்த இலட்சியங்களையே கொன்று வீழ்த்தி, கீழ்த்தரமான ஆசைகளை நம் நெஞ்சில் ஏற்றி வைத்து விடும். இவை போன்று ஒவ்வொரு பொழுதுபோக்கும் 'சிறந்த திறமை' என்ற அடிப்படையில் சீர்குலைவான எண்ணங்களை' நம் எண்ணத்தில் செதுக்கி விடும்.

இவை பெற்றோரின் ஆசிகளுடனே நடக்கின்றன. நம்மைத் தாங்கள் பார்க்கும் திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்வதும், அது குறித்து அக்கம் பக்கத்தாரோடு தங்கள் அடிக்கின்ற அரட்டைகளில் தங்கள் குழந்தைகளையும் பங்கெடுக்கும்படி செய்வதும் சர்வசாதாரணமாக நம் வீடுகளில் நடக்கின்றன. அவைதான் வாழ்க்கை என்பது போலவும் அந்தப்

பொழுதுபோக்கு இல்லையென்றால் வாழ்க்கையே சுடுகாடாகி விடும் என்பது போலவும் இன்று நம் வீடுகள் ஆகி வருகின்றன. "கணேஷ், இந்தப் படத்தில் இந்த நடிகர் நடிப்பாரே, அது போல் மாமாவுக்கு நடித்துக்காட்டு," "ஆஷா, அந்தச் சினிமாவில் வருகின்ற அந்தப் பாட்டை அப்படியே டான்ஸ் ஆடிக் காட்டு. அத்தையை அப்படியே அசத்திடணும்." இது போன்ற பேச்சுக்கள் நம் வீடுகளில் இன்று சர்வசாதாரணமாகி விட்டன.

இன்னும் சொல்லப் போனால் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நர்சரி ஸ்கூல் பள்ளிகளின் ஆண்டு விழாவிலும் சின்னச் சின்ன அரும்புகளாகிய உங்களுக்குக் குமட்டுகின்ற பாடல்கள் கொண்ட டான்ஸ்களில் பயிற்சி தந்து அரங்கேற்றுகிறார்கள். உங்களுக்கே இயல்பாக எழக்கூடிய தெய்வ பக்தி, தேச பக்தி, பெரியோர்கள் மீது கொள்ளும் பக்தி ஆகிய துறைகளில் உரிய முயற்சி எடுத்து அதற்கேற்ற வகையில் பாடல்களையும், நாடகங்களையும் அமைக்காமல், ஆண்டு விழாவில் கலந்து கொள்கின்ற பெரியவர்களின் ரசனைக்கேற்ற வகையில் — அவர்கள் கை தட்டலைப் பெறும் வகையில் — அவர்களின் பொழுதுபோக்கிற்காக உங்கள் நெஞ்சங்களில் கீழ்த்தரத்தைப் புகுத்தி விடுகிறார்கள்.



நகரப்புறங்களில் காணப்படும் டீ.வி.களில் நாடகங்கள், திரைப் படங்கள், ஒளியும் ஒலியும் போன்ற பொழுதுபோக்குகளுக்கு உங்களையும் நடு மையத்தில் உட்கார வைத்துக் கொண்டு உங்களோடும் அதில் வருகின்ற காட்சிகள் பற்றியும் நடிகர் நடிகைகள் பற்றியும் அரட்டையடித்துக் கொண்டிருக்கிற பெற்றோர் நாட்டில் ஏராளம். டீ.வி.யில் வருகின்ற அறிவியல் நிகழ்ச்சிகளை, கதாகாலட்சேபங்களை, சிறந்த இசைக் கச்சேரிகளைப் பற்றி எத்தனை பெற்றோர் உங்களோடு கலந்து பேசி பொழுதைப் பயனுள்ள வகையில் செலவழித்துள்ளார்கள்? கணக்கெடுத்துப் பாருங்கள்; ஒன்றிரண்டுதான் தேறும்.

குறிப்பாக, சில ஆண்டுகளாகக் கிரிக்கெட் நேர்முக ஒளி பரப்பு, ஒலி பரப்பு என்ற பெயரில் டீ.வி.யினாலும் வானொலியினாலும் கிராமத்திலும், நகரத்திலும் வாழுகின்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களின், பெரியவர்களின் விலைமதிப்பில்லா நேரங்கள் வீணடிக்கப்பட்டு வருகின்றன. ஆற்றல் மிக்க வழிகளில் செலவழிக்கப்பட வேண்டிய சிறுவர்களின் மதிப்பு வாய்ந்த மணிகள் அரட்டைத் தனமாக, கிரிக்கெட் பொழுதுபோக்குக்காக அர்ப்பணிக்கப்படுவதைக் காண்கையில் நெஞ்சில் இரத்தக் கண்ணீர் பெருகுகிறது. நல்லதொரு

விளையாட்டுத்தான் என்றாலும் நாள் முழுக்க விளையாட்டு வர்ணனையை நாடு முழுக்கக் கேட்டபடி நாட்களை நகர்த்துவது நாகரிகமான ஒன்றா?

ஜப்பானின் சுறுசுறுப்பைப் பற்றி மெத்தவும் புகழ்கின்ற நாம் நித்தமும் வானொலிப் பெட்டியருகிலேயே நேரத்தை ஓட்டுவது வெட்கமும் வேதனையும் தருகின்ற ஒன்று. அதிலும் இதில் கொடுமையான விஷயம் என்னவென்றால், 'என் பையன் கிரிக்கெட் காமெண்ட்ரின்னா அந்தாண்ட இந்தாண்ட நகர மாட்டான்', எனப் பெற்றோரே பெருமையடித்துக் கொள்கின்ற பரிதாபம்தான்.

இனி இரண்டாவது வகை வடிவத்தைப் பார்ப்போம். இது 'பக்தி'யின் போர்வையைத் தனக்குப் போர்த்திக் கொண்டு நம் பொழுதை வீணாக்க வருகின்ற அரக்கனாகும்.

உனக்குத்தான் 'மெய்ப் பொருள் நாயனார்' கதை தெரியுமே. மெய்ப் பொருள் என்ற அரசரை வெல்லக் கருதிய முத்தி நாதன் என்ற பகைவன் அவரைப் பலமுறை போருக்கு அழைத்தான். போரிட்டான். தோற்றான். இறுதியாக முத்தி நாதன் ஒரு வழி கண்டான். மெய்ப்பொருள் நாயனாரை வீழ்த்தச் சிவனடியாராகச் சென்றால்தான் முடியும் என்று கருதி திருநீறு பூசி, 'மனத்தினில் கறுப்பு வைத்து' மெய்ப்பொருளைச் சந்தித்தான். அவர் தன்னைச் சிவனடியாராக எண்ணி வணங்குகின்ற பொழுது வாளைப் பாய்ச்சி அவரை வீழ்த்தினான்.

திகட்டுகின்ற திருவிழாக்களின் நடைமுறைகளும் இன்று இப்படித்தான் உள்ளன. நகரத்தின் மூலை முடுக்குகளில் ஏராளமாகப் பரவிக் கிடக்கின்ற மாரியம்மன், காளியம்மன், விநாயகர் போன்ற கோயில்களில்தான் எத்தனை எத்தனை விழாக்கள்! அடுக்கடுக்காக விழாக்களும், அர்த்தமற்ற சினிமாப் பாடல்களை அலற வைக்கும் ஒலிபெருக்கிகளும் அர்த்த ஜாமத்தையும் தாண்டி நடக்கின்ற நாடக, தெருக்கூத்து, வீடியோப் படங்களும் மாணவர்களாகிய உங்களின் படிப்புக்கு எத்தனை இடையூறுகளை எழுப்புகின்றன! அதிகாலை மூன்று மணிக்கே அலறத் தொடங்கிய ஒலிபெருக்கிகள் அர்த்த ஜாமம் வரை வாரி வழங்குகின்ற சினிமாப் பாட்டுகளினால் எத்தனை இளம் தளிர்களின் கவனங்கள் மாற்றப்படுகின்றன. கருத்தோடு படிப்போம் என உட்காரும் கண்மணிகளின் காதுகளில் இந்தக் கர்ணகடூர ஒலிபெருக்கிச் சத்தங்கள் விழத் தொடங்கினால் அவர்களால் எப்படிப் படிக்க முடியும்? இதைப் பற்றி எதிர்த்தும், பேச முடியாது. 'தெய்வீகமான விஷயம்; கோயில் விஷயம்' என்று பெரியவர்களிலிருந்து சிறியவர்கள் வரை பயப்படுகிற ஒன்று இது. திருநீறு பூசி வந்து வென்ற முத்தி நாதன் போல தெய்வீகப் போர்வையில் பெற்றோர் ஆசீர்வாதங்களோடு இளையதலைமுறையைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு முக்கியமான தடை இது. காசியில் நடைபெறுகின்ற ஆரவாரப் போக்குகள் பற்றிக் காந்தியடிகள் கூடக் கடுமையாகக் கண்டித்ததுண்டு. அந்த வகையில் ஆலயங்கள் என்ற போர்வையில் அரும்புகளை வீணாக்கி அவர்களின் அரிய நேரங்களைக் கொள்ளையடித்து விடுகிறது. இந்த விசேஷங்கள் நடக்கின்ற பொழுதெல்லாம் பெரும்பாலான சிறுவர்கள் பள்ளி செல்வதில்லை; பள்ளியில் மிகக் குறைந்த 'அட்டென்டன்ஸ்' தான் இருக்கும்; ஏதோ கொஞ்சம் ஒப்பேற்றி விட்டு ஐந்து பிரியட் என்று சொல்லி பனிரண்டு மணிக்கே மணியடித்து விடுவார்கள். இந்த நடைமுறைகளால் மாணவர்களின் உயிர்நாடியான தேசிய நேரங்கள் ஆயிரக்கணக்காக அங்கங்கே

''என்ன, கேட்டதை வாங்கிக் கொடுத்ததுக்காகவா உங்க பையன் அழறான்?''

''ஆமா. மினகா பஜ்ஜி கேட்டான். வாங்கிக் கொடுத்தேன்.''

— சா. இரா. மணி.



நாடு முழுக்க வீணாகிக் கொண்டிருக்கின்றன.

இனி மூன்றாவது வடிவத்தைப் பார்ப்போம்: திணறடிக்கும் உறவினர்களின் வழிமுறைகள்: மாமா வருவார் ஊரிலிருந்து. அவர் வீட்டுக் கிரகப்பிரவேசத்திற்காகப் பெற்றோரை அழைப்பார். இன்னும் நான்கு நாள் கழித்து நடக்கப் போகின்ற அந்த விழாவுக்குக் குழந்தைகளை, சிறுவர்களை அன்றே அழைத்துச் சென்று விடுவார். ''என்ன நம் வீட்டு விசேஷத்திற்கு நம் குழந்தைகள் இல்லாமலா? ஸ்கூல் கிடக்குது ஸ்கூல். நீங்க வேணா கிரகப்பிரவேசம் அன்னிக்கு வாங்க. நான் சுஜாதாவை அழைச்சுக்கிட்டுப் போயிடறேன். நான் வெங்கடேசனை அழைச்சுக்கிட்டுப் போயிடறேன்,'' என்று நம்மை அழைத்துப் போய் விடுவார்கள்.

நமக்குப் பள்ளி மேல் இருக்கிற கொஞ்ச நஞ்சப் பிரியமும் இந்த ஆரவாரமான விசேஷ 'ஜபதர்ஸ்து' களில் மங்கிப் போய் விடும். இதைப் போலவே, பெரியப்பா, சித்தப்பா, அத்தை, தாத்தா எனப் பல்வேறு உறவினர்களின் காது குத்தல், கிரகப்பிரவேசம், வளைகாப்பு, கல்யாணம், பெயர் சூட்டல் போன்ற பல்வேறு விசேஷங்களுக்கு நாம் முன்கூட்டியே சென்று நிகழ்ச்சி முடிந்து இரு நாட்கள் கழித்துத் திரும்பி வரும் பொழுது நம் படிப்பு அதோகதியாயிருக்கும்.

ஏதோ ஒரு சில குடும்பங்களைத் தவிர மற்ற எல்லா வீடுகளிலும் இந்தக் கொடுமையை நிறையக் காணலாம்.

இவ்வாறு பாசத்தைக் காட்டி நம்மைத் திணறடிக்கின்ற உறவினர்களின் வழிமுறைகள் நம் படிப்புக்குப் பழி நிலைகள் என்றாகி விடும்; நம் படிப்பும் குட்டிச்சுவர்தான்.

உன் வயதுச் சிறுவர்கள் பெரும்பாலோர் நாற்பது மதிப்பெண்களையே தாண்டாமல் இருப்பதற்கு முதல் காரணம் அவர்களுடைய பெற்றோர்தான்.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே — அவர்
நல்லவராவதும் தீயவராவதும்
பெற்றோர் வளர்ப்பினிலே'


என்ற பாடலுக்கேற்றாற் போல் பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் நம் மீது படையெடுக்கின்ற பொழுதுபோக்கு என்ற இந்த முப்பெரு அணி வகுப்புக்களின் பயனாக மூச்சு நின்று போய் கிடப்பது நமது உயிருக்குயிரான கல்விதான்! இதனை இளைய தலைமுறையாகிய நீ என்றும் மறந்து விடக் கூடாது.

எனக்குள்ள ஆச்சரியமெல்லாம் என்னவென்றால் இவ்வளவு தடைகளுக்கு மத்தியில் — இவைகளையும் பொறுத்துக் கொண்டு இளையதலைமுறையாகிய நீ எப்படியோ படித்து 'நூற்பது' 'ஐம்பது' மார்க்குகளையாவது வாங்கி விடுகிறாயே! அந்தச் சாதனையை நினைக்கும் பொழுது, உனக்கு மட்டும் போதிய 'விடுதலை' கிடைத்திருந்தால் நூற்றுக்கு நூறில் அல்லவா நின்று கொண்டிருப்பாய் என என் மனம் என்னையுமறியாமல் உள்ளுக்குள் அரற்றிக் கொண்டிருக்கிறது!

எழுச்சிமிகு இலக்கியமே, உன் இதயத்தே இதனை சீர்தூக்கிப்பார்த்து இந்த மாதிரித் தடைகளை நீ சந்திக்க நேரும் போது பக்குவமாய் உன்னை நீயே விடுவித்துக் கொண்டு இளைய தலைமுறையே, முன்னேறு.

(தொடரும்)

பிருந்தாவனக்



சிறுபின் னை நான்
சீருடை அணிந்து
செல்வேன் பள்ளிக்கு — புகழ்
சேர்ப்பேன், பள்ளிக்கு.

என்னுடை நண்பர்
எனைப்புகழ்ந் திடவே,
இன்மொழி கூறிடுவேன் — என்றும்
நன்மொழி கூறிடுவேன்.

அறிவைத் தந்திடும்
ஆசான் களை நான்
அன்புடன் மதித்திடுவேன் — அவரைப்
பண்புடன் துதித்திடுவேன்.

கலைகள் பலவும்
கற்றுத் தேர்ந்திடக்
கனிவுடன் முன்வருவேன் — நெஞ்சில்
துணிவுடன் முன்வருவேன்.

— புவனை கலைச்செழியன்,
ஈரப்பாளையம்.



குருவி குருவாகட்டும்

சிட்டுக்குருவி எட்டிப் பார்த்துச்
சிறகடித்தது — அதன்
பட்டுச் சிறகைப் பிரித்தசைத்துப்
பறக்க வந்தது.

தத்தித் தத்தி நடந்து வந்து
சுற்றிப் பார்த்தது — துரும்பு
கொத்தி வந்து கூடுகட்டிக்
களித் திருந்தது.

குருவிக்கேற்ற துணையும் ஒன்று
கிடைத்து விட்டது — அதன்
அருகிருந்து குஞ்சு ஒன்றை
அடைந்து விட்டது.

குருவிக் குஞ்சு பெரிசு ஆச்சு
பறந்து விட்டது — அன்னை
குருவி மட்டும் கவலையின்றிக்
குதித்துச் சென்றது.

பிரிவு என்ற செயல்களெங்கும்
பரவியுள்ளது — எனில்
பிரிவை எண்ணி மனிதர் மட்டும்
பெரிதும் நோவதேன்?

— வ. வெ. இராசாமணி
, கவுண்டம் பாளையம்.





குதிரைச் சத்து

கொள்ளும் புல்லும் கொள்ளும் என்னைக்
குதிரை யென்று சொல்லுவார்.
பள்ளம், மேடு துள்ளித் துள்ளிப்
பாய்ந்து செல்லும் வீரன் நான்.

காற்றை மிஞ்சும் ஆற்றல் வாய்ந்து
களத்தில் பாய்ந்து செல்லுவேன்.
ஏற்றிக் கொண்ட வீரன் வெல்ல
எனது வீரம் பயன்படும்.

பண்டை நாளில் தேரி ழுத்து
பெருமை பெற்ற போதிலும்
வண்டி யின்று இழுப்ப துண்டு
வயிற்றுக் காக வேண்டி நான்.

ஆடும் சூதுப் பந்த யத்தில்
ஓட ஓட விரட்டுவார்.
கோடிப் பேர்கள் பொருள் இழக்கும்
கொடுமை இன்றும் தொடருது!

— சி. விநாயகமூர்த்தி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கவியரங்கம்

தோப்புக்கரணம் சுவாமி

பிள்ளையாரே, பிள்ளையாரே!
விழித்துப் பாருங்க! — சின்னப்
பிள்ளை மீது அன்பு
காட்ட வேணுங்க!

பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போறேங்க! — நன்றாய்
படிப்புவர உங்களோட
ஆசி வேணுங்க!

அன்னை, பிதா தெய்வம் என்று
அறியச் செய்தீங்க! — நானும்
அப்படியே உங்களைப்போல்
நடக்கி றேனுங்க!

சின்னச் சின்னக் கொழுக்கட்டைகள்
தின்று பாருங்க! — எனக்கு
நல்லறிவைக் கொடுக்க வேணும்
தோப்புக் கரணங்க!

— புலேந்திரன், ஆலாந்தூர்.



அடையாறு அதிசயம்...

அடையாற்றில் ஓர் ஆலமரம்!
ஆமாம், அது நெடுங் காலமரம்!
உடையாத எழிற் கோலமரம்!
ஒடிந்தே விழ்ந்தது மூலமரம்!

உடைந்தது! உலக அதிசயம்தான்
ஊழ்வினை செய்த சதிபயம்தான்!
நடந்தது மருத்துவ 'மதி' ஜெயம்தான்!
நட்டபின் துளிர்த்தது "பதி நியம்" தான்!

பறவைகள் பலவும் உறைந்திருக்கும்!
பழங்களும் விழுதும் நிறைந்திருக்கும்!
வருடிடும் தென்றல் சுகம் கிடைக்கும்!
வருபவர்க்கெல்லாம் நிழல் கொடுக்கும்!

ஆயிரம்காலப் பயிர் அதுதான்!
அதன் உயிர் பிழைத்தது மறுபடிதான்!
மாயமோ, இல்லை மந்திரமோ?
மாபெரும் அறிவியல் தந்திரமோ?


காலமுதல்வனின் சோதனைதான்!
காலத்தை வென்றதும் சாதனைதான்!
ஆலமரக்குயில் சுதிலயம்தான்!
அதன் உயிர் பிழைத்ததும் அதிசயம்தான்!

— நெல்லை ஆ. கணபதி, சென்னை—8.

அழுதமழலை

ஏதும் அறியாச் சிறுபிள்ளை
எங்கள் வீட்டுக் கைப்பிள்ளை;
தீதும் நன்றும் தெரியாத
திங்கள் முகத்தோன் எம்பிள்ளை!
வீட்டுக்குள்ளே தவழ்ந்திடுவான்,
விந்தைக் குறும்பு செய்திடுவான்,
பாட்டுப் பாடித் தாலாட்ட,
பாங்காய்த் தூங்கி விழித்திடுவான்,
மேயும் பசுவின் கன்றைப் போல்
மெத்த மகிழ்ந்து களித்திடுவான்.
கன்னம் குழியச் சிரித்திடுவான்,
கனிவாய்க் கையைப் போட்டிடுவான்.
மின்னும் அழகுக் கிள்ளையவன்
மேனி மலருக் கொப்பாகும்.
வெள்ளை உள்ளம் அவனுள்ளம்,
விதயம் இல்லாத் திருவுள்ளம்,
அள்ளி அணைக்கப் பேரின்பம்,
அதுவே நமக்கு ஆனந்தம்!

— நாஞ்சில் கங்காதரன்,
சேதுக்குவாய்த்தான்.






* ச. சையது முஸ்தபா, திருச்சி — 17.

கே: ஹெலிகாப்டரைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: இன்று நீங்கள் பார்க்கும் ஹெலிகாப்டரைக் கண்டுபிடித்தவர் இன்னார் என்று ஒருத்தர் பேரைச் சொன்னால் அது நியாயம் வழங்கியதாகாது. இதில் பல பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆதிகர்த்தா 1500 — ஆம் ஆண்டில் வாழ்ந்தவர். பெயர் லியனார்டோ டா வின்சி. ஏதோ கேள்விப்பட்ட பெயர் மாதிரி இருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? ஆமாம். பிரபல மோனாலிசா ஓவியத்தையும் அதே போல் உலகப் புகழ்பெற்ற 'லாஸ்ட் சப்பர்'



ஓவியத்தையும் வரைந்து கொடுத்த இறவாப் புகழ் பெற்ற அதே இத்தாலிய ஓவியர்தான். இவர் ஓவியர் மட்டுமல்ல; சிற்பி. கட்டிடக் கலைஞர். இசை மேதை. அவற்றுடன் விஞ்ஞானத் துறையில் இவர் வியக்க வைத்ததற்கு இந்த ஹெலிகாப்டர் ஓர் உதாரணம். ஹெலிகாப்டரை முதன் முதலாக வடிவமைத்து ஒரு மாடலும் செய்து வைத்தவர் இவர். அந்த மாடலில் உள்ளே இயந்திரம் கிடையாது. அதில் இன்ஜினைப் பொருத்தி ஒருவழியாய் எழும்பச் செய்த பெருமை ஈகாரி சிக்கார்ஸ்கி (1910) என்ற ரஷ்ய விஞ்ஞானியைச் சேரும். ஹெலிகாப்டரை மட்டும் உயரப் பறக்கும்படி மட்டும்தான் இவரால் சாதனை படைக்க முடிந்தது. கூட ஒரு விமானி தொற்றிக் கொண்டாலும் அம்பேல். மேலே உயராது. அப்புறம் வந்தாரய்யா லூயி சார்லஸ் பிரெகுவே என்ற பிரெஞ்சு விஞ்ஞானி. அவரும் இன்னும் சிலரும்தான் 1938 — 40 வாக்கில் இன்றைய ஹெலிகாப்டரை வடிவமைத்தார்கள். நடுக்கடலில் விபத்துக்கு ஆளானவர்களை, வெள்ளத்தில் சிக்கித் தத்தளிப்பவர்களை மீட்கிற சேவைக்காக மட்டுமே ஹெலிகாப்டருக்கு எத்தனை கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் தகும்! (நாமா கையை விட்டுக் கொடுக்கப் போகிறோம்! சொல்லி வைப்போமே!)

* க. ஹேமா, மதுரை — 2.

கே: வண்ணக்குடைகளை உபயோகிப்பதைவிடக் கறுப்புக் குடைகளை உபயோகிப்பது நல்லது என்று ஏன் கூறுகிறார்கள்?

ப: யார் கூறுகிறார்கள்? குடை வியாபாரியா? நீ உன் டிரெஸ்ஸுக்கு மேட்ச்சாய்க் கலர்க் குடை பிடித்துக் கொண்டு போகலாம் என்று நினைத்து, நான் அதற்குச் சிபாரிசு செய்வேன் என்று இந்தக் கேள்வி கேட்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன். கலரும் சரி, கறுப்பும் சரி, இந்த வெயில் காலத்துக்கு உகந்ததல்ல. குடைக்காகக் கறுப்புத் துணியை உபயோகிக்கும் வழக்கத்தை எந்த மகானுபாவன் ஆரம்பித்தானோ தெரியவில்லை. அது அப்படியே வழி வழியாய் வந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் பார்க்கலாம். குடை வாங்கியதும் அந்தக் குடைத் துணிக்கு உறை மாட்டுவது போல் வெள்ளைத் துணி மாட்டி விடுவார்கள். உள்ளபடிக்குக் குடைத் துணிக்கு ஏற்றது வெள்ளை நிறம்தான். குறிப்பாக இந்தக் கோடைக்கு. ஏன் தெரியுமா? கறுப்பு வெப்பத்தைக் கிரகித்து அப்படியே வைத்துக் கொள்ளும். நீ வேணுமானால் டெஸ்ட் பண்ணிப் பார். ஆனால் வெள்ளை இருக்கிறதே. அது சூரிய வெப்பத்தைப் போடா போ என்று மேலே பட்ட வினாடியே தூக்கி எறிந்துவிடும். அதனால்தான் இந்த வெப்ப நாட்டுக்கு உகந்த உடுப்பு அப்பட்டமான வெள்ளை என்று தேசத்தந்தை காந்திஜியே தேர்ந்தெடுத்துக் கடைப்பிடித்தார்.

* தா. ஷேக் உசேன், செஞ்சி.

கே: ஹாக்கி விளையாட்டு எந்த நாட்டில், யாரால் எப்போது முதன் முதலில் விளையாடப்பட்டது?

ப: விளையாட்டுத்தனமான கேள்வி தம்பி இது. ஹாக்கி என்ன விஞ்ஞானக் கண்டுபிடிப்பா என்ன, ஒரு நபரைக் குறிப்பிட்டுச் சொல்லுவதற்கு? இது ஒரு புராதன



மான ஆட்டம். இப்படி மட்டையை வைத்துக் கொண்டு ஆதி நாளைய பாரசீகர்கள் ஏதோ ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதைக் கற்றுக் கொண்டு வந்து ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டில் விளையாடினார்கள். 1886 — இல் இங்கிலாந்தில் இதுதான் ஹாக்கி விளையாட்டு என்று நிர்ணயம் பண்ணி, அதற்கான வரைமுறைகள், சட்டதிட்டங்களை ஏற்படுத்தினார்கள். இங்கிலாந்திலிருந்துதான் மற்ற நாடுகளுக்கு இந்த விளையாட்டுப் பரவியது. அப்படி வெள்ளைக்காரர்கள் நம் நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்ததுதான் இந்த விளையாட்டு. ஹாக்கியில் குருவை மிஞ்சிய சிஷ்யர்கள் ஆகிவிட்டோமே அதுதான் நமக்குப் பெருமை. இல்லையா என்ன? பின்னே? 1928 — ஆம் ஆண்டுதான் ஒலிம்பிக்கில் ஹாக்கி விளையாட்டுச் சேர்க்கப் பட்டது. அந்த வருஷத்தில் ஹாக்கியில் முதலிடத்தைப் பெற்றவர்கள் நாம்தான். நாலு வருடத்துக்கு ஒருமுறை ஒலிம்பிக். இல்லையா? அடுத்தாற்போல் 1932, 1936 ஆகிய ஆண்டுகளிலும் இந்தியாவுக்குத்தான் முதலிடம். அப்புறம் பாகிஸ்தான் பிரிந்த பிறகு 1948, 1952, 1956 ஆண்டுகளிலும் இந்தியாவுக்குத்தான் முதலிடம். அப்புறம்... இருந்தாலும் ஹாக்கி ஆட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்கிற மாதிரி இந்தியா இருந்து கொண்டுதான் இருக்கிறது, இன்று வரை. காலம் வரும், காத்திரு தம்பி.

* எஸ். மனோகரன், சங்கமங்கலம்.

கே: ஒரு மாணவன் எதெதில் கடமை தவறக் கூடாது?

ப: முதலில் கடமை என்றால் என்ன என்று பார்ப்போம். கடனிலிருந்து வருவது கடமை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அப்பர் வாக்கு. அது முதிர்ந்த நிலை. மாணவர் பருவத்துக் கடன்—அதாவது கடமை என்ன? முக்கியமாய் உனக்கு அறிவுச் செல்வம் வழங்கும் ஆசானுக்குக் கடன் பட்டிருக்கிறாய். அவரிடம் பட்ட கடனை எப்படித் தீர்ப்பது? அவர் என்ன கேட்கிறார்? அவரிடம் நீ கேட்டறிந்ததைப் பாடத் துணை கொண்டு வட்டியும் முதலுமாய் விடைத்தாளில் கொட்டிக்கொடு என்று தானே? அதைக் கொடுத்துவிட்டுப் போயேன். இந்தக் கடமைக்குள் மற்ற எல்லாக் கடமைகளும் அடக்கம் — இப்போதைக்கு.

* கு. ஜெயக்குமார், மேல்மலையனூர்.

கே: கண்ணாடி எதிலிருந்து தயார் செய்யப்படுகிறது?

ப: சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே மனித ஜாதிக்கு மிகவும் பயன்படக் கூடிய ஒரு பொருள் கண்டுபிடிக்கப்பட்டது என்




றால் அது இந்தக் கண்ணாடிதானாக்கும்! இதைக் கண்டுபிடிக்கத் தூண்டுகோலாய் இருந்தவர்கள் தாய்க்குலம்தான். ஆமாம், இவர்களுக்காகக் கழுத்து மணிகள், கை வளைகள் செய்யத்தான் அந்தக் காலத்தில் கண்ணாடியைப் பயன்படுத்தி வந்தார்களாம். இப்போதுள்ள யந்திர வசதிகளுடன் கண்ணாடி தயாரிக்கத் துவங்கி 80 வருடங்கள்தான் ஆகின்றன.

அதெல்லாம் சரி, எதிலிருந்து கண்ணாடி தயாரிக்கிறார்கள்? ரொம்பச் சாதாரண மூலப் பொருள்கள்தான். சுத்தப்படுத்தப் பட்ட மணலுடன், சுண்ணாம்புக் கல், சலவைச் சோடா (இதற்கு விஞ்ஞானப் பெயர்: சோடியம் கார்பனேட்). இந்த மூன்றையும் உலையில் ஏற்றிக் கொதிக்க வைக்க வேண்டும். உலை என்றதும் உங்கள் வீட்டு




அடுப்படியை நினைத்துக் கொண்டு விடாதே. இந்த உலை விசேஷ கவனத்துடன் தயாரிக்கப்பட்ட பிரும்மாண்டம். இந்தக் கலவையை வாங்கிச் சூடேற்றும் உருக்காலை பெரிய கொப்பரை அல்லது — பானை வடிவத்தில் அமைக்கப்பட்ட களிமண்ணால் ஆகிய ராட்சசப் பாத்திரம் ஏற்றப் பட்டிருக்கும். இதை 2600° பா வரை சூடாக்கி — அந்த உஷ்ணத்தைத் தாங்கும் மண் கலயம், — உருக்கினால் திரவ நிலை வரும். இதைத் தேவைப்படும் அச்சிலே வார்த்துக் கண்ணாடிப் பொருள் செய்வார்கள். சுத்தமான கண்ணாடிக் கலவையில் இரும்பு, நிக்கல், கோபால்ட் போன்றவற்றைச் சேர்க்கும்போது பலவித வண்ணங்கள் சேரும். இதற்கு மேல் விவரிக்க ஆரம்பித்தால் வேறு கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் போகும்.

சின்ன அண்ணன்


13
எட்டுக்கு எட்டு
கதை: தேசபந்து
படம்: ஜெ...
பயணிகள் விடுதியில் ரஞ்சித், சசிவர்ணம்—
இங்க பாருங்க,.... நீங்க குழந்தையோட மட்டும் தான் வரணும். கூட உங்க மனைவி வரக்கூடாது— சரியா?
சசிவர்ணம் அருகில் வந்து—
அது எப்படி முடியும் சார்?
சரி.... ஒரு யோசனை! காபியிலே இந்த மயக்க மருந்தைக் கலக்கிக் கொடுத்திடுங்க.. போதும்!
ரஞ்சித் யோசனை வேலை செய்தது.
அம்மா தூங்கட்டும். நாம வெளிய போவமா?
பட்டாம் பூச்சி பிடிப்போம்!
ஓ!
மூவரும் ஆற்றங்கரை ஓரமாகச் சென்றார்கள்—
கவலையே வேண்டாம். இன்னும் எட்டு மணி நேரமாவது உங்க மிஸஸ் தூங்கிவாங்க!


அதே சமயம் ஒரு சின்னக் குடிசைக்குள் அங்குசாமி, சின்னான், வேலு -
ஏலேய்! இந்நேரம் எங்கடா போயிட்டு வாரே?
கெஸ்ட் ஹவுஸ் பக்கம் போயிருந்தேன் சித்தப்பா.... பள பளன்னு ஒரு கார்- யாரோ ஜமீன்தாராம்....
கார்ல ஆராரு வந்தாங்க?
ஒரு அம்மா, ஒரு ஐயா, ஒரு புள்ளை..
அடி சக்கை!
கிளம்புடா சின்னான்! இன்னிக்கோட நம்ம வேலை முடிஞ்சுது....


ஆற்றோரம்-
அப்பா! பட்டாம் பூச்சி பிடிச்சித்தரேன்னு சொன்னியே!
கண்டுக்காம விட்டுடுங்க.. அவனே போய்ப் புடிக்கட்டும்!
நீயே போய்ப் பிடி பாக்கலாம்!
சரி!
சின்ன ராஜா பட்டாம் பூச்சியைப் புடிக்க ஓடினான்-
கவலைப் படாதீங்க. அங்கங்க நம்ம ஆளுங்க இருக்காங்க! நாம வேற பக்கம் தேடற மாதிரிப் பிரிஞ்சு போகணும்.
ஒரு புதருக்குப் பின்னாலிருந்து-
அதோ பாருங்க சசிவர்ணம். அவங்க தான் அங்குசாமி- சின்னராசா இருக்கணும்.


சசிவர்ணத்தை கெஸ்ட் ஹவுசுக்கு அனுப்பிவிட்டு ரஞ்சித் சின்னாவிடம் வந்து –
ஏனுங்க இந்தப் பக்கமா ஒரு மூணு வயசுப் புள்ளையைப் பாத்தீங்களா? ஜமீன் குடும்பத்துப் புள்ளை. நல்ல களையா இருக்கும்..
நான் அவங்க டிரைவரு.
நீங்க விடுதிக்குப் போங்க. நாங்க கண்டுபிடிச்சுக் கொண்டு வர்றோம்!
அவர்கள் கண்ணில் குழந்தை தென்பட்டதும் –
வா, வா எங்ககிட்ட ஒரு பட்டாம்பூச்சி இருக்கு... நீ எட்டாவது
எனக்கு அந்தப் பட்டாம் பூச்சி புடிச்சுக் கொடுங்க.
மறைந்திருந்து கண்காணித்துக் கொண்டிருக்கும் போலீஸ் படை –
இருவரும் அந்தக் குழந்தையைக் கோணிப்பையில் போட்டுக் கட்றாங்க சார்!
அடுத்த இதழில் முடியும்.

அஞ்சாமல் வாழ

பார்ப்பதற்கு மட்டுமல்ல; பழகு வதற்கும் ராம்சிங் இனிமையானவன். ஆனால் பாவம், அவனுக்கு வாய்த்த சித்தியோ மிகவும் கசப்பானவள். அவளுடைய வாயிலிருந்து நல்ல வார்த்தைகளே வராது. எப்பொழுது பார்த்தாலும் அவள் ராம்சிங்கை வைது கொண்டேயிருப்பாள்.

ராம்சிங் எத்தனை நாள்தான் பொறுப்பான்? அந்த நரகத்திலிருந்து தப்பித்து எங்காவது போய் நிம்மதி யாக வாழ வேண்டுமென்று முடிவு செய்து குருவிடம் வந்தான்.

''ஐயா, நான் பிழைக்க வழி தேடி இந்த ஊரை விட்டு வெளியூர் போக லாம் என்றிருக்கிறேன்.''

ராம்சிங்கின் நிலையைப் புரிந்து கொண்ட குரு சொன்னார்: ''நல்லது, நீ முடிவு செய்தபடியே போ. ஆனால் அதற்கு முன்னால், நீ அஞ்சாமல் வாழ ஐந்து அறிவுரைகள் சொல்கி றேன். கவனமாகக் கேள். நான் சொல்லப் போகும் அறிவுரைகளைக் கேட்டு நீ கவனமாக நடந்தாயானால், உன்னை வெல்ல இந்த உலகத்திலேயே ஆள் கிடையாது. நீ மிகவும் பெரிய ஆளாக, வெற்றிகரமாக வரலாம். கேள்:

''ஒன்று: உனக்கு வேலை தரும் முதலாளி சொல்லும் வார்த்தைகளுக் குக் கீழ்படிந்து தவறாமல் நட. எந்த வேலை சொன்னாலும், 'ஏன்? எதற்கு?' என்று கேட்காதே! சொன்ன வேலையைச் செய்.

இரண்டு: யாரிடம் பேசினாலும் கோபமாகவோ, மற்றவர் மனம் புண் படும்படியான வார்த்தைகளையோ பேசாதே. இதமாக அவர்களுக்கு இணக்கமாகப் பேசு.

மூன்று: எந்தக் காரணத்துக்காக வும் பொய்ச் சொல்லாதே!

நான்கு: உன்னை விட வலிமையும் செல்வமும் உடையவர்களிடம் பணி வாகவே நடந்து கொள். சரிக்கு சரி யாக நிற்காதே! கடைசியாக ஐந்து: எங்கே போக நேர்ந்தாலும் பயணம் செய்யும்வழியில்யாராவது பெரியவர் கள் நல்ல வார்த்தைகளையும் வேதங் களையும் கூறிக் கொண்டிருப்பதைக் கேட்க நேரிட்டால், உன் வேலையைத் தள்ளிப் போட்டு விட்டு அவர்கள் வார்த்தைகளைக் கொஞ்ச நேர மாவது நின்று காது கொடுத்துக் கேட்டு, உன் மனத்தில் வாங்கிக் கொள். அது உன் வாழ்க்கைப் பயணத்தைச் செம்மைப்படுத்தும்.''

ராம்சிங், ''ஐயா, நீங்கள் சொன்ன ஐந்து அறிவுரைகளையும் என் உயிருள்ளவரை மறக்க மாட்டேன். வருகிறேன்,'' என்று வணங்கி விடை பெற்றான்.

தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்த ராம்சிங்கின் காதில் குரு வின் வார்த்தைகள் ஒலித்துக் கொண் டேயிருந்தன.

மூலம்: ஆன்ட்ரூலாங்
(பழைய பஞ்சாப் கதைகளிலிருந்து)



அறிவுரைகள்

கொஞ்ச நாட்களில் உணவுக்காக ராம்சிங் வைத்திருந்த கைப் பணம் கரைந்து விட்டது. வயிற்றுப் பாட்டுக்காக வேலை தேடி அலைந்தான்.

தானியக் கடையொன்றின் முன் நின்றிருந்த பெரியவர் ஒருவரை நெருங்கி, ''ஐயா, எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா?'' என்று கேட்டான்.

அந்தப் பெரியவர் ராம்சிங்கை ஒரு முறை மேலும் கீழும் தன் பார்வையால் அளந்தார். பிறகு, ''தம்பி, உன்னுடைய கம்பீரமான தோற்றத்தைப் பார்த்தால், மெய்க்காப்பாளன் ஆகக்கூடிய தகுதி உனக்கு இருக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால், அமைச்சர் நேற்றுத்தான் அரசரின் மெய்க்காப்பாளனைப் பதவியிலிருந்து விலக்கினார். நீ போய் அமைச்சரைப் பார்த்து வேலை கேள்; நிச்சயமாகக் கிடைக்கும்.''

பெரியவருக்கு நன்றி கூறி விட்டு ராம்சிங் ராஜாவின் அரண்மனை நோக்கிப் போனான்; அமைச்சரைப் பார்த்தான்; வேலையும் கேட்டான்.

அமைச்சருக்கும் ராம்சிங்கை மிகவும் பிடித்துப் போய் விடவே மெய்க்காப்பாளன் பதவியைக் கொடுத்துக் கௌரவித்தான்.

ராம்சிங் மெய்க்காப்பாளனாகப் பதவியேற்று நல்லபடி வேலை செய்து கொண்டு வந்தான்.

ஒரு நாள் ராஜா தன் பரிவாரங்களோடு பிரயாணம் ஒன்றை மேற்கொண்டார். ராஜாவோடு அமைச்சர், மெய்க்காப்பாளன் ராம்சிங் இதர சேனைகள், யானை, குதிரை, ஒட்டகம் பரிவாரங்களோடு ஊர்வலமாகக் கிளம்பினார்.

பாலைவனம் போல் தோற்றமளித்த ஓர் ஊரை அடைந்தது ஊர்வலம். ஊர்த் தலைவனாகத் தெரிந்த ஒருவன் முன்வந்து அரசரை வணங்கிப் பணிவுடன் பேசினான்: எங்கள் ஊரில் தண்ணீர்ப்பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மழையும் இல்லை; நீருமில்லை; தண்ணீர் கிடைப்பது என்பது மிகவும் சிரமமாயிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் குடிக்கத் தண்ணீர் கொடுத்து உபசரிக்கக் கூட முடியாத பாவிகளாக நிற்கிறோமய்யா,'' என்று வருத்தத்தோடு சொன்னான்.

ராஜா உருகிப் போய் விட்டார்.

தமிழில்: எஸ். சித்ரா

அமைச்சரை அழைத்து, ''அமைச்சரே! எப்படியாவது இவர்களின் தண்ணீர்ப்பஞ்சத்தைப் போக்கவேண்டும். ஏதாவது வழி செய்யுங்கள்,'' என்றார்.

ராஜாவின் வார்த்தைகளைச் சிரமேற் கொண்டு அமைச்சர் செயல்பட ஆரம்பித்தார். எப்படி?

அந்த ஊரிலிருக்கும் வயதான பெரியவர்கள் எல்லோரையும் வரவழைத்தார் அமைச்சர். எல்லோரையும் பார்த்து, ''இந்த ஊரில் எங்கெல்லாம் தண்ணீர்க் கிணறு இருக்கிறதோ அதை எங்கள் படை வீரர்களுக்குக் காட்டுங்கள். இவர்கள் அவற்றை ஆழப்படுத்தி, உங்களுக்குத் தண்ணீர் கிடைக்க வழி செய்வார்கள்,'' என்றார்.

பெரியமனிதர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர். பிறகு ஒருவர் முன்வந்து, "அமைச்சரே! எங்கள் ஊரில் உள்ள கிணறுகளெல்லாம் தண்ணீர் என்பதே இல்லாமல் தூர்ந்து போய்விட்டன. ஒரே ஒரு கிணற்றில்தான் தண்ணீர் இருக்கிறது. அது ஒரு பெரிய பாதாளக் கிணறு. அதற்குள் போக நிறையப் படிக்கட்டுகளைக் கடக்க வேண்டியிருக்கும். அந்தக் கிணற்றை இது வரை நாங்கள் யாரும் நெருங்கியதேயில்லை," என்றார்.

"அந்தக் கிணற்றுக்குள் ஒரு பெரும் பூதம் இருக்கிறது. அது உள்ளே போன யாரையும் வெளியே உயிரோடு அனுப்பியதில்லை. அப்படியிருக்கும் போது யார் போகத் துணிவார்கள், சொல்லுங்கள்?"

"பூதமா! யாரை அனுப்பி அதை வெல்லலாம்?" என்று தம் அழகிய தாடியைத்தடவியவண்ணம்யோசித்த அமைச்சருக்கு, ராம்சிங்கின் நினைவு வந்தது.

ராம்சிங்கை அழைத்து, "ராம்சிங், எந்தக் கதையையும் முழுமையாக நம்ப முடியாது — நேரில் போய்ப் பார்த்து உண்மையைத்தெரிந்துகொள்ளும் வரையில். ஆகையால் நீ என்ன செய்கிறாய் என்றால், பெரியவர் சொன்ன கதைஉண்மைதானா, கிணற்றுக்குள் பூதம் இருக்கிறதா என்று பார்த்து வா, போ," என்று சொல்லி அவன் கையில் நிறையத் தண்ணீர் கொண்டு வருவதற்கான குடங்களையும் கொடுத்தனுப்பினார்.

அமைச்சரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ராம்சிங்கிற்குக்குருவின் முதல் அறிவுரை ஞாபகத்துக்கு வந்தது! "நீ யாரிடம் வேலை செய்கிறாயோ, அவருடையவார்த்தைகளைத் தவறாமல் கேள்,"

உடனே தண்ணீர் சேகரித்து வரப் பெரிய பெரிய குடங்களோடும், வழி காட்ட வந்த ஒரு பெரியவரோடும் பயணமானான்.

கொஞ்ச நேரத்தில் ஒரு பாழடைந்த மாளிகையை அடைந்தான். சுற்றிலும் பெரிய பெரிய மரங்களும் செடிகளும் அடைத்து நிற்க, மாளிகை இருட்டாகத் தெரிந்தது. மாளிகையை அடைந்ததும் பெரியவர் தயங்கியவாறு ராம்சிங்கைப் பார்த்து, "தம்பி, எனக்குக் கால் வலிக்கிறது. நான் இதோ இந்த வாசலில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து ஒய்வெடுத்துக் கொள்கிறேன். மாளிகையின் பின்புறம்தான் தண்ணீர்க் கிணறிருக்கிறது. நீ போய்த் தண்ணீர் கொண்டு வா. நான் இங்கேயே காத்திருக்கிறேன்," என்று சொல்லி அனுப்பினார்.

ராம்சிங் கிணற்றை அடைந்தான். பெரிய பெரிய படிக்கட்டுகளைக் கடந்து உள்ளே போனான். கிணறு மிகவும் பெரியதாக, அதளபாதாளத்தில் தெரிந்தது. உள்ளே போகப் போக எங்கும் இருள், நிசப்தம். தன் காலடியோசையே மிகவும் சத்தமாகக் கேட்டது அவனுக்கு. சுற்களின் இடறல் ஒருபுறம். தண்ணீர் எட்டும் அளவுக்குத் தட்டுத் தடுமாறி வந்து விட்டான். தன்னிடமிருந்த குடங்களை ஒரு படியின் மேல் வைத்து விட்டு ஒரு குடத்தை மட்டும் எடுத்துத் தண்ணீரில் கவிழ்த்தான். அவ்வளவுதான், எங்கிருந்தோ டங் டங் என்ற ஒலியோடு பூதம் ஒன்று வந்து அவன் முன் நின்றது! ராம்சிங்கிற்குப் பயத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

பூதம் பார்ப்பதற்கு மிகவும் உயரமாக, சதையெல்லாம் விகாரமாகத் தொங்கிக் கொண்டு, தோளில் எலும்புக்கூடுஒன்றைஏந்திக்கொண்டு கோரமான நீள நீளப் பற்களோடு... அது ஏந்தி வந்த விளக்கின் ஒளி அதன் முகத்தில் பட்டு மேலும் பயத்தை உண்டுபண்ணியது.

பூதம் ராம்சிங் முன் நின்று கொண்டு அவனைப் பார்த்து, "ஏய் சிறுவனே, இதோ என் தோளில் நான் சுமக்கும் என் அழகான, வெள்ளை நிற மனைவியைப் பற்றி என்ன நினைக்கிறாய் சொல்," என்று மிரட்டியது. தன் தோளில் இருக்கும் அந்த எலும்புக் கூட்டை வாஞ்சையோடு தடவிக் கொடுத்தது.

நடந்ததென்னவென்றால், பூதத்தின் தோளில் தொங்கும் எலும்புக்கூடு உண்மையில் இறந்து போன அதன் மனைவியினுடையதுதான்! ஆனால் பூதமோ அதன் மனைவி இறந்து விட்



டதையே நம்ப மறுக்கிறது. ஆகையால் அது எலும்புக் கூட்டையே மனைவியாகப் பாவித்து வாழ்ந்து வருகிறது. அது சந்திக்கும் மனிதர்களையெல்லாம் ராம்சிங்கைக் கேட்டது போலவே கேட்கும். மற்றவர்களெல்லாம் எரிச்சல்பட்டு, 'எலும்பு கூட்டைப் போய் மனைவி என்கிறாயே!' என்று திருப்பிக் கேட்டு, அதன் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டு பலியானவர்கள்.

பூதத்தின் கேள்விகளைச் செவி மடுத்த ராம்சிங்கிற்குக் குருவின் இரண்டாவது அறிவுரை கூடவே எதிரொலித்தது. 'மற்றவர்களிடம் அன்பாகவும், அவர்கள் மனம் நோகாமலும் பேசு'.

உடனே ராம்சிங்கும், ''ஐயா, உங்கள் மனைவியைப் போன்ற அழகி இந்தப் பிரபஞ்சத்திலேயே கிடையாது,'' என்று மென்மையாகச் சொன்னான்.

ராம்சிங்கின் பதிலைக் கேட்ட பூதத்துக்கு உச்சிகுளிர்ந்து விட்டது. ''ஆ, நண்பனே! உனக்கு என்ன கண்களப்பா. உண்மையில் நீதான் சிறந்தவன். இதுவரை நான் சந்தித்த மனிதர்களெல்லாம், 'என்ன, உன் மனைவி அழகியா? எலும்புக் கூட்டை வைத்துக் கொண்டு என்ன கூத்தடிக்கிறாய்?'' என்று கேலி பேசுவார்கள். ஆனால் நீதான் என் மனைவியின் வசீகரத்தை உன் கண்ணால் பார்த்துப் புகழ்ந்தாய். நீ மிகவும் நல்லவனாய்த் தெரிகிறாய். உனக்கு என்ன உதவி வேண்டுமோ கேள், தவறாமல் செய்கிறேன்,'' என்றது ஆதரவாக.

பிறகு எலும்புக் கூட்டைப் பத்திரமாக ஓர் இடத்தில் கிடத்தி விட்டு, ராம்சிங் கொண்டு வந்த குடங்களிலெல்லாம் தண்ணீர் நிரப்பி எல்லாவற்றையும் தானே மேலே கொண்டு வந்து வைத்து அவனுக்கு உதவியது.

ராம்சிங் சின்னக் குடங்களைச் சுமந்து மேலே வந்தான். பூதம் அவனிடம் திரும்ப, ''இப்போது சொல், என்ன வேண்டும் உனக்கு?'' என்று வினவியது. பிறகு அதுவே தொடர்ந்து, ''செத்துப் போன ராஜாக்களின் புதையல் எங்கே இருக்கிறது என்று தெரிய வேண்டுமா, நான் காட்டுகிறேன்,'' என்று கேட்டது.

ராம்சிங், ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ இந்தக் கிணற்றை விட்டுச் சென்று விட வேண்டும். மக்கள் பயப்படாமல் இங்கு தண்ணீர் எடுக்க வழிசெய்ய வேண்டும். அது போதும்,'' என்றான்.

''இதோ நான் இப்பொழுதே இந்த இடத்தை விட்டுப் போகிறேன்,'' என்று சொல்லி மறைந்தது பூதம்.

ராம்சிங் தண்ணீர்க் குடங்களோடு திரும்பியது, அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தனக்குப் பூதத்





துடன் ஏற்பட்ட அனுபவத்தை யாரிடமும் கூறாமல் மறைத்து விட்டான் அவன்.

ராம்சிங்கின் செயல் ராஜாவிற்கு இரட்டிப்புச் சந்தோஷத்தைத் தந்தது. அவர் அமைச்சரிடம், ''ராம்சிங்கை என்னுடைய அந்தரங்கச் செயலாளனாக்கி விடுங்கள்,'' என்று உத்தரவிட்டார்.

குருவின் மூன்றாவது அனுபவ ஞான வார்த்தைகளான 'பொய் சொல்லாதே' என்பதை ராம்சிங் செயல்படுத்தினான். அரசனிடம் எப்பொழுதும் நேர்மையோடு நல்லபடி நடந்து நல்ல பெயர் பெற்றான்.

ராஜாவுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் மிகவும் பொல்லாதவன், பொறாமைபிடித்தவன். அவனுக்கு ராம்சிங்கைக் கண்டாலே வெறுப்பு. 'இவன் எப்படி மன்னனின் அன்புக்குப் பாத்திரமானவனாயிருக்கிறான்? இவனை வளர விடக்கூடாது. ஒழித்து விட வேண்டும்,' என்று கறுவிக் கொண்டிருந்தான்.

ராம்சிங்கை ஒரு நாள் அரசனின் சகோதரன் அழைத்தார். அவனிடம் ரகசியமாக, ''என் பெண்ணை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். நீ அந்த ராஜாவைத் தீர்த்துக் கட்டி என்னை இந்த நாட்டு ராஜாவாக்கி விடு,'' என்று கேட்டான்.

தமது குருவின் நான்காவது ஞான வார்த்தை, 'உன்னை விட உயர்ந்தோருக்குச் சரியாக நிற்க ஆசைப் படாதே' — ராம்சிங் நினைவில் எச்சரித்தது.

எனவே, ''ராஜ பரம்பரைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளத் தகுதியில்லாதவன் நான். அது மட்டுமல்ல, ராஜாவுக்குத் துரோகம் செய்வதென்பது கனவிலும் நடக்காதது.'' என்று கூறி அந்த இடத்தை விட்டு அகன்றான்.

இதைக் கேட்ட அந்தப் பொல்லாதவனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. 'இவனை இப்படியே விடக்கூடாது. நம் அண்ணனிடம் போய் இவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி இவனை வெறுக்கும்படிச் செய்ய வேண்டும்,' என்று திட்டமிட்டு, நேராக ராஜா

(தொடர்ச்சி 38 — ஆம் பக்கம்)


வெய்யிலுக்காகக் குடை கேக்கறீங்க, புரிகிறது!
வீட்டில் குடைக்குப் பஞ்சமே கிடையாது!
ஆனால் எல்லாமே இப்படித்தான் இருக்கு, பரவா இல்லையா?
முல்லைக்குத் தேர் கொடுத்தான் வள்ளல் பாரி!
நாய்க்குக் குடை பிடித்தான் எங்கள் சூரி
பாவம்டா நாய் வெய்யிலில் படுத்திருக்கு!
கோடை
கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த நிழல் தருவே! தருநிழலே!


தலைகொடுத்தார் குமண வள்ளல்
தலைத் தொப்பியைத் தந்தான் ரமண வள்ளல்!
வெய்யில்படாமல் இருக்கத் தொப்பி போட்டுக்கோடா மொட்டை மண்டை போயிடும் !!
" தண்டத்திற்கு சுந்தரத்தை கொடை மேலே இந்த சல்லடையை வைத்துக் கொண்டு சுத்து அதில் இருக்கும் வத்தலாவது காயும் "னு அம்மா சொன்னா. அதான்..
வள்ளல்கள்
தஞ்சை மாலா
வெய்யில் தாங்காமல் உன் குடை தீப்பிடிச்சி எரியுதுடா சீக்கிரமா ஃபயர் சர்வீசுக்குப் ஃபோன் பண்ணுடா!
இதோ ஒழிநடைவக்குடை இரவல் கேட்டு இல்லைனு சொல்லிட்டிங்க அதனால் இடை எழு வள்ளல்னு பாராட்டறேன் உங்களை!

(35 — ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடம் போய், "ராம்சிங் உங்களைப் பற்றித் தாறுமாறாகப் பேசினான். நீங்கள் அவனைக் கவனித்துக் கொள்ள வேண்டும்," என்று பொல்லாங்கு பேசினான்.

எல்லாவற்றையும் கேட்ட ராஜா தம்பி சொல்வது உண்மையென்று நம்பி ராம்சிங்கைத் தண்டிக்க நினைத்தார். ஆனால் நேரான முறையில் அவனைக் கொல்ல முடியாது என்று கருதி, ஒரு திட்டம் போட்டார். அதன் படி —

ஓர் இடத்தில் நாலைந்து ஆட்களை வைத்து ஒரு கழிவறையைக் கட்டச் சொன்னார் மன்னர். அங்கு ஒரு போர் வீரனையும் வேலைக்குப் போட்டார். அந்த வீரனிடம், "இங்கொரு ஆள் வருவான், அவன் உங்களைப் பார்த்து, 'என்ன வேலை செய்கிறீர்கள்?' என்று கேட்பான். அவனை நீங்கள் வெட்டி வீழ்த்தி, தலையை மட்டும் துண்டித்து அதை என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்," என்று உத்தரவிட்டார்.

பிறகு, ராம்சிங்கை அழைத்து, "கொஞ்ச தூரத்தில் நாலைந்து ஆட்கள் வேலை செய்கிறார்கள். நீ போய் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்டு விட்டு வா," என்று உத்தரவிட்டார்.

ராம்சிங் உடனே ராஜாவின் உத்தரவை ஏற்றுப்புறப்பட்டான். போய்க் கொண்டிருக்கும் போது வழியில் ஒரு பெரியவர் சமயச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். குருவின் ஐந்தாவது அறிவுரை — 'எந்த நல்ல வார்த்தைகளை யார் சொல்லிக் கொண்டிருந்தாலும் நின்று கொஞ்ச நேரம் கேட்டு விட்டுப் பிறகு உன் வழியில் போ,' என்பது ஒலித்தது.

ராம்சிங் அந்தக் கூட்டத்தை நோக்கிப் போய் உட்கார்ந்து பெரியவரின் வார்த்தைகளைக் காதாரக் கேட்டு மெய்மறந்திருந்தான். நேரம் போனதே தெரியாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

இங்கே அரசனும் அவர் தம்பியும் மற்றவர்களும் சிப்பாய்கள் கொண்டு வரப் போகும் ராம்சிங்கின் துண்டிக்கப்பட்ட தலைக்காக உணவு உண்ணாமல் ஆவலோடு காத்திருந்ததுதான் மிச்சம். நேரம் ஓடியது. இரவு வர ஆரம்பித்துவிட்டது.

பசி தாளவில்லை. ராஜாவின் பொல்லாத தம்பி தான் போய் என்ன நடந்தது என்று பார்த்து வருவதாகக் கிளம்பினான்.

அவர்கள் வைத்த சேனை ஆட்கள் வேலை செய்யும் இடத்திற்குப் போய், "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டதுதான் தாமதம். சிப்பாய் இவன்தான் ராஜா சொன்ன ஆள் என்று நினைத்து, கூர்மையான வாளை எடுத்து அவனைக் குத்திக் கொன்று, தலையை மட்டும்துண்டித்து எடுத்து மூட்டையில் போட்டு எடுத்துக் கொண்டு வந்து மன்னனின் முன் வைத்தான்.


ராம்சிங் சாவகாசமாகச் சொற்பொழிவெல்லாம் கேட்டு முடித்துவிட்டு, ராஜா சொன்ன இடத்திற்குப் போய், "என்ன செய்கிறீர்கள் என்று ராஜா கேட்டு வரச் சொன்னார்," என்றான்.

அங்கு எஞ்சியிருந்த சிப்பாய்கள் சற்று முன்னால்தான் அரச கட்டளையை நிறைவேற்றியதாகவும் மற்ற விவரங்களையும் சொன்னார்கள்.

ராம்சிங்கிற்கு ராஜாவின் பொல்லாத தம்பியின் சூது எல்லாம் புரிந்தது. நல்லவேளை, தன் தலை தப்பியது என்று நினைத்து மன்னனைத் தேடி வந்தான். வந்தவன் அவரிடம் நடந்த விவரமனைத்தையும் சொல்லி, அவருடைய பொறாமைக்காரத் தம்பி முன்பு தன்னிடம் சொன்ன சூழ்ச்சியையும் விளக்கினான்.

ராஜாவுக்குத் தம்பியின் செய்கைகள் யாவும் இப்பொழுது விளங்கியது. ராம்சிங்கின் நல்ல மனதும் புரிந்தது.

ராம்சிங்கிற்கு ஏற்ற ஒரு நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து வைத்து, மேலும் அவனுக்குக் கௌரவமான பதவி, வசதியான வீடு, மற்றும் செல்வங்களை அளித்து அவன் சந்தோஷமாக வாழ வழி செய்தார் ராஜா.



சார் தபால்!

முஸ்லிமான எனக்கே தெரியாத உண்மைகள்

மே மாத கோகுலம் இதழைப் படித்தேன். முஸ்லிமான எனக்கே தெரியாத பல உண்மைகளை 'புனித ரம்ஜானின் புண்ணிய வரலாறு' கட்டுரை மூலம் ரம்ஜான் பண்டிகையின் வரலாற்றையும், சிறப்பையும் அறிந்து கொண்டேன். பயனுள்ள கட்டுரை.

செஞ்சி. தா. ரசூல்.

* எங்கள் வீட்டு பெரியவர்களுக்கு கல்கியில் லேசர் பற்றியும், எனக்கு கோகுலத்தில் லேசர் பற்றியும் எளிமையாகப் புரிந்து கொள்ளும்படி அளித்த உங்களுக்கு மிக்க நன்றி.

சென்னை — 39. அ. சு. கிருஷ்ணன்.

* நான் இந்த விடுமுறையில் எந்த ஊருக்குப் போகலாம் என யோசித்தேன். தாங்கள் கோகுலத்தில் வாசகர்களைக் கொண்டே விடுமுறைக்கு எந்த ஊர் போகலாம் என வெளியிட்டிருந்த பேட்டியைப் படித்தவுடன் எந்த ஊருக்குப் போகலாம் என முடிவு செய்து விட்டேன். நன்றி.

சிதம்பரம். எஸ். சிவக்குமார்.

* மே மாத இதழில் வெளியான சிறுகதைகள் அனைத்தும் நன்றாயிருந்தது. எல்லாவற்றையும் விட 'மின்காட்டி' சிறுகதை அருமை. ஆசிரியருக்குப் பாராட்டுக்கள். உங்களுக்கும் சேர்த்துத்தான்.

வில்லிவாக்கம். சி. எம். சுவாமி.

* கவர் விலை ஏற்றத்தைச் சமாளிக்க அவற்றை முன்கூட்டியே ஏராளமான அளவில் வாங்கி வைத்துக் கொள்ளும் ஜோக்கை, ஹைதரே படித்தாலும், 'அரதப் பழசு' என்று மூஞ்சியைச் சுளித்திருப்பார். ஆனாலும் 'ஆத்திச்சூடி படி' 'புத்தகத்தை வைத்துக் கொண்டு அழும் ஜோக் (கடைசி பக்க ஜோக்) போன்றவைகள். இவற்றை சமாளித்து விடுகின்றன.

வெள்ளகால். இரா. கந்தையா.

* குழந்தைகளுக்காக ஓர் அழியா சரித்திரம் படைத்து, மறைந்த வள்ளியப்பா அவர்களின் நினைவு நாள் பற்றிய செய்தியினைக் கண்டேன். அவர் இறந்து ஒரு வருடம் ஆகி விட்டதா? நம்பவே முடியவில்லை!

சங்கராபுரம். கே. மகேஷ்.

* 'நெஞ்சம் நெகிழ்ந்த நினைவு விழா' மூலம் அழ. வள்ளியப்பாவின் பூத உடல் மறைந்தாலும், புகழுடல் மறையாது என்பதை நினைவுபடுத்தியுள்ளீர்.

மொரப்பூர். ச. உமர்கான்.

* தான் பிரபலமடைந்த ஓவியத் துறையில் மட்டுமல்ல, படிப்பிலும் உயர் நிலையை அடைய வேண்டும் என்று துடிப்புடன் கூறிய சிறுமி அன்னபூரணாவைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

சுவாமிமலை. ஏ. கே. அருள்சாமி.

* ஒவ்வொரு மாதமும், அறிவியல் சிறுகதை மூலம் எங்கள் அறியாமையை போக்கும் ரேவதி அவர்களுக்கு நன்றி.


செஞ்சி. தா. ஷேக் உசேன்.

* பேராசைக்கார வைத்தியருக்குப் பாடம் புகட்டியதோடு நில்லாமல் பூனையையும் ஐந்நூறு பொன்களுக்கு விற்ற தெனாலி ராமனுக்கு நிகர் தெனாலி ராமனே என்பதை எவரும் மறுக்கவும், மறக்கவும் மாட்டார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பூந்தோட்டம். து. பாண்டியன்.

* ஏனுங்க கோகுலம் சாரே! மூணு ரூபாய்க்கு கோகுலத்தில் இம்மாம் சேதி இதுல புஸ்தகத்துக்கு ஒட்டு லேபிள் வேறயா? பேஷ் பேஷ்! உங்கள் பணி தொடரட்டும்!

மேல்மலையனூர். எஸ். செந்தில்குமரன்.





கோடை தரும் பாடம்

வெயில் கடுமை மிக அதிகம்
ஆகி விட்டது — மச்சு
வீட்டுக் குள்ளே இருக்கும் போதும்
வறுத்தெடுக்குது.

ஐயோ இந்த அவதி எப்போ
தீரப் போகுதோ? — என
அர்த்த ஜாம நேரத்திலும்
அலறத் தோணுது!

ஆண்டு தோறும் கோடைக் கொடும்
நாட்களில் எல்லாம் — இந்த
அவதி ஒரு தொடர் கதையாய்
ஆகிப் போகுதே...


ஆண்டவனே இதற்கு வேறு
மாற்றே இல்லையா? — என
அரச மரப் பிள்ளையாரைக்
கேட்க ஓடினேன்.



மரத் தடியில் பிள்ளையாரைப்
பார்த்த வுடனே — என்
மனப் பரப்பின் இருள் விலகித்
தெளிவை உணர்ந்தேன்.

வரம் கொடுக்கும் கடவுளுக்கே
நிழல் கொடுக்குதே — இந்த
வள்ளல் மரம் என்று பெரும்
வியப்பும் அடைந்தேன்!







ஆலிலை யில் குழந்தைக் கண்ணன்
படுத் திருப்பதும் — இந்த
அரசடியில் கணபதியார்
அமர்ந் திருப்பதும்.

சோலை சூழ்ந்த இடத்தில் அன்னை
கோயில் கொள்வதும் — மிகச்
சூசகமாய் மரங்கள் பயன்
உணர்த் திடத்தானே!


— ரா. பொன்ராசன்




கர்நாடக சங்கீத உலகில் வணங்குதற்கு உரிய மும்மூர்த்திகளில் ஒருவர் தியாகராஜர்...
கதை: ஆனந்தி
படம்: விஜு
தியாகராஜர்
முத்துசாமி தீட்சிதர்
சாமா சாஸ்திரி
தெய்வ மனிதர் _ தியாகராஜர்
தியாகராஜரின் மூதாதையர் தெலுங்கு தேசத்திலிருந்து வந்து திருவாரூரில் குடியேறியவர்கள்...
என் பெயர் பஞ்சநத பிரம்மம்... குடியிருக்க வீடு கிடைக்குமா?
பஞ்சநத பிரம்மத்தின் பேரன் ராமபிரம்மம் ஹரி கதை சொல்லுவார்... பஜனை நடத்துவார்...
கிருஷ்ணா ராமா கோவிந்தா- ஹரே ராமகிருஷ்ணா கோவிந்தா!
ராம பிரம்மத்தின் கடைசி மகன் தியாகராஜன், தவறாமல் தந்தையுடன் சென்று...
அச்சுத ரங்கா கோவிந்தா- ஹரே பாண்டு ரங்கா கோவிந்தா!




சங்கீத உபந்நியாசம் செய்ய ஊர் ஊராகச் சென்ற ராமபிரும்மம்... ...
ஆகா! திருவையாறு எத்தனை அழகாக இருக்கிறது... இங்கேயே இருந்து விடலாம் போலிருக்கே!
தஞ்சை மன்னர் துளஜாஜி ராமபிரும்மத்தை வரவேற்றார்...
இன்று ராமாயணப் பிரவசனம் காதுக்கு அமிர்தமாயிருந்தது...
நீங்கள் குடும்பத்துடன் திருவையாறு க்ஷேத்திரத்திலேயே தங்கி விடலாமே...?
ஆச்சர்யம்! என் மனதில் உள்ளதை அப்படியே சொன்னீர்கள்!
ஒரு வீடும் கொஞ்சம் நன்செய் நிலமும் உங்களுக்கு அளிக்கிறேன்.
ராமன் திருவுள்ளம்!
திருவையாறில் ராமபிரும்மம் குடும்பத்துடன் குடியேறினார்... தியாகராஜன்...
அஞ்சனா நந்தனம் வீரம் ஜானகீ சோக நாசனம்.




சீதம்மா! தியாகராஜனுக்குப் படிப்பு நன்றாக வருகிறது. இவனை வடமொழிப் புலவனாக்க வேண்டும்...
சாரீரம் நன்றாக இருக்கிறது. பாட்டுக் கற்றுக் கொடுக்கலாம்..
வீணை காளஹஸ்தி ஐயரின் மகளான சீதம்மா தன் மகனுக்குப் பாட்டுக் கற்றுக் கொடுத்தாள்...
ராமநாம பாயஸக்கே... கிருஷ்ண நாம ஸர்க்கரே
அம்மா என்ன அழகான பாட்டு! யார் பாடியது?
புரந்தரதாஸர் என்ற மகான் இயற்றியது. உன் தாத்தா அடிக்கடி பாடுவார்...
தியாகராஜன் மற்ற சிறுவர்களோடு விளையாடப் போக மாட்டான்...
அப்பா! பூஜைக்கு எல்லாம் தயார். பூ பறிச்சாச்சு... சந்தனம் அரைச்சாச்சு...
பூஜை முடிந்த பிறகு மகன் தியாகராஜனைப் பாடச் சொல்வார் ராம பிரம்மம்.
இந்தச் சிறுவனுக்கு எப்படி இவ்வளவு பக்தி வந்தது?


ஒரு நாள் சுவரில் கரித் துண்டால் தியாகராஜன் எழுத...
என்னடா எழுதறே...?
தியாகராஜன் தான் எழுதியதைப் பாடிக் காட்டினான்...
நவதா ஸோஹம் நவதா ஸோஹம் நவதா ஸோஹம் தாசரதே!
அப்பா ராம பிரும்மமும் வந்து வியப்புடன் கேட்டார்...
வரம் குரு பாஹி விரமஹித ஸ்தாஹி நரவர ஸேவித தாசரதே!
நாட்கள் சென்றன... தியாகராஜன் பல பாடல்களை இயற்றினான். பூஜைக்குப் பிறகு...
தியாகு! இன்று நீ இயற்றிய பாடல் ஒன்றைப் பாடு...
நாகராஜ பாலனாய தியாகராஜ ஸேவிதாய நமோ நமோ ராகவாய அநிசம்
என் தகப்பனாரின் கவித்திறன் இவனுக்கு வந்திருக்கிறது!
என் தந்தையின் இசைத்திறனும் சேர்ந்திருக்கிறது!



நண்பர் கிருஷ்ண சாஸ்திரி ராம பிரும்மத்தைக் காண வந்த போது...
தியாகு! சாஸ்திரிக்கு உன் பாட்டு ஒண்ணு பாடிக் காட்டு...
இந்தப் பக்கம் கிரிராஜ கவியின் பேரன்; அந்தப் பக்கம் வீணை காளஹஸ்தி ஐயரின் பேரன்! ஆக தியாகராஜன் பாடல் இயற்றிப் பாடக் கேட்பானேன்!
தியாகராஜன் பாடினான்...
பரிபாலய பரிபாலய பரிபாலய ரகுநாதா தநுவே நீ கநுவைத ஸதத மௌரா ரகுநாத
கிருஷ்ண சாஸ்திரி பரமானந்தம் அடைந்தார்...
கவிநயமும் சங்கீதமும் ஒருபக்கமிருக்க, சிறுவனின் பக்திதான் ஆச்சர்யமாய் இருக்கு....
அந்தணக்குடிச் சிறுவன் இடத்திலிருந்து தியாகராஜன் பூஜைக்கு மலர் பறித்து வந்தான்...
அட, அந்த வீட்டிலிருந்து பாட்டு கேட்கிறதே!


தினந்தோறும் அந்த வீட்டின் அருகே நின்று, பாட்டுக் கேட்பது தியாகராஜனுக்கு வழக்க மாயிற்று...
ஆஹா!
ஒரு நாள்...
ஏண்டா, பூஜைக்கு நேரமாச்சேன்னு பார்த்தா இங்கே வெட்டிப் பொழுது போக்கிண்டிருக்-கியே!
இல்லையப்பா, பாட்டுக் கேட்டுண்டிருக்கேன்..
ராம பிரம்மம் மகிழ்ந்து...
நீ இவரிடம் பாட்டு கத்துக் கறியா? இந்த வித்வான் பேரு சொண்டி வெங்கடரமணய்யா. துளஜா மகாராஜாவின் ஆஸ்தான வித்வான்.
சொண்டி வெங்கட ரமணய்யாவிடம் சங்கீதம் பயின்றார், தியாகராஜர்...
ஓராண்டிலேயே குருவிடம் எல்லாம் கற்றுக் கொண்டு விட்டார்...
தியாகராஜா! என் நண்பர்களுக்கு 'ஜானகி ரமண' பாடிக் காட்டு!




குரு சொன்ன பாடலைப் பாடிய பிறகு, தியாகராஜர், பிலஹரி ராகத்தில்...
தொரகுநா இடுவண்டி ஸேவ (கிடைக்குமா இப்படிப்பட்ட சேவை)
குரு தாம் போர்த்தியிருந்த சால்வையை தியாகராஜருக்கு அணிந்து...
இப்படிப்பட்ட சிஷ்யன் யாருக்காவது கிடைப்பானா...
ஒரு நாள் காவிரிக் கரையில் ஒரு சந்நியாசி...
உனக்கு ராம ஷடாக்ஷரி மந்திரம் உபதேசம் செய்கிறேன். நாரத மந்திரமும் சொல்லித் தருகிறேன்...
என் பாக்கியம்!
உபதேசம் பெற்றாய்... ஒரு நாளைக்கு இலட்சத்து இருபத்தையாயிரம் ராம நாமா ஜபிக்க வேண்டும்...
செய்கிறேன், சுவாமி!
தியாகராஜனுக்கும் அவர் சகோதரர் ஜல்பேசனுக்கும் திருமணம் நடந்தது... குடும்பம் பெருகியது...
தாத்தா!
பாட்டி!



ராம பிரம்மத்தின் மறைவுக்குப் பிறகு, ஜல்பேசனின் மனைவி...
எப்பப் பார்த்தாலும் பாட்டுத்தான் உங்க சகோதரருக்கு... அரண்மனை வித்வானாக இருந்து நாலுகாசு சம்பாதித்தாலாவது தேவலாம்...
ஜல்பேசனுக்கும் சகோதரனிடம் மனக்கசப்பு...
அது எங்கே; எப்பப் பாரு மூக்கைப் பிடிச்சுண்டு தியானம் பண்ணிண்டிருக்கான். குடும்ப பாரம் முழுக்க என் தலையில்...
தியாகராஜன் நாரதீயம் என்ற சுவடிகளைப் படித்தார்...
புரியலையே, குருவிடம்தான் கேட்க வேண்டும்.
ராமகிருஷ்ணானந்தரிடம் சென்றார் தியாகராஜர்..
நாரத முனிவரைத் தியானம் செய்தால் புரியும்!
ஒருநாள் வயதான ஒருவர் வர, தியாகராஜர் தம் மகன் மனைவியுடன் அவரை வரவேற்று உபசரித்தார்...
வரவேணும், வரவேணும்!



பெரியவர் மூட்டையை அவிழ்த்து ஒரு சுவடிக் கட்டை எடுத்தார்...
நான் தலயாத்திரை போகிறேன். இந்த ஓலைச் சுவடி அபூர்வமானது. பத்திரமாகப் பாதுகாத்து வைப்பாயா?
அப்படியே ஆகட்டும்..
அன்றிரவு நாரதர் கனவில் தோன்றி...
தியாகராஜா! உனக்கு நான் கொடுத்த சுவடிகளைப் படி... உன் சந்தேகங்கள் நீங்கும்!
தியாகராஜர் பூஜை அறையில் வைத்திருந்த சுவடிகளை எடுத்துப் படித்தார்...
முன்னர் புரியாமலிருந்த நாரதீயம் இப்போது புரிகிறதே! குருவின் கருணை!
நாட்கள் சென்றன...
இன்று ஒரு கோடி ராமநாம ஜபம் பூர்த்தி. ஸ்ரீ ராமபிரான் தரிசனம் கிட்ட இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ... ...?
அப்போது கதவை யாரோ தட்ட, தியாகராஜரின் மனைவி திறந்தாள்...
ஆ!
என் தவம் பலித்தது!



வாசலில் விசுவாமித்திரரோடு ராமலக்ஷ்மணர்களின் காட்சி தர, தியாகராஜர் மனமுருகிப் பாடினார்...
ராரா தேவாதிதேவ ராரா மஹானுபாவ . . . .
ஒருநாள் தியாகராஜர் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்தார்...
வாருங்கள்... சுவாமிக்கு எந்த ஊர்...?
மாயவரத்திலிருந்து வருகிறேன்...
அப்படியா! அங்கே நந்தனார் சரித்திரம் பாடிய கோபாலகிருஷ்ண பாரதி இருக்கிறாரே தெரியுமா? ... ரொம்ப நாளாக அந்தச் சிறந்த பாடலாசிரியரைச் சந்திக்க ஆசை.
அடியேன்தான் கோபால கிருஷ்ணபாரதி. உங்களைப் பற்றி நானும் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் ஆசைப்பட்டுக் காண வந்தேன்...
தியாகராஜர் பெரிதும் மகிழ்ந்து தமது சீடர்களைப் பாடச் சொன்னார்...
இந்த ஆபோகி ராகத்தில் நீங்கள் பாடல் இயற்றியிருக்கிறீர்களா?


கோபால கிருஷ்ண பாரதி பதில் கூறவில்லை. கவனமாகப் பாட்டைக் கேட்டார்...
ஆகா...!
அன்றிரவு காவிரிப் படுகையில் படுத்தபடி திருவாதிரை நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்த கோபால கிருஷ்ண பாரதியார்...
திருவாதிரை... சிவபெருமானின் திரு நட்சத்திரம்...
ஆபோகியில் அற்புதமான பாடல் உருவாயிற்று...
சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா — தில்லை...
மறுநாள் தியாகராஜரின் வீட்டில் பூஜை முடிந்ததும்...
இப்போது பாட அனுமதி உண்டா?
அவசியம் பாடுங்கள்!
கோபால கிருஷ்ண பாரதி ஆபோகி ராகத்தில் இரவு உதயமான பாடலைப் பாட...
ராக பாவம் அற்புதமாயிருந்தது... பக்தி பாவத்துடன் தமிழ், காதுக்கு எத்தனை இனிமை!




தியாகராஜ சுவாமி தினமும் தம்புராமீட்டிப் பாடிப்படியே உஞ்சவிருத்திக்குப் போவார்...
இவர் தெய்வமேதான்!
பெண்கள் தங்கள் வீட்டு வாசலில் தியாகராஜருக்கு பிச்சை இட்டு, வலம் வந்து, வணங்கினர்.
தியாகராஜரின் புகழ் பரவ, தஞ்சை சரபோஜி மகாராஜா அவரைக் கௌரவிக்க எண்ணினார்...
சுவாமியை அழைத்து வர மகாராஜா பல்லக்கு அனுப்பி -யிருக்கிறார்.
இதற்கிடையில் காவிரியில் ஜல்பேசன் குளித்துக் கரையேற...
ஜல்பேசா! உங்க வீட்டில் அரண்மனைச் சேவகர்கள்! தட்டுத் தட்டாகப் பரிசுகள் அனுப்பியிருக்கிறார், மகாராஜா!
ஜல்பேசன் வீட்டுக்கு விரைந்தான்...
அசடு தியாகராஜனுக்குப் பக்திப் பைத்தியம் முற்றி விட்டது! அரண்மனைச் சேவகர்களிடம் ஏதாவது ஏடாகூடமாகச் சொல்லித் திருப்பி அனுப்பி விடுவான்.


ஜல்பேசன் ஓடி வருவதற்குள்...
நான் நினைத்த படியே ஆச்சு... எல்லாத்தையும் திருப்பி எடுத்துண்டு போறாளே...
தியாகராஜரைக் கடிந்து கொண்டான் ஜல்பேசன்....
ராஜாவிடம் மரியாதைக் குறைவாக நடக்கலாமா?
என் ராமனை விட்டு நான் போகமாட்டேன்; அரசர் விரும்பினால் இங்கு வந்து ராமனைத் தரிசிக்கலாமே?
தியாகராஜர் பூஜை அறையில் பாடினார்...
நிதிசால ஸுகமா ராமுநி ஸந்நிதி ஸேவ ஸுகமா? நிஜமுக பல்கு மனஸா....
(செல்வம் சுகம் தருமா? ராமன் சந்நிதியில் சேவை செய்வது சுகமா? மனமே உண்மையைச் சொல்!)
ஜல்பேசனுக்கு மகா கோபம்... அன்றிரவு சீதா ராம லக்ஷ்மண விக்ரகங்களைக் கொண்டுபோய் காவிரியில் எறிந்து விட்டான்...
இனிமே தியாகராஜன் எதை பூஜை பண்ணுவான் பார்த்துடறேன்.
மறுநாள் காலை தியாகராஜர்...
கருணா மூர்த்தி! என்னை விட்டுப் போய் விட்டாயா! நான் என்ன தவறு செய்தேன்?


இரண்டு மாதங்கள் சரியாக உணவு கூட அருந்தாமல் பித்துப் பிடித்தவர் போல் ஆனார் தியாகராஜர்... ஓர் இரவு கனவில்....
என் ராமன் இருக்கிறான்! ராமா! ராமா! வந்து விட்டேன்!
மறுநாள் காலை ஆற்றில் மூழ்கி விக்கிரகங்களைத் துழாவி எடுத்தார்...
கண்டு கொண்டேன் ராமா! கண்டு கொண்டேன்!
தியாகராஜ சுவாமியின் மகள் சீதாலக்ஷ்மிக்குத் திருமணம் நடந்தது... திருமணப் பரிசாகத் தமது சீடர்...
...வாலாஜாபேட்டை வெங்கடரமண பாகவதர் ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படத்தை எடுத்து வருவதை அறிந்த தியாகராஜர் எதிர்கொள்ள விரைந்தார்... பாடினார்...
நன்னு பாலிம்ப நடசி வச்சிதிவோ... (என்னைக் காக்க நீ நடந்து வந்தாயா....
தலயாத்திரை சென்ற தியாகராஜர் திருப்பதியை அடைந்தார். சந்நிதியில் திரை போட்டிருந்தது...
தெரதீயகராதா லோநி திருபதி வேங்கட ரமண


திரை தானாக விலக, வெங்கடாசலபதி தரிசனம் கிடைத்தது...
ஊர் ஊராகத் தலயாத்திரை செய்தவர், கோவூரை அடைந்தார். அங்கு சுந்தரேச முதலியார் தியாகராஜரின் சீடர்களிடம்....
சுவாமிகள் பணம் பெற மறுத்து விட்டார்... பல்லக்கில் ஆயிரம் பொற்காசு மறைத்து வைத்திருக்கிறேன். ... பத்திரம்!
திருவொற்றியூர் வரும் வழியில் திருடர்கள்...
ஏய்! பல்லக்கை இறக்கு!
திடீரென்று திருடர்களை இருதிசைகளிலிருந்து அம்புகள் தாக்க...
ஐயோ! உயிருக்கு ஆபத்து! சாமி கால்ல விழு!
சாமி! எங்களை விட்டுடச் சொல்லுங்க... இனிமே திருடவே மாட்டோம்...
என்னப்பா சொல்கிறீர்கள்?


சாமி! முன்னையும் பின்னையும் ரெண்டுபேர் எங்களை அடிபு போட்டுத் தாக்கினாங்களே, பார்க்கலையா? இப்ப அவங்களைக் காணுமே!
ராமா! என்னைக் காக்கப் பின்னோடு வருகிறாயா? திருடர்களுக்குக் காட்சி அளித்த நீ, எனக்கு ஏன் தரிசனம் தரவில்லை?
திருவையாறு திரும்பிய தியாகராஜர், ராமனை அடைய ஏங்கித் தவமிருந்தார்...
பகுள பஞ்சமி தினம்... சீடர்கள் பாடிக் கொண்டிருக்க, ராமபிரான் தியாகராஜருக்கு மட்டும் காட்சியளித்து...
வா! என்னுடன் ஐக்கியமடைந்து விடு!
கர்நாடக சங்கீதத்துக்கு ஏற்றம் தந்த தியாகராஜ சுவாமிகளின் ஆராதனையை சங்கீத வித்வான்கள் ஆண்டு தோறும் நடத்துகிறார்கள்....
எந்தரோ மஹானு பாவு



Colour Photo: Yoga.

ஒரு மரத்துப் பறவைகள்



7

பள்ளி நூலகத்தை விட்டு வரிசையாக வகுப்புக்கு வந்து சேர்ந்தார்கள். பவித்ரா அவர்களை வரவேற்பவள் போல் அங்கே நின்று கொண்டிருந்தாள்.

தலைமையாசிரியை, பவித்ராவைத் தனியே தம் அறைக்கு அழைத்து என்ன சொன்னாரோ என்பதையறிந்து கொள்ள ஆர்வத் துடிப்போடு இருந்தனர் மற்ற மாணவிகள்.

திவ்யாவுக்கு அந்த ஆர்வமெல்லாம் இல்லை என்று தோன்றியது. இலேசாக உதடுகளைக் குவித்து ஏதோ ஒரு சினிமாப் பாட்டை விசில் அடித்துக் கொண்டிருந்தாள்.

''என்னடி இது, ஆண் பிள்ளை மாதிரி விசில் அடிக்கிறே?'' என்று கேட்டாள் பவித்ரா.

''நீ சும்மாயிரு! விசில் அடிப்பது என்ன பையன்களுக்கு மட்டுமே தனி உரிமையா? சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே!'' என்று கம்பீரமாக எழுந்து நின்று சொன்னாள் வித்யா.

''சரி சரி, எச்.எம். என்ன டோஸ் கொடுத்தாங்க? அதைச் சொல்லு.'' என்றாள் பல்லவி.

''டோஸா? ஏன் அட்வைஸாயிருக்கக் கூடாதா?'' என்று கேட்டாள் மீனா.

தலைக்குத் தலை பேச ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை அடக்க, அங்கே நடந்ததைச் சொல்லி விட வேண்டுமென்று தோன்றியது பவித்ராவுக்கு. அப்போது தலைமை ஆசிரியை கடைசியாகக் கூறியது அவள் காதுகளில் ஒலித்தது.

'பவித்ரா, நீ பணக்கார வீட்டுப் பெண் என்று கேள்விப்பட்டேன். இவ்வளவு பண்புள்ள பெண்ணாகவும் இருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். வருங்காலத்திலே நீ ஓர் அமைப்புக்கோ அல்லது நிறுவனத்துக்கோ தலைமை ஏற்றுத் திறம்பட நிர்வகிக்கும் திறமை உனக்கு ஏற்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. உன் வகுப்புக்கு வரும் ஆசிரியைகள் எல்லோருமே ஒருமனதாக உன்னைப் பாராட்டுகிறார்கள். நேர்மைக்கும் நியாயத்துக்கும் நிறைய மதிப்புக் கொடுக்கிற நீ, சில சமயங்களிலே ஆசிரியைகளிடத்திலும்... ஏன் என்னிடத்திலும் கூட ஏதாவது குறைகளைக் காணலாம். உன்னைப் போல நல்ல மாணவிகள் பலரை நான் இந்தப் பள்ளியிலே பார்க்கிறேன். உங்களைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு, இருக்கிற சூழ்நிலையிலே எங்களால் இயன்றவரை நல்ல காரியங்களைச் செய்ய நினைக்கிறோம். அதற்காக எங்களை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்

துரை அழகன்

டும். ஏதோ மேம்போக்காகப் பார்த்து, எங்களைத் தரக்குறைவாக எண்ணி விட்டால், எங்கள் போதனைகளி லும், வழிநடத்தல்களிலும் உங்களுக்கு நம்பிக்கையும் ஏற்படாது; பின்பற்ற வேண்டுமென்ற சிரத்தையும் உண் டாகாது. ஆகவே, உன் வகுப்பு மாண விகளை மட்டுமல்ல; இந்தப் பள்ளி மாணவத் தலைவி நீ என்ற காரணத் தோடும், கடமையுணர்வோடும், எல்லா வகுப்பு மாணவிகளையுமே நல்வழிப்படுத்தணும். அதற்கு உன் னைப் போன்றவர்கள் முன்மாதிரி யாக நடந்து காட்டணும். இதையெல் லாம் உன் மனத்திலே பதிய வைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டாம். வழி நடத்து.முன் மாதிரியாயிரு. மற்றவர்கள் தாமா கவே உன் மாதிரி ஆகி விடுவார்கள்!'

தலைமை ஆசிரியை அவர்களின் வார்த்தைகள் அவள் செவிகளை விட்டு நீங்குமுன், ''யார் இங்கே பவித்ரா?'' என்ற ஓர் அதட்டலான குரல் கேட்டது.

திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தவள் தன் முன்னே தன் வகுப்பு மாணவி நவநீதத்துடன் யாரோ ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அவர் கையிலே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. அவருக்கு நாற்பது வயது இருக்கலாம். தலையில் பாதி வழுக்கை; மீதியில் பாதி நரைத்திருந் தது. அவர் அந்த வகுப்பை முறைத் துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நான்தான் பவித்ரா. நீங்க யாரு? நவநீதம்! இது யாரும்மா?'' அவளைப் பார்த்துக் கேட்டாள் பவித்ரா.

''ஓகோ, நீதானா? நீ பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணாமே? இருந்திட்டுப் போ! அதுக்காக உன் அதிகாரம் இங்கே கொடிகட்டிப் பறக் கணுமா?'' அவர் ஆத்திரமாகப் பேசி னார்.

''முதலிலே சிகரெட்டை அணைச்



கப் போடுங்க. நாங்கள் படிக்கிற பள்ளிக்கூடம். எங்களுக்குக் கோயில் மாதிரி. கோயிலிலே சூடம் சாம்பிராணி புகையிருக்குமே தவிர, சிகரெட், பீடி புகை இருக்காது. எந்த இடத்தில் எதைச் செய்யணுங்கிறது உங்களுக்குத் தெரியாதா? யார் நீங்க?''

''ஆங், நவநீதத்துக்குத் தாய்மாமன் நான், ஊரிலேருந்து வந்திருக்கேன்.''

''என்ன விஷயம்? சிகரெட்டை விசி எறியுங்க,'' என்று வெறுப்பை உமிழ்ந்தாள் பவித்ரா.

மற்ற மாணவிகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நவநீதம் பதற்றத்துடன் காணப்பட்டாள்.

''சொன்னால் கேட்டியா மாமா? நீ வராதேன்னேன். நீ ஏன் வந்தே?'' என்று அதட்டாத குறையாகக் கேட்டாள், நவநீதம்.

''வந்தால் என்ன? பள்ளிக்கூடம்னா பெரிய இதுவா...?''

''ஆமாம்... எங்களுக்குப் பெரிய கோயில்தான் பள்ளிக்கூடம். இங்கேயிருக்கிற ஆசிரியைகள் எங்கள் தெய்வங்கள். நாங்கள் எல்லாம் பக்தர்கள். பயபக்தியோடு இருந்தால்தான் எங்களுக்குப் படிப்பு ஏறும்,'' என்று இருக்கையிலிருந்தே கூவினாள் மீனா.

''சும்மா... ஆளுக்கு ஆள் பேசாதீங்கம்மா!'' என்று எரிச்சலோடு கூறிக்கொண்டே, எரிந்து கொண்டிருந்த சிகரெட்டை வீசி எறிந்தார் அவர்.

''முதலிலே அதை அணைச்சிட்டு வாங்க. டீசன்ஸி வேணும். பேச்சிலும் செய்கையிலும்...'' என்று கூறினாள் பவித்ரா.

அவர் வீசிப்போட்ட சிகரெட்டைக் காலால் தேய்த்து அணைத்துவிட்டு, வெறுப்போடு திரும்பி வந்தார்.

''படிக்கிற இடத்திலே சிகரெட் துண்டைப்பார்த்தால், யாராவதுசிரிப்பார்கள். அதிலும் பெண்கள் படிக்கிற இடத்திலே,'' என்று சலித்துக் கொண்டே ஓடிப் போய், அதை உருத் தெரியாமல் அழித்துவிட்டு வந்தாள் வஹிதா.

''இப்போது வந்திடுவாங்க எங்க டீச்சர். என்ன வேணும், உங்களுக்கு?'' என்று கேட்டாள் பவித்ரா.

''ஒண்ணும் வேண்டாம்... நீங்க போங்க மாமா!'' என்று அவள் கையைப் பிடித்துத் தள்ளினாள் நவநீதம்.

''நீதான் சொல்லேன். எதற்காக அவரை அழைச்சுக்கிட்டு வந்திருக்கே? முரட்டுத்தனமாப் பேசறாரே...?'' என்று வினவினாள் திவ்யா.

''நான் கேட்கிறேன். எனக்கென்ன பயம்? இந்தப் பொண்ணு நவநீதத்தை நாலு நாளைக்குப் பள்ளிக்கூடம் வரக் கூடாதுன்னு தள்ளி வச்சிட்டியாமே?''

''ஓ... அதுவா? இரண்டு நாள்தான் அவளைச் சஸ்பெண்ட் பண்ணியிருக்காங்க. வியாழன், வெள்ளி இரண்டே நாள்! சனி, ஞாயிறு விடுமுறையாப் போச்சுது. ஆக, உங்கள் கணக்குப்படி நாலு நாள்! அதுவும் நான் ஒண்ணும் அவளை சஸ்பெண்ட் பண்ணலே. சயன்ஸ் டீச்சர்தான்,'' என்றாள் பவித்ரா.


''நீதான் காட்டிக் கொடுத்தியாமே?'' கோபத்தோடு கேட்டார் நவநீதத்தின் மாமா.

''ஆமாம்... நவநீதம் பெரிய கட்டபொம்மன் மாதிரி வீரத்தைக் காட்டி

''நல்ல மாம்பழம்மா, நாரே இருக்காது; வாங்குங்கம்மா.''

''போன தடவை மாம்பழம் கொடுக்கும் போதும் இதே மாதிரி இருக்காதுன்னுசொன்னே; அந்த மாம்பழத்து நாரை எடுத்து, நான் பூக்கட்டி இப்ப தலையில வைச்சிருக்கேன்.''

— அண்ணாமலைநகர் வைர மாணிக்கம்.





னாள். நான்தான் எட்டப்பன் மாதிரிக் காட்டிக் கொடுத்துட்டேன். உண்மை தெரியுமா உங்களுக்கு? ஏன் நவநீதம், உண்மையை நீ சொல்லலையா? என்று அவளைப் பார்த்துக் கேட்டாள்.

''எதையோ தள்ளிட்டாளாம். அது உடைஞ்சிட்டதாம். அதுதான் ஏற்கெனவே உடைஞ்சு இருந்ததாமே? அதுக்குப் போயி... பள்ளிக் கூடமே வர வேண்டாம்னு செய்திடறதா?'' எரிந்து விழுந்தார் அந்த மனிதர்.

விஷயத்தைக் கேளுங்க. நவநீதம் லேப்பிலே, அதாவது விஞ்ஞானப் பரிசோதனைக்கூடத்திலே மூளையைத் தள்ளி உடைச்சிட்டா...'' என்று விளக்கம் தர முன்வந்தாள் பல்லவி.

''மூளையா...? அது வெளியேயிருக்குமா? அதை உடைக்க முடியுமா? ஆட்டு மூளையாயிருந்தாலும்... கீழே போட்டால் அது ஒண்ணும் உடையாதே!'' என்று பெரிதாக வானத்தைப் பார்த்து யோசித்தார் அவர்.

சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது மாணவிகளுக்கு.

''ஊருக்குப் புதியவரை ஏண்டி இங்கே கூட்டி வந்தே?'' என்று நவநீதத்தை நோக்கிக் கேட்டாள் திவ்யா.

''பாவம் இவரு! மழைக்குக் கூடப் பள்ளிக்கூடம் ஒதுங்கியிருக்க மாட்டார் போலிருக்கே!'' என்று தன் வியப்பை வெளியிட்டாள் வித்யா..

ஒரு வழியாக அவர்களை அடக்கி விட்டு, பவித்ரா சொன்னாள், "நவநீதம்மாமா! நடந்தது இதுதான். டீச்சர் எக்ஸ்பிரிமென்ட் செய்து காட்டிக்கிட்டிருந்தாங்க. நவநீதம் அதைக் கவனிக்காமல் அதோ இருக்காளே, அந்த ஹேமாவோடு சேர்ந்துக்கிட்டு ஏதோ ஒரு மர்மக்கதைப் புத்தகத்திலே படம் பார்த்துக்கிட்டு இருந்தா. அவசரம். ஆசிரியையோ மற்ற மாணவிகளோ பார்த்துவிடக் கூடாதே என்ற பயம். ஆனால் அந்த மோசமான படங்களைப் பார்க்க வேண்டுமே என்கிற ஆசை. பரபரப்பு! அவள் இழுக்க, இவள் இழுக்க, அந்த வேகத்திலே அந்தப் புத்தகமே கிழிய, ஹேமா கண்ணாடி ஜாடியைத்தள்ள... நல்ல வேளை, அது உடையல்லே. நவநீதம் மூளை மேலே விழுந்து, அது சாய்ந்து கீழே விழுந்து உடைந்து விட்டது. சயன்ஸ் டீச்சர் கவனிச்சுட்டாங்க. அதற்கப்புறம்தான் சஸ்பென்ஷன்! ஹேமா வந்திட்டாளே! அவள் யாரையும் கூட்டிக்கிட்டு வரலியே? நீ ஏன் நவநீதம்?" என்று பவித்ரா நவநீதத்தின் முகத்தை நிமிர்த்திக் கேட்டாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

"விஷயம் தெரிந்தால் வீட்டிலே திட்டுவார்களே என்று நடந்ததைப் பாதி மறைத்துச் சொன்னேன். ஊரிலேயிருந்து வந்திருக்கிற இந்த மாமா என் கூட வந்து இப்படிப் பண்ணுவாருன்னு எனக்குத் தெரியாது."

"எனக்கும் தெரியாது பாப்பா, மன்னிச்சுக்கோ. ஏதோ கோபம் வந்திடுச்சி. வந்திட்டேன். நான் எப்பவுமே இப்படித்தான். நான் அவ்வளவாப் படிச்சவன் இல்லேம்மா!" என்று பவித்ராவிடம் சொல்லிவிட்டு, "ஏன் நவநீதம், அது இன்னா... நீ பாடம் படிக்க வந்திட்டு... படிக்கக் கூடாத விஷயத்தையெல்லாம் படிக்கறியாமே? அப்படி ஒரு அசிங்கமான புஸ்தகம் ஒனக்கு எப்படிக் கிடைச்சுது?" என்று அவர் நவநீதத்தின் கைகளை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு கேட்டார்.

நவநீதத்தின் கண்கள் 'பொல, பொல'வென்று நீரைப் பொழிந்து விட்டன.

"என்ன இது, நம்ம வாத்தியார் பெஞ்ச் மேல நிக்கறார்?"

"நேத்து நமக்குக் கிளாஸ் எடுக்காமக் கட் அடிச்சிட்டுச் சினிமாவுக்குப் போனாரில்லே... அதான் ஹெட்மாஸ்டர் பெஞ்ச் மேல நிக்க வச்சுட்டார்."

— சா. இரா. மணி.

"சரி சரி, நீங்க போயிடுங்க. நல்ல வேளை, டீச்சரையே பார்த்துக் கேட்காமேஇருந்தீங்களே?" என்று அவரை அங்கிருந்து போய்விடுமாறு துரிதப் படுத்தினாள் பவித்ரா.

நவநீதம் கண்களைத் துடைத்துக் கொண்டு வகுப்புக்குள் சென்றாள். நவநீதத்தின் மாமா வேகமாகப் போய் விட்டார், தன்னையே நொந்து கொண்டு.

சிறிது நேரம் வரை வகுப்பில் அமைதி நிலவியது. எஸ்தர்மேரி இருக்கையை விட்டு எழுந்து வந்தாள். பவித்ராவின் காதுகளில் ஏதோ முணுமுணுத்தாள்.


"மூட்டுகிறாள், மூட்டுகிறாள், ஏதோ கலகம் மூட்டுகிறாள்," என்று திருத்தமாகக் கூவினாள் திவ்யா.

"ஆமாம். குற்றமுள்ள நெஞ்சு தானே குறுகுறுக்கும்? தவறு செய்து விட்டு, ஹேமாவும் நவநீதமும் மாட்டிக் கொண்டு தண்டனை அனுபவித்து விட்டார்கள். ஆனால் அதே போல, தவறு செய்துவிட்டு, மாட்டிக் கொள்ளாமே, தைரியமாயிருக்கிற ஒருத்தியை என்ன பண்ணலாம்?" என்று திவ்யாவை நோக்கிக் கேட்டாள் பவித்ரா.

திருதிருவென்று விழித்துவிட்டுத் தண்ணீர் குடிக்கச் செல்வது போல் வகுப்பின் ஓரமாகச் சென்று வேறு புறமாகத்திரும்பி நின்றுகொண்டாள் திவ்யா.

"திவ்யா! மரியாதையாக அந்தப் படங்களை என்னிடம் கொடுத்து விடு," என்று உரக்கக் கேட்டாள் பவித்ரா.

"எந்தப் படம்...? ஏது படம்?" என்று அவள் புரியாதவள் போல்



கேட்டாள்.

மற்ற மாணவிகளுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் எஸ்தர்மேரி மட்டும் திவ்யாவைப் பார்த்துப் புன் னகை புரிந்தபடி நின்றாள்.

''நான் பார்த்துவிட்டேன் திவ்யா! நீ நூல் நிலையத்திலே ஒரு புத்தகத்தி லேயிருந்து, அந்தக் கலர்ப் படங் களைக் கிழிச்சு எடுத்துக்கிட்டதை நான் பார்த்தேன். அதை லீடரிடம் கொடுத்திடு. இல்லே... நீயே போய்... அதே புத்தகத்திலே ஒட்டிக் கொடுத் திட்டு, நூலகப் பொறுப்பாசிரியை யிடம் மன்னிப்புக் கேட்டுக்கிட்டு வா,'' என்றாள் எஸ்தர்மேரி உறுதி யான குரலில்.

''சீச்சீ! லைப்ரரி புக்கை இப்படி யெல்லாம் பாழ் ஆக்கலாமா? அது தான் நம்மை லைப்ரரிக்குள்ளேயே விடாமே இருந்தாங்க,'' என்று வெறுப்பை உமிழ்ந்தாள் வடிவழகி.

கேட்கவே வேதனையாக இருந் தது பவித்ராவுக்கு. ''என் முகத்திலே கரியைப் பூசாதே திவ்யா. தயவு செய்து எஸ்தர் சொன்ன மாதிரி உட னடியாகச் செய், போ!'' என்று அவ ளைக் கெஞ்சும் பாவனையில் கேட் டுக் கொண்டாள்.

''அவள் திருந்தவே மாட்டாள்!'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள் பவித்ரா.

நூலகப்பொறுப்பாசிரியை அங்கே 'திடீர்' என்று வந்து நின்றிருந்தார்.

''நூல்களை எடுத்துச் சரியாக அடுக்கி வைத்த போதுதான் என் னால் அந்தப் புத்தகத்தைக் கவனிக்க முடிந்தது. அது நான் விரும்பிப் படிக் கும் புத்தகங்களுள் ஒன்று. இந்தியச் சுதந்திர வரலாறு பற்றிய நூல் அது. அதிலே தேசியத் தலைவர்கள் பலரு டைய படங்கள் நல்ல ஆர்ட் பேப்பரில் பல வண்ணங்களில் இருந்தவை. அப்ப டியே கிழித்துக் கொண்டு வந்து விட்டாள். இந்தவகுப்புத்தானே லைப் ரரிக்கு வந்தது என்று விசாரிக்க இங்கே வந்த பிறகுதான் யார் செய் தது என்பது வெளிப்பட்டது. இவளை என்ன செய்யலாம்?'' என்று கேட்டார், அவர்.

''தவறுகள் தொடரக்கூடாதம்மா. அப்புறம் அது தவறு ஆகாது. ஆணவம் ஆகிவிடும்,'' என்றார் ஆசிரியை.

''சத்தியமா... நான் இனி இது மாதிரி தவறு செய்ய மாட்டேன்,'' என்றாள் திவ்யா கலங்கிய கண்க ளுடன்.

''சரி... அந்தப் படங்களைக் கொடு,'' என்று கேட்டார் ஆசிரியை.

உடனே, தான் கிழித்துப் பையில் வைத்துக் கொண்ட அந்தத் தாள் களைக் கொண்டு வந்து தந்து, தலை யைத் தொங்கவிட்டுக் கொண்டு நின் றாள் திவ்யா.

''பவித்ரா! என்னை மன்னிச்சிடடி இனிமே நான் அரட்டை அடிக்க மாட் டேன். உனக்குச் சத்தியமா அடங்கி நடக்கறேண்டி,'' என்று கெஞ்சினாள் திவ்யா.


''மன்னிப்போம்... மறப்போம்'' என்று பவித்ராவிடம் சொல்லிவிட் டுப் போய்விட்டார் ஆசிரியை.

அதற்குப் பிறகு சற்று நேரம் வரை வகுப்பில் நிலவிய அமைதியைக் கலைத்தது திடீரென்று எங்கிருந்தோ கிளம்பி வந்த பாட்டு!

அந்தப் பாட்டு பக்கத்திலிருந்து உச்ச ஸ்தாயியில் பாடுவதைப் போலவே அவர்கள் அனைவரின் காது களையும் பிளந்தது.


தம் காதுகளை மூடிக் கொண்டே அந்தவகுப்புக்குள் நுழைந்தார் தமிழா சிரியை எழில்வதனி. பத்து நிமிடங்க ளாகியும் அவரால் பாடம் நடத்த முடியவில்லை. பாடத்தைக் கெடுக்கும் அந்தப் பாடல் எங்கிருந்து ஒலிக்கி றதோ?

(தொடரும்)



எங்கப்பா நிக்கிற லாரியைத் தள்ளி ஓட வைப்பார். அவர் பெரிய பயில்வான்!
இதென்ன பிரமாதம்; எங்கப்பா நிக்கிற பஸ்ஸை ஊதியே ஓட வைப்பார்!
எப்படி?
எங்கப்பா கண்டக்டர் ஆச்சே!
உன்னோட தாத்தா வீட்டை விட்டு ஓடிட்டாராமே, ஏன்டா?
முதியோர் பள்ளியில இரண்டாம் வகுப்பு பெயிலாயிட்டாராம்; அப்பா திட்டுவார்னு வீட்டை விட்டு ஓடிப் போயிட்டார்!
ஸ்கூல் ஸ்மைல்
கிள்ளிவளவன் சார்... உங்க பசங்க நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இரண்டு பேரையும் கொஞ்சம் கண்டிச்சு வைங்க.
ஏன் சார், அப்படி என்ன செய்தாங்க?
மற்ற மாணவர்களை எப்பவும் கிள்ளிக்கிட்டே இருக்காங்க
அவுங்க தாத்தாவைக் குதிரை தின்னிடிச்சாம
அதெப்படித் தின்னும்?
அதான் அவர் கொள்ளுத் தாத்தாவாச்சே!
அம்மா பரீட்சைக்குப் போயிட்டு வாரேன்!
சரிப்பா. பார்த்து எழுது.
பார்த்து எழுதினா உள்ளே தள்ளிடுவாங்க!
அந்த போட்டோகிராபர் மகன் ஏங்க பாடத்தையெல்லாம் ஒழுங்கா படிக்கவே மாட்டேங்கறான்?
அவன் அறிவு இன்னும் சரியா டெவலப் ஆகலையாம்!

உண்மைக் கதை



பாகிஸ்தான் எல்லையில் ஓர் இராமர் கோயில்

முன்னி, கடலை மாவு, கோதுமை மாவு, அரிசி மாவு என்று ஒவ்வோர் அயிட்டமாகத் திறந்து விரலில் நெருடிப் பார்த்தாள்.

''எல்லாம் மூன்று தடவை அரைச்சிச் சலிச்சு வச்சிருக்கேம்மா. தேவைக்கு அதிகமாகவே நைசா இருக்கும்,'' என்றாள் ரத்னாபாய் தன் கைகளைத் துடைத்தவாறே.

''உண்மைதான் ரத்னாபாய்,'' என்று தனது மனநிறைவை வாய் விட்டுக் கூறிய முன்னி, சுருக்கைப் பையைத் திறந்து பணமெடுத்தாள்.

''பேசியது இருபத்திரண்டு ரூபாய். இருபதுதான் கொடுத்திருக்கே. இன்னும் இரண்டு ரூபாயை வை.''

''கொஞ்சம் குறைச்சுக்கக் கூடாதா ரத்னாபாய்? பத்து நாளில் இருபது ரூபாய் சம்பாதிச்சுட்டியே! ரொம்பப் பேராசைதான்!''

''காலை ஆட்டி உட்கார்ந்துட்டுச் சம்பாதிக்கலே முன்னி. ஓய்வு ஒழிவு இல்லாம, இராத் தூக்கமில்லாம கல் இயந்திரத்தோட போராடி மாவரைச்சுச் சம்பாதித்த பணம். என் கையைப் பார்த்தியா?''

ரத்னாபாய் கையை நீட்டினாள். உள்ளங்கையில் கொப்புளங்கள். சில இடங்களில் மேல்தோல் உரிந்து சதை தெரிந்தது.

முன்னி மறுபடி சுருக்குப் பையைத் திறந்து மேலும் இரண்டு ரூபாய் நாணயமாக எடுத்து வைத்தாள். வண்டியோட்டி உள்ளே வந்து டின்களை எடுத்து வண்டியில் அடுக்கினான்.

தண்ணீர் வாங்கிக் குடித்தபடி முன்னி ரத்னாபாயிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''உன் ஒருத்திக்காக எதுக்கு இப்படிக் கை கொப்புளிக்கப் பாடு படறே?''

ரத்னாபாய் சிரித்தாள். ''என்னை நம்பி நாலு பேர் இருக்காங்க,'' என்றாள்.

முன்னிக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுக்குத் தெரியும் ரத்னாபாய் ஓர் அனாதை; அவளுக்குத் துணை யாருமில்லை என்று.

ரத்னாபாய் மாடத்தைத் திறந்து காட்டினாள். உள்ளே கல்லால் ஆன ஓரடி உயர அழகிய ராம லட்சுமணர் சிலைகள் சிரித்தபடி நின்றன. அனுமனின் முகத்தில் இருந்த பணிவும், சீதையின் முகத்தில் இருந்த கனிவும் பார்ப்போரைக் கையெடுத்துக் கும்பிட வைத்தன. வண்ண ஆடை உடுத்து, புதுமலர்கள் சூடி, சந்தன, குங்குமம் அணிந்து புதுப்பொலிவுடன் இருந்தனர் நால்வரும்.

''பத்து வருடங்களுக்கு முன்னால் நான் தேட்டாபூரில் பால் வியாபாரம் செய்து வந்தேன். ஒரு நாள் இரவு சன்னியாசி ஒருவர் வந்து திண்ணையில் படுத்திருந்தார். அன்று பார்த்து நடு இரவில் கொள்ளைக்காரர்கள்

ஜெரிசிங்

தீவட்டியோடு வந்தனர். சன்னியாசி ஒரு மூட்டை வைத்திருந்தார். அதைப் பிரித்துப் பார்த்தனர். இந்த ராமர் சீதை சிலைகளுடன் இரண்டாயிரம் ரூபாய் பணமும் அந்த மூட்டையில் இருந்தது. 'ராமருக்குக் கோவில் கட்டச் சேர்த்து வரும் பணம் அது. அதைத் தொடாதீர்கள்!' என்று சன்னியாசி கொள்ளையர் தலைவனின் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார். கொள்ளைக்காரர்கள் சன்னியாசியை உதைத்துவிட்டுப் பணத்தோடு சென்று விட்டனர். என் இரண்டு பசுக்களையும் கூட அவர்கள் விடவில்லை. ஓட்டிச் சென்று விட்டனர்.

''சன்னியாசி அதற்குப் பிறகு ஒரே ஒரு நாள்தான் உயிருடன் இருந்தார். நம் வீட்டில் தங்க அனுமதித்ததால் தானே அவருக்கு அந்த நிலை என்று நான் வருந்தினேன். அப்போது, 'என் ராமனுக்கு ஒரு சின்னக் கோவில் கட்டுவதாக வாக்குக் கொடுப்பாயா?' என்று இறக்கும் நிலையில் சன்னியாசி என்னைக் கேட்டார். அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும் நிலையில் நான் இல்லை. அவர் மன அமைதியுடன் இறக்க வேண்டும். என்ற எண்ணத்தில் அவர் விரும்பியபடியே வாக்குக் கொடுத்தேன். அந்தச் சிலைகளையும் அவற்றுக்குக் கோவில் கட்டும் பொறுப்பையும் என்னிடம் கொடுத்துவிட்டு அமைதியாக உயிர் நீத்தார் சன்னியாசி.''

ஏதோ கதை கேட்பது போல் முன்னி, ரத்னாபாய் சொன்னதை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். ரத்னாபாய் தொடர்ந்தாள்:

''நான் படிக்காதவள். எந்த வேலையும் அறியாதவள். சொத்து பத்து எதுவுமே இல்லாதவள். என் சோத்துக்கே தாளம்! இந்த நிலையில் கோவில் கட்டுவது நடக்கக் கூடிய காரியமா? ஆனாலும் என்னை நம்பித் தன் குடும்பத்துடன் வந்துள்ள ராமன், என்னைக் கைவிட மாட்டார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருந்தது. இரண்டு கல்லுரல்களைப் போட்டு மாவரைத்துக் கொடுக்கத் தொடங்கினேன். எனக்குத் தெரிந்தது இதுதானே? அக்கம் பக்கத்து மக்கள் தேடிக் கொண்டு வருகிறார்கள். திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் என்றால் கொஞ்சம் கூடவே கிடைக்கும். சிக்கனமாக இருந்து அரை வயிறு சாப்பிட்டுக் கொண்டு கோவில் கட்டப் பணம் சேமிக்கிறேன்.''

''ரத்னாபாய், இதுவரை பத்து வரு



ஷமாக எவ்வளவு சேர்த்திருப்பாய்?''

சுற்றுமுற்றும் பார்த்த ரத்னாபாய் தணிந்த குரலில், ''ஐயாயிரம் ரூபாய்க்கு மேலிருக்கும். எங்கே வைச்சிருக்கேன்னு மட்டும் கேட்காதே. அது எனக்கும் இந்த ராமனுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம். ராமனைக் குடும்பத்தோட உட்கார வைத்துவிட்டு, 'இனிமே உன்பாடுப்பா'ன்னு உட்கார்ந்துடலாம்னு நினைச்சிருக்கேன். அதுவரை ராமன் என்னை உயிருடன் வைத்திருந்தால் போதும்,'' என்றாள்.

நாட்கள் ஓடின.

அன்று மாலை முன்னி பதற்றத்துடன் ஓடி வந்தாள். ''ரத்னாபாய், ஆகஸ்ட் 15 — ஆம் தேதி இந்தியாவுக்

குச் சுதந்திரம் தர்றாங்களாம். நாம இருக்கிற இந்தப் பகுதி பாகிஸ்தானுக்குப் போகிறது. ஏற்கெனவே இங்கே வகுப்புக் கலவரம் தோன்றியாச்சு. நம்ம பக்கத்து இந்துக்களெல்லாம் உயிரைக் காப்பாத்திக்க அகதிகளாக டெல்லி போறாங்களாம். நாங்களும் இன்று இரவு கிளம்பறோம். உனக்கு ஒன்றுமே தெரியாதோன்னுதான் சொல்லிட்டுப் போக வந்தேன். நீயும் எங்களோட வர்றியா?"

முன்னி போனதும் ரத்னாபாய் யோசித்தாள். கோவில் கட்டச் சேர்த்த பணம் ஐந்தாயிரத்திற்கு மேல் பானையில் போட்டுக் கிணற்றடியில் துளசிமாடத்திற்குக் கீழே புதைத்து வைத்திருந்தாள். அதை எடுத்துக் கொண்டு போனால் வழியில் பறி கொடுக்கநேரிடலாம். அதைவிட, பின்னொரு நாள் இங்கே வந்து தோண்டி எடுத்துக் கொண்டால் போச்சு. இங்கேயே விட்டு விட்டுப் போனால் அது வரை பத்திரமாக இருக்குமல்லவா?

ரத்னாபாய் தன் இராமன் சிலைகளை மட்டும் எடுத்துக் கொண்டு பயணமானாள். வழியில் பயந்தபடியே அவர்கள் பயணம் செய்த வண்டியை அடித்து நொறுக்கி எரித்து விட்டார்கள். அந்தநிலையிலும்ரத்னாபாய் அந்தச் சிலைகளை விடாமல் உயிருக்குப் போராடிக் கையோடு எடுத்து வந்து டெல்லியில் அகதிகள் முகாமில் சேர்ந்தாள்.

நிலைமை சீர்திருந்திய பிறகு ஒரு பள்ளியில் அவளுக்கு ஆயா வேலை கிடைத்தது. ராமர் குடும்பத்தைப் பட்டினி போடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டாள். தான் குளித்த போது அவற்றைக்குளிப்பாட்டினாள். காட்டுப் பூவைச் சூட்டி அழகுபடுத்தினாள். அவளுக்குச் சாப்பிட என்ன





அரிவையர் சங்கத் தலைவி திருமதி சித்ரா கிருஷ்ணன் முன்னிலையில், என். செந்தில் (தலைவர்), கே. ரஞ்சித் (செயலாளர்), கே. லலித்குமார் (பொருளாளர்) ஆகியோருடன் 22 உறுப்பினர்களைக் கொண்ட கோகுலம் சிறுவர் சங்கம் சீர்காழியில் 19.3.90 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கிடைக்குமோ அதையெல்லாம் ராமனுக்கும் படைத்தாள்.

''ராமனுக்குக் கோவில் கட்டப் பணம் சேர்த்து வைச்சிருக்கேன். என் பாகிஸ்தானில் இருக்கு. என் ராமன் அதை எடுத்துக் கொடுத்து, கோவில் கட்டிக் குடியேறப் போறான்,'' என்று அவள் கூறுவதைக் கேட்பவர்கள் அவளை ஒரு பைத்தியமாகவே எண்ணினர்.

ஆனால் ரத்னாபாய் தன் நம்பிக்கையில் உறுதியாக இருந்தாள்.

காலம் ஓடியது. 1971 — ஆம் ஆண்டு, பாகிஸ்தானின் எல்லை மீறலை முறியடிக்க இந்திய இராணுவம் பதிலடி கொடுத்துக் கெம்கொரான் பகுதியில் முன்னேறியது. அது கைப்பற்றிய பகுதிகளில்தான் ரத்னாபாயின் கிராமம் இருந்தது!

அந்தச் செய்தி கிடைத்த போது, ரத்னாபாய் தொண்டு கிழமாகிவிட்டாள். 72 வயது என்பது சும்மாவா? உடல் ஒடுங்கிவிட்ட அந்த நிலையில் கூட அவள் நம்பிக்கை இழக்கவில்லை. துணிச்சலுடன் கிளம்பி எல்லைப்புறப் பகுதிக்கு வந்து விட்டாள். அவளைத் தடுத்த இந்திய ராணுவத்தினர் அவள் கூறிய கதையைக் கேட்டு, 'பைத்தியம்' என்று விரட்டி விட்டனர். ஆனால் அவள் கூறுவதை அப்படியே நம்பிய ஒரு ஆபீசர், அவளைத் தன்னுடைய ஜீப்பில் ஏற்றிக் கொண்டு பீரங்கித் தாக்குதல்களுக்கு நடுவே அவள் வாழ்ந்த கிராமத்தை அடைந்தார். பார்வையிழந்த ரத்னாபாய்க்குத் தன் வீட்டை அடையாளம் காட்டுவது கடினமாக இருந்தது. ஒருவழியாக அடையாளம் கண்டு பிடித்துத் தோண்டி, புதைத்து வைத்த நான்கு பானைகளையும் எடுத்தனர்.

மொத்தம் எட்டாயிரம் ரூபாய்! எல்லாம் பிரிட்டிஷ் காலத்து ஒற்றை ரூபாய் வெள்ளி நாணயங்கள்! அன்று அதன் மதிப்பு 25 ஆயிரத்திற்குக் குறைவில்லை!

''இதை வைத்துக் கொண்டு என் ராமனுக்குக் கோவில் கட்டுங்கள்,'' என்று ரத்னாபாய் அந்த அதிகாரிகளிடம் வேண்டிக் கொண்டாள்.

அவள் உயிர் பிரிந்தது!

கெம்கொரான் எல்லைப் பகுதியில் உள்ள சின்னஞ்சிறு கிராமத்தில் இராணுவத்தினர் கட்டியுள்ள 'ரத்னா பாய் ராமர் கோவில்' ரத்னாபாயின் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குகிறது.




பிருந்தாவனம்



ஏழுமலையானும் முஸ்லீம் பக்தரும்!

ஐதராபாத்தைச் சேர்ந்த முஸ்லீம் பக்தர் ஒருவர் திருப்பதி ஏழுமலையானுக்கு ரூ. 5 லட்சம் பெறுமான 108 தங்க மலர்களைக் காணிக்கை செலுத்தியுள்ளார். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் 'நாம அர்ச்சனை'யின் போது வெங்கடாசலபதி இந்தத் தங்க மலர்களால் அர்சிக்கப்படுகிறார். இந்த மலர்கள் ஒவ்வொன்றும் 11 கிராம் எடையுள்ளவை. ஒவ்வொன்றிலும் 'நமோ நாராயணா' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்த முஸ்லீம் பக்தர் தன் பெயரை வெளியே தெரிவிக்க வேண்டாம் என்று சொல்லி விட்டாராம்.

— ஏ. பாலசுப்ரமணியன்,
பரங்கிப்பேட்டை.




அசையும் மலை

அசையாத தன்மைக்கு மலையை உவமைப்படுத்துவர். ஆனால் அசையும் மலை ஒன்று ரஷ்யாவில் 'காசக்டனி' என்ற ஒரு பாலைவனத்தில் உள்ளது. இதன் அடிப்பாகம் சரிந்திருக்கிறது. எனவே காற்று அடிக்கும் போது இம் மலை அசைகிறது.

மனிதர்களும் இதை எளிதாக அசைத்து விடலாமாம். எனினும் இது கீழே விழுந்து விடுவதில்லை. அம் மலை காற்றால் அங்குமிங்கும் அசையும் போது சிற்சில வேளைகளில் ஒருவித ஒலியையும் எழுப்புகிறதாம்.

— ஏ. வி. சண்முகம், கொட்டாரம்.



வரம் தந்தவர்

இரண்டாம் உலகப் போரின் போது நேச நாட்டுத் தலைவர்களான, இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ரஷ்ய ஜனாதிபதி ஸ்டாலின் ஆகிய மூவரும் கிரம்ளின் மாளிகையில் அமர்ந்து போர்க்கால நடவடிக்கைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது சர்ச்சில், "நான் நேற்று ஒரு கனவு கண்டேன். அதில் கடவுள் தோன்றி இன்று முதல் உலகத்தின் பிரதமர் நீதான்," என்று சொன்னார் என்றார்.

ரூஸ்வெல்டும் "நானும் ஒரு கனவு கண்டேன். கடவுள் அதில் தோன்றி இன்று முதல் நீதான் உலகத்தின் ஜனாதிபதி," என்று சொன்னார் என்றார்.


அவர்கள் இருவரும் ஸ்டாலின் என்ன சொல்லப் போகிறார் என்று கவனித்தார்கள். அதற்கு ஸ்டாலின் அமைதியாக, "நேற்று இரவு உங்களுக்கு அப்படி ஒரு வரம் தந்ததாக நினைவில்லையே!" என்றாரே பார்க்க வேண்டும்; சர்ச்சில், ரூஸ்வெல்ட் முகங்களில் ஈயாடவில்லை.

— டி. எம். சத்திஷ், ஆம்பூர்.



மைக்கேல் என்ற ஐரிஷ் நாய் மிகவும் புகழ்பெற்றது. லாஸ் ஏஞ்சல்சில் திரிந்த தெரு நாய்களையெல்லாம் பிடித்து அடுத்த நாள் கொல்வதற்காக அடைத்து வைத்திருந்தார்கள். அவற்றுள் ஒன்றான இந்த நாய், ஒரு முக்கியஸ்தரால் விலைக்கு வாங்கப்பட்டது. 'பெக் ஓ மை ஹார்ட்!' என்ற நாடகத்தில் 1250 முறை இந்த நாய் நடித்தது. 'நாடக அரங்கின் அழியாத் துணைவன்' என்ற பட்டமும், இந்த ஐரிஷ் நாய்க்கு வழங்கப்பட்டது. வித்தியாசமான நாடக நாய்!

— அ. நவ்சாத், மொரப்பூர்.



அமெரிக்காவில் புளோரிடோ மாநிலத்தில் ஓர் அதிசயக் குன்று இருக்கிறது. இந்தக் குன்றின் அடிவாரத்தில் காரை நிறுத்தி நியூட்ரலில் வைத்திருந்தால் கார் தானாகவே குன்றின் மீது ஏறி விடும்! ஏதோ ஒரு விசேஷ சக்தி அந்தக் குன்றின் உச்சியில் இருக்கிறது. அது காரை மேல் நோக்கி இழுத்து விடுகிறது. அது என்ன சக்தி என்பதை இன்று வரை கண்டுபிடிக்கவில்லை.

— வி. பொன்னம்மாள், வந்தவாசி.



திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள ரமணாஸ்ரமத்தில் ரமண மகரிஷிக்கும் அவர் தாயாருக்கும் மட்டுமின்றி, ரமண மகரிஷி வளர்த்த பசு, அவருடன் அன்போடு விளையாடிய மான், தினமும் அவரைத் தரிசிக்க வந்த காக்கை இவற்றுக்கும் தனித் தனியே சமாதிகள் கட்டப்பட்டுள்ளன.

— என். நாகராஜன், தேனி.



பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்குப் பட்டாசு மத்தாப்பு விற்பனை செய்யப்படுவதில்லை! எங்கே என்று கேட்கிறீர்களா? கனடாவில்தான். அந்நாட்டில் பதினெட்டு வயது நிரம்பி, 'பட்டாசு கொளுத்தத் தகுதி பெற்றவர்' என்று சான்றிதழ் பெற்றவர்களுக்கு மட்டுமே பட்டாசு விற்பனை செய்யப்படுகிறது.

— என். நாகராஜன், தேனி




தமிழ்த் தாத்தா அவர்கள் கல்லூரியில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். 'அண்டர் உலகம்' என்ற சொற்றொடருக்கு, 'அண்டர் என்றால் தேவர்கள். தேவர்கள் வாழ்கின்ற மேலுலகம்,' என்று விளக்கிவிட்டு, 'அண்டர் உலகம் என்றால் என்ன' என்று மாணாக்கர் ஒருவரை வினவினார்கள். மாணாக்கர் பாடம் நடத்துகையில் வேறெங்கோ கவனமாக இருந்தவர். அவர் சற்றும் தயங்காமல், 'அண்டர் உலகம் என்றால் கீழ் உலகம்,' என்று விடையளித்தார்.

'அண்டர் உலகம் என்றால் கீழ் உலகம் என்று எப்படிப் பொருள்படும்' என்று அம்மாணாக்கரை வினவினார்கள் ஐயரவர்கள்.

'அண்டர் என்றால் ஆங்கிலத்தில் கீழ் என்றுதானே பொருள்? ஆதலால் அண்டர் உலகம் என்றால் கீழ் உலகம் தானே?,' என்று விளக்கம் தந்தார் மாணாக்கர்.

வகுப்பறையில் சிரிப்பொலி அடங்க நெடு நேரமாயிற்று.

— ஆர். ராமசுப்பிரமணியன், திருநெல்வேலி.



இந்திய பாகிஸ்தான் போரில் 'பூஞ்ச்' பகுதியில் 'ஸெகண்ட் லெப்டினென்ட் வைத்' என்னும் பஞ்சாபி இளைஞன் வீர மரணமடைந்தான். அவன் டைரியில் —

'நான் முன்னேறினால், தொடர்ந்து வா! நான் சரணடைந்தால் என்னைச் சுட்டு விடு!

நான் இறந்தால், என்னை விட்டுச் சென்று விடு!'

என்று எழுதப்பட்டிருந்தாம்!

இதுவல்லவா, தேசபக்தி!

— வி. சுந்தரராமன்.



இங்கிலாந்தின் பிரதமர் சர்ச்சிலைக் காணச் சென்றார் நிருபர் ஒருவர். சர்ச்சில் இருந்த அறைக்குள் சென்றதும், ''நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி! நீங்கள் வருவதற்கு முன் ஒன்பது பேர் என்னைப் பார்க்க வந்தார்கள். ஆனால் நான்தான் மறுத்து விட்டேன்,'' என்றார் சர்ச்சில்.

''அது எனக்குத் தெரியும். அவர்கள் அனைவருமே நான்தான்,'' என்று சர்வ சாதாரணமாகக் கூறினார் அந்த நிருபர்.

— சா. இரா. மணி, வந்தவாசி.

2520 என்ற எண்ணை ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எல்லா எண்களால் வகுத்தால், மீதி இல்லாமலேயே வரும்.

* ஒலிம்பிக் சின்னத்தில் உள்ள ஐந்து வட்டங்கள் எதைக் குறிப்பது தெரியுமா? ஐந்து கண்டங்களைத்தான்.



* தேனீக்கள் ஒரு பவுண்டு எடையுள்ள தேனைச் சேர்க்க 1,40,000 ஆயிரம் மைல்கள் பறக்க வேண்டும்.

* ஜப்பான் நாட்டின் தேசிய கீதம் நான்கு வரிகளே கொண்டதாம்.

* நாம் சிரிக்கும் போது நமது இருதயம் 120 தடவைகள் துடிக்கிறதாம்.

— மா. விஜயகுமார், பாப்பிரெட்டிப்பட்டி.

அமெரிக்காவில் சில்ரன்ஸ் எக்ஸ்பிரஸ் என்று ஒரு குழந்தைகள் பத்திரிகை வெளியாகிறது. இதில் வேலை செய்யும் பல நிருபர்கள் சிறுவர்கள். வயது பத்து முதல் பன்னிரண்டு. உலகில் வேறு எங்கும் எந்தப் பத்திரிகையும் இத்தனை குறைந்த வயதுடைய நிருபர்களை வைத்துக் கொண்டதில்லை!



நியூயார்க்கில் ஓர் இயந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருவரைப் புகைப்படம் எடுக்கும் நேரத்தில் இந்த இயந்திரம் அவரைப் போலத் தத்ரூபமாக ஒரு சிலையைச் செய்து விடும்.

— வி. எஸ். பொன்னம்மாள், வந்தவாசி.

இணையில்லா ஆசிரியர்

ஆசிரியப் பெருந்தகை அரிஸ்டாட்டில் முன்னால் மாவீரன் அலெக்சாந்தர் மண்டியிட்டிருந்தான்.


மாணவனின் தலையைப் பரிவோடு வருடிய ஆசான், ''எதற்காக வந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். தீபெஸ் நாட்டின் மேல் படையெடுக்கக் கிளம்பிவிட்டாய். என் ஆசியைப் பெற வந்திருக்கிறாய். அப்படித்தானே?'' என்று கேட்டார்.

''ஆமாம் குருவே!''

''சூரியன் என்று குறிப்பிட்டால் அது ஒரே ஒரு சூரியனைத்தான் குறிக்கும். அதேபோல் மாவீரன் அலெக்சாந்தர் என்றால் அது என் மாணவனாகிய உன்னை மட்டுமே குறிக்க வேண்டும். அந்த அளவுக்கு வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடிய வீரமும், செயல் திறனும் உனக்கு இருக்கிறது அலெக்சாந்தர். பிறந்த பொன்னாட்டிற்கும், கல்வி கற்பித்த ஆசிரியனுக்கும் நிகரில்லாத பெருமையைக் கொண்டு குவிக்கும் நல்ல செயல்கள் எல்லாவற்றிற்கும் இந்தத் தள்ளாத கிழ ஆசிரியரின் மனம் நிறைந்த ஆசி எப்பொழுதும் இருக்கும். சென்று வா, வென்று வா அலெக்சாந்தர்.''

''பெருந்தகையே, கைப்பற்றப் போகும் தீபெஸ் நாட்டிலிருந்து உங்களுக்கு என்ன கொண்டு வரவேண்டும்?''

''நான் என்ன விரும்புவேன் என்பது உனக்குத் தெரியாதா அலெக்சாந்தர்? வெற்றி கொண்ட நாட்டில் உள்ள அறிஞர் மக்களை இழிவு படுத்தாதே. நமக்குத் தெரியாத வான் சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், புவி இயல், விலங்கியல், பறவை இயல் போன்ற துறைகளில் புது நூல்கள் இருந்தால் வழக்கப்படி எனக்கு அனுப்பிவை. என்னுடைய அறிவுப் பசிக்குத் தீனி போடுவதற்காகவாவது



ஹோரிஸ்

ஏடில்லா மாணவன்!

நீ அடிக்கடி படையெடுத்துப் புதுப் புது நாடுகளை வெல்ல வேண்டும்,'' என்று சிரித்தார் அரிஸ்டாட்டில்.

''இதில் ஒன்றும் தவறில்லையே, பெருந்தகையே! நீங்கள் ஒருவர் புது நூல்கள் அறிந்து கொண்டால் இந்தக் கிரேக்கமே அறிந்த மாதிரி! உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் கற்பித்துவிடுகிறீர்களே!

''அலெக்சாந்தர், தீபெஸ் என்றதும் உனக்கு என்ன நினைவு வருகிறது?''

''எனக்கு அறிவு விளக்கம் செய்த ஆசானே, என்னை நீங்கள் சோதிக்கிறீர்களா? தீபெஸ் என்றதும் அங்கு தோன்றிய மகாகவி பிண்டாரின் நினைவு வராவிட்டால், அவன் படித்த கல்வி வீண் என்று நீங்கள் தானே எவ்வளவோ முறை கூறியிருக்கிறீர்கள்?''

''உண்மைதான். கிரேக்கர்களுக்கு வீர எழுச்சியூட்டிய மகாகவி பிண்டார். உன் முன்னோர்களின் பெரும் புகழைப் பாடல்களாக்கிச் சாகா வரம் தந்து விட்ட கவிஞர் பெருமான் அவர். கவிநயமும், சாந்தமும் நிறைந்த அவற்றை நானே உனக்குப் பலமுறை கூறியிருக்கிறேன். நீயும் மெய்ம்மறந்து சுவைத்திருக்கிறாய். அந்த மகாகவி வாழ்ந்த சைனோசிபாலே நீ படையெடுக்கவுள்ள தீபெஸ் நாட்டில்தான் இருக்கிறது. கிரேக்க மக்களின் வீர எழுச்சிக்கு வேகமளித்த அந்தக்



கவிஞனின் புனிதமான வீட்டை உன் முரட்டு வீரர்கள் இடித்து விடாமல் பார்த்துக் கொள். நான் உன்னிடம் வேண்டுவது இதைத்தான்.''

''பெருந்தகையே, நீங்கள் கேட்பதற்கு முன்னதாக, ஏற்கெனவே நான் நமது வீரர்களுக்கு இது பற்றித் தெளிவான உத்தரவு பிறப்பித்து விட்டேன். நான் உங்கள் மாணவனல்லவா?''

''அலெக்சாண்டர்!'' என்று பெருமையோடு விம்மினார் அரிஸ்டாட்டில்.

''ஆசிரியப் பெருந்தகையே... படையெடுத்துச் செல்லும் நாட்டில் வாழ்ந்த கவிஞனின் இல்லத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று துடிக்கும் நீங்கள், பிறர் அறியா வண்ணம் மனத்தில் புதைத்து வைத்திருக்கும் உங்கள் தனிப்பட்ட ஆசையை இப்பொழுதாவது வெளியிடக் கூடாதா?"

''அலெக்சாண்டர்! நீ என்ன கூறுகிறாய்?'' என்று திகைப்புடன் கேட்டார் அரிஸ்டாட்டில்.

''மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தான் பிறந்த ஊரை நேசிப்பது இயற்கையே. என் தந்தையார் தனது படையெடுப்பின் போது உங்கள் பிறந்த ஊராகிய ஸ்டேஜிராவைப் பாழாக்கியதை நான் அறிவேன். உங்கள் மன வேதனையையும் நான் அறிவேன். இது குறித்து என் தந்தையாரிடம் நான் எவ்வளவு முறை வாக்குவாதம் செய்திருக்கிறேன் தெரியுமா?''

அரிஸ்டாட்டில் தன் மாணவன் கூறுவதைத் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

''தன் வீரத்தின் சின்னமாக ஸ்டெஜிரா அப்படியே பாழடைந்து கிடக்க வேண்டும் என்று என் தந்தையார் ஒரே மூர்க்கத்தனமாக இருந்தார். நான் மன்னனானதும் முதல் வேலையாக ஸ்டெஜிராவைப் புதுப்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்.''

''அலெக்சாந்தர், இதைப் பற்றி உன்னிடமோ உன் தந்தையாரிடமோ நான் பேசியது கூடக் கிடையாதே! எப்படி என் மனத்தை அறிந்து கொண்டாய்!''

''எங்களிடம் கேட்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் மனத்

தின் அடித்தளத்தில் புதைந்துள்ள வேதனையை ஒரு நாள் இரவு, உறக்கத்தில், உங்களையறியாமல் கூறிவிட்டீர்கள் பெருந்தகையே! நல்லவேளை, நான் அருகே இருந்ததால் அறிந்து கொண்டேன். நீங்கள் என்னிடமாவது வாய் திறந்து கேட்டிருக்கலாம். என்னிடம் உங்களுக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது அதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.''


''அலெக்சாந்தர், உன் தந்தையார் தனது வீரத்தின் சின்னம் என்று கூறியதை நான் எப்படி உன்னிடம் சீரமைத்துத் தரச் சொல்வேன்? யோசித்துப் பார்?''

''அவருக்கு வேண்டுமானால் ஸ்டெஜிரா வீரத்தின் சின்னம். ஆனால் அது அலெக்சாந்தருக்குக் கல்விக் கண் வழங்கிய ஆசானின் ஊர் என்பதையும் மக்கள் மறக்க மாட்டார்கள் குருவே. அலெக்சாண்டர் மாவீரனாக இருந்து என்ன பயன், குருவின் ஊரைத் தொடர்ந்து பாழடையும்படி விட்டு விட்டாரே என்றுதானே நிந்திப்பார்கள்?''

''அருமை மாணவனே, நீ எல்லாவற்றையும் புதிய அணுகுமுறையில் காண்கிறாய்!'' என்றார் அரிஸ்டாட்டில் திகைப்புடன்.


''என் வீரத்தில் எனக்குத் தன்னம்பிக்கை இருந்தாலும், போர் என்பது மரணத்தின் வாசலை மிதிப்பதே ஆகும். உங்கள் ஸ்டெஜிராவைப் புதுப்பித்த பிறகு, உங்களிடம் கூறி உங்களைத் திகைக்க வைத்து, உங்கள் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சிப் பொலிவைக் கண்ட பிறகுதான் போருக்குக் கிளம்ப வேண்டும் என்று காத்திருந்தேன். நீங்கள் பிறந்த பெருமைமிக்க ஸ்டெஜிரா புதுப் பொலிவு பெற்று உங்கள் வருகைக்காகக் காத்திருக்கிறது ஆசிரியப் பெருந்தகையே.''

''அலெக்சாந்தர், அருமை மாணவனே, உலக வரலாற்றில் உன் காரணமாக நானும் இடம் பெறுவேன்,'' என்று தன்னிகரில்லாத தன் மாணவனை அணைத்து மகிழ்ந்தார் அந்த ஈடு இணையற்ற ஆசிரியர்.



பிருந்தாவனக்

யாருக்காகப் படிப்பு?



பள்ளிக்கூட மணி ஒலிக்க, பட்டாம் பூச்சிகளாய் மாணவர்கள் வெளியே வந்தனர்.

அவர்களுக்குக் கடைசியாய் மெதுவாக வந்தான் சுரேஷ். அவன் நடையில் சோகமும் பயமும் தெரிந்தன. புத்தகப் பையில் மெல்ல எட்டிப் பார்த்தது ப்ராக்ரஸ் கார்ட்! 'அப்பா என்ன சொல்லுவாரோ...' அவன் மனத்தில் அச்சம் அப்பியது

வீட்டிற்குப் போனவுடன் கார்டைப் பார்த்த அம்மா, ''என்னடா... இரண்டு பாடத்தில் ஃபெயில் ஆகியிருக்கே? எவ்வளவு தடவை சொல்லியும் புத்தி வரலியே! போ, இன்னிக்கு அப்பாகிட்டே அடி வாங்கு.'' என்று தன் கடமைக்கு வைதாள்.

ப்ராக்ரஸ் கார்டை வாங்கிப் பார்த்தவுடன் அவன் அப்பாவின் கண்கள் சிவந்தன. அவர் கைகள் அவன் கன்னத்தைப் பதம் பார்த்தன.

''நீ பாட்டுக்கு ஃபெயில் மார்க் வாங்கிட்டு வருவே... நான் உனக்குக் கையெழுத்துப் போடணுமா? முடியாது போ.'' என்று கோபத்துடன் படுக்கச் சென்றார்.

அவருக்குத் தூக்கம் வரவில்லை. மாறாக துக்கம்தான் வந்தது. 'இப்படியே மார்க் வாங்கினால் அவன் எதிர்காலம் என்னாவது! அவனை எப்படித் திருத்துவது?' அவர் மனத்தில் கேள்விக்குறி தோன்ற ஆரம்பித்தது.

இறுதியில் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து உறங்கினார்.

காலையில் ப்ராக்ரஸ் கார்டைப் பார்த்தவுடன் சுரேஷின் கண்கள் வியப்பால் விரிந்தன. அப்பாவின் கையெழுத்து! போட்டிருந்தார்.

'நல்லவேளை இந்தத் தடவை பிழைத்தேன்.' என்ற நிம்மதியுடன் அதைப் பைக்குள் வைத்தான்.

அடுத்த மாதத் தேர்விலும் சுரேஷ் இரண்டு பாடத்தில் ஃபெயில் ஆகியிருந்தான். வழக்கம் போல் அம்மாவின் வைதல்!

ப்ராக்ரஸ் கார்டைப் பார்த்தவுடன் அவன் அப்பா அவனை ஒன்றும் சொல்லவில்லை. மாறாக உற்றுப் பார்த்தார்.

''சுரேஷ் உன் நல்லதுக்காகத்தான்டா நீ படிக்கிறே... நானும் உன் போல் சின்ன வயசில் ஊர் சுத்தினேன். ஆனால் இப்பப் பாரு... ஆயிரம் ரூபா சம்பாத்தியத்துல கஷ்டப்பட்டுட்டிருக்கேன். என்னை மாதிரி நீயும் கஷ்டப்படக் கூடாதுன்னுதான் நான் உன்னை அடிக்கிறேன். அந்த ஒவ்வொரு அடியும் உன் மேல் உள்ள அன்புக்கும் அக்கறைக்கும் அடையாளம் சுரேஷ்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். புரிஞ்சுக்க வேண்டியது உன் பொறுப்பு.'' அப்பா ப்ராக்ரஸ் ரிபோர்ட்டில் கையெழுத்துப் போட்டு விட்டுப் போய் விட்டார்.

அப்பா அடிக்கிற போது ஏற்படுகிற துக்கத்தை விட இப்போது சுரேஷின் மனத்தில் அதிக துக்கம் பொங்கியது.

அடுத்த அரையாண்டுத் தேர்வில் சுரேஷ் ஐந்தாவது 'ராங்'கில் பாஸ் செய்வதற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்பது தெரியாது மற்றவர்கள் திகைத்தார்கள். ஆனால் உங்களுக்குத் தெரியுமல்லவா?

— தத்தாத்ரேயன், கும்பகோணம்.



கனவிலே மூன்று எலிகள்!

நாட்டு நடப்பு எதையும் கண்டு கொள்ளாமல் பொறுப்பை மந்திரியிடம் ஒப்படைத்து விட்டு, சுகமாகப் பொழுது போக்கியே காலம் கழித்துக் கொண்டிருந்த அமலாபுரி நாட்டு மன்னன் ஒரு நாளிரவு மூன்று எலிகள் — ஒன்று கொழுத்தது, மற்றொன்று மெலிந்தது, பிறிதொன்று

கதையரங்கம்

குருடானது — வருவது போல் கனவு கண்டான். உடனே அரண்மனை ஜோசியரை அழைத்து வரச் சொல்லி விசித்திரமான அந்தக் கனவின் பொருளை விளக்கச் சொல்லிக் கேட்டான்.

ஜோசியர், "மன்னா...! கனவின் உண்மையான விளக்கத்தைச் சொல்வதற்கு எனக்குப் பயமாகவும் தயக்கமாகவும் இருக்கிறது," என்றான்.

"பயப்படாமல் சொல். உனக்கு எந்தத் தீங்கும் வராது," என்ற மன்னனின் உறுதி யளித்தான்.

ஜோசியர் சொன்னார்: "மன்னா, கனவில் வந்த கொழுத்த எலி, நாட்டின் வருமானத்தைச் சுருட்டித் தன் நலனுக்கு உபயோகித்து, உண்டுகொழுக்கும் தங்கள் மந்திரியையும், மெலிந்த எலி வறுமையால் வாடும் நாட்டு மக்களையும், குருட்டு எலி, மக்கள் நலனைக் கருதாது தன் சுகமே பெரிதென்று கண்மூடியாய் வாழும் தங்களையும் குறிக்கிறது."

இதைக் கேட்டு உண்மையை உணர்ந்த மன்னன், ஊழல் புரிந்து மக்களை வாட விட்ட மந்திரியை உடனே நாடு கடத்தி விட்டு, நல்ல பல அறிஞர்களைத் தன் அரசவையில் சேர்த்துக் கொண்டு நல்லாட்சி புரிந்து மக்களை சந்தோஷத்தில் மூழ்கடித்தான்.

— பானு ரேகா ஜோபர், புதுவை — 8.

மூன்றாவது தீர்ப்பு!



ஒரு வணிகன் வியாபாரம் செய்ய வெளியூர் சென்றான். சிறிது தூரத்தில் ஒரு வறண்ட ஏரி இருந்தது. அதில் ஒரு முதலை தண்ணீரில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. அது வணிகனைப் பார்த்து, "நான் இந்த வறண்ட ஏரியில் நீரில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறேனே! நீ என்னைக் கொஞ்சம் தண்ணீருள்ள இடத்தில் கொண்டு போய்ப் போட்டால் உனக்குக் கோடி புண்ணியம் சேரும்," என்று கெஞ்சியது.

வணிகனும் இரக்கப்பட்டு அதைத் தூக்கிக் கொண்டு பாதம் நனையும் அளவுள்ள நீரில் கொண்டு போய்ப் போட்டான். முதலை முழங்கால் அளவு; தொடை அளவு என்று கூறிக்கொண்டே இடுப்பளவு நீருக்கு வந்து விட்டது. தண்ணீரில் தான் முதலைக்கு அளவு கடந்த பலமாயிற்றே! அது உடனே வணிகனின் காலைக் கவ்விக் கொண்டு, "உன்னைத் தின்னப் போகிறேன்," என்றது.

வணிகன் பதறிப் போய் ஏதேதோ சமாதானம் கூறினான். முதலை மசிய வில்லை. இறுதியில் வணிகன், "சரி, நீ என்னைத் தின்னலாம். ஆனால் மூன்று பேரைத் தீர்ப்புக் கூறச் செய்யலாம். அவர்கள் சரி என்றால் நீ என்னைத் தின்று விடு," என்றான்.

முதலில் அவ்வழியே வந்த ஒரு நொண்டி மாட்டிடம் கூறி நியாயம் கேட்டான். மாடோ, "நான் இளமையாக இருந்த காலத்தில் என்னை வண்டியில் பூட்டி ஓட்டியதென்ன! எனக்குப் பருத்திக் கொட்டையும் தவிடும் கொடுத்ததென்ன! இப்போது கிழடாகி விட்டதால் என்னை மாட்டை அறுப்பவர்களுக்கு விற்கப் பார்க்கிறான். அவனிடமிருந்து தப்பி வந்ததே பெரிய காரியம். "மனிதர்களிடம் நன்றி உணர்வே கிடையாது. நீ இவனைத் தின்பது சரிதான்," என்றது.

வணிகன் பதைபதைத்து, தன்னைத் தின்ன வந்த முதலையிடம், "இன்னும் இரண்டு தீர்ப்பாளிகள் இ..இருக்கிறார்கள்," என்றான்.

அங்கு வந்த கிழட்டுக் குதிரையிடம் கூற, "நான் நன்றாக இருந்த போது..." என்று தொடங்கி அந்த நொண்டி மாட்டின் புராணத்தைப் போல வணிகனுக்கு எதிராகப் பாடி விட்டுச் சென்றது.

முதலை மூன்றாம் தீர்ப்பாளிக்காகப் பொறுமையிழந்து காத்திருந்த நேரத்தில் அங்கு ஒரு குள்ளநரி வந்தது. அது வழக்கை விசாரிக்கும் முன், "நாம காட்டுக்குள்ள இரை கிடைக்காம கிராமத்துக்குள் எப்ப வாச்சும் பூந்தா மனிதர்கள் சும்மா, 'இஸ்கோ.. இஸ்கோ' ன்னு நாய்கள் உசுப்பி ஏவி விடறாங்க. இவனைத்தின்பது சரிதான். ஆனால் அதற்கு முன் உங்கள் வழக்கைத் தெரிந்து கொள்ள வேண்டாமா! அதனால நீங்க உங்களோட பழைய இடத்துல எப்படி

இருந்திங்களோ அப்படி இருங்க. அப்பத்தான் நான் சரியான தீர்ப்புச் சொல்ல முடியும்,'' என்றது.

உடனே வணிகன் முதலையைத் தூக்கிக் கொண்டு போய் அந்தப் பழைய வறண்ட ஏரியில் போட்டான். பிறகு ஏரிக்கரையில் போய் நின்று கொண்டான். அப்போது நரி, ''ஏண்டா! வந்தியா, பாத்தியா போலியான்னு இல்லாம தூக்கிட்டு போய்த் தண்ணிலே போடறானாம். போடா டேய்!'' என்றது. வணிகனும் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடி விட்டான்.

— ஆர். குப்புசாமி, பாலக்கரை.



கண்ணன் கருணை!

பாண்டவர்கள் மறைந்து காட்டில் வாழும்போது,ஒரு நாள் கிருஷ்ணபரமாத்மா அவர்களைப் பார்க்க வந்தார். திரௌபதை மிகவும் சந்தோஷத்துடன் அவரை வரவேற்று உபசரித்தாள்.

பகவான் தனக்கு மிகவும் களைப்பாக இருப்பதாகக் கூறி, வெந்நீர் போட்டு ஸ்நானம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

உடனே பீமசேனன் பெரிய அண்டாவில் நீர் நிரப்பிப் பெரிய பெரிய மரங்களைப் பிடுங்கி அடுப்பை எரித்தான். ஆனால், எத்தனை நேரம் அடுப்பு எரிந்தும் கூடத் தண்ணீர் வெப்பமடையவில்லை!

கிருஷ்ணன் பீமசேனனிடம், ''என்னப்பா! இவ்வளவு நேரம் ஆகியும் தண்ணீர் சுடவில்லையா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

பீமன் தன்னுடைய இயலாமையைக் கூறிக் கொள்ள வெட்கப்பட்டு மீண்டும் மீண்டும் மரங்களை வைத்துத் தீ மூட்டினான். ஆனால், அவன் முயற்சி விழலுக்கு இறைத்த நீரைப் போல் ஆயிற்று. பீமன் களைத்து வெட்கித் தலைகுனிந்தான்.

கிருஷ்ணன் அவனைப் புன்சிரிப்புடன் பார்த்து, அந்த அண்டா நீரையும் கவிழ்க்கச் சொன்னார். அப்புறம் பார்த்தால், அண்டாவின் அடி பாகத்தில் ஒரு சிறிய தேரை இறைவனை வணங்கிக் கொண்டு இருந்தது.

கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே, ''இந்தத் தேரை தன்னைக் காப்பாற்ற வேண்டியது. ஆதலால்தான் தண்ணீர் சூடாகவில்லை,'' எனக் கூறினார். பீமசேனனின் கர்வம் அடங்கியது.

சிறு உயிர்களின் வேண்டுதலுக்கும் பகவான் அருள் செய்ததைத் தெரிந்து தனது பலத்தின் காரணமாக ஏற்பட்டிருந்த கர்வத்தை நினைத்து பீமன் வெட்கித் தலை குனிந்தான்.

— பி. எல். கிரிஜா,
புன்செய்ப்புளியம்பட்டி.

நடக்கும் ஒன்று; நடக்காது ஒன்று!

சென்னிமலை அண்ணாமலை ரெட்டியார் மிகச் சிறந்த புலவர். அவர் மிகவும் இரக்க குணம் கொண்டவர். ஓர் ஏழை அவரிடம் சென்று ''ஐயா! என் வீட்டில் திருமணம். எனவே அரசரிடம் சொல்லி எனக்கு ஓர் ஆடும், ஒரு மூட்டை நெல்லும் வாங்கித் தாருங்கள்,'' என்று கேட்டுக் கொண்டான்.

''நீ கேட்டதில் ஒன்று நடக்கும். இன்னொன்று நடக்காது,'' என்றார் புலவர்.

இதைக் கேட்ட ஏழை, நாம் கேட்டதில் ஒன்றுதான் கிடைக்கும். மற்றொன்று கிடைக்காது போலுள்ளதே என எண்ணி மனம் வருந்தினான். ''ஐயா! எப்படியாவது இரண்டும் எனக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்'' என்றான்.

அந்த ஏழையின் வாடிய முகத்தைக் கண்ட ரெட்டியார், ''நான் என்ன சொல்லி



விட்டேன்? நீ கேட்ட இரண்டில் ஆடுதான் நடக்கும் அரிசி நடக்காது. இதைத்தானே சொன்னேன்? இதற்கு நீ ஏன் வருந்த வேண்டும்?'' என்றார்.

ரெட்டியாரின் சொல்லாற்றலைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான் அந்த ஏழை.

அவரும் சொன்னது போலவே அரசரிடம் சொல்லி அவன் கேட்டவற்றை வாங்கித் தந்தார்.

— என். சிவகுமார், பரங்கிப்பேட்டை.



சேவலும் கூவலும்

நெ.சி. தெய்வ சிகாமணி

மலையடிவார கிராமம் ஒன்றில் தீனன் வசித்து வந்தான். அவனிடம் பஞ்சு மாதிரி வெண்மையான நிறத்துடன் ஓர் சேவல் இருந்தது. தீனன் அதை ஆசையாக வளர்த்து வந்தான்.

எல்லாச் சேவல்களும் விடியற்காலை நேரத்தில் மட்டும்தான் கூவும். ஆனால், தீனனுடைய சேவலோ கண்ட நேரமெல்லாம் கூவிக் கொண்டிருந்தது.

அண்டை அயலில் உள்ளவர்களுக்குத் தீனனின் சேவல் அடிக்கடி கூவுவது எரிச்சலை உண்டு பண்ணியது. அவர்கள் ''தீனா, உன் சேவல் கண்ட நேரமெல்லாம் கூவிக் கொண்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் அடக்கி வை,'' என்று கேட்டனர்.

தீனனும் தன் சேவலிடம் மக்கள் கூறியதைக் கூறினான். சேவல் அவன் சொன்னதைப் புரிந்து கொண்டதைப் போல் தலையாட்டியதே தவிர, அதன் சுபாவம் மாறவில்லை. தொடர்ந்து நேரம் காலம் இல்லாமல் கூவிக் கொண்டிருந்தது.

ஒருநாள் கிராமத்து மக்கள் ஒன்று திரண்டு, ''தீனா, உன் சேவலின் கத்தலை எங்களால் சகிக்க முடியவில்லை. அதைக் கொன்று விடுகிறோம்,'' என்று கூறினர்.

தீனன் தன் அன்பான சேவலை அணைத்தவாறு, ''இன்று ஒரு இரவு மட்டும் இதை என்னுடன் இருக்க அனுமதியுங்கள்,'' என்று கேட்டு அனுமதி பெற்றான்.

தீனன் தன் அருமைச் சேவலை எடுத்துக் கொண்டு மலையேறிச் சென்றான்.

எங்காவது ஒளிந்து கொள்ள இடம் கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒரு குகை தென்பட்டது. தன் சேவலுடன் அதற்குள் சென்றான். குகைக்குள் ஒரே இருளாக இருந்தது. வெகு தூரம் நடந்து வந்ததால் அவனுக்குக் களைப்பாக இருந்தது. அதனால் குகைக்குள் சென்றதும் தரையில் படுத்து உறங்கி விட்டான். ஆனால் அவன் சேவலோ உறங்கவில்லை. தீனனுக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்று கவனமாக விழித்துக் கொண்டிருந்தது.

திடீரென புஸ்புஸ்ஸென்று சப்தம் கேட்டது. சேவல் வெளியே வந்து பார்த்த பொழுது ஒரு பெரிய மலைப் பாம்பு மலை மேல் ஏறி வருவது தெரிந்தது.

அந்த மலைப் பாம்பு இரவு நேரங்களில் வெளியே சென்று மலையடிவாரத்திலுள்ள கிராமங்களில் உள்ள ஆடு கோழிகளை விழுங்கி வந்தது. சில இடங்களில் மனிதர்களைக் கூட

விழுங்கி விட்டதாகக் கூறினார்கள். அந்த மலைப் பாம்பை யாராவது அடித்துக்கொன்றுவிட்டால்வெகுமதி தருவதாகவும் அந்தக் கிராமத்து மக்கள் அறிவித்திருந்தார்கள்.

அன்று இரவு அந்த மலைப் பாம்பு அடிவாரத்திலுள்ள ஒரு கிராமத்திற் குச் சென்று ஒரு பெரிய ஆட்டை விழுங்கி விட்டு நகர முடியாமல் மெதுவாக ஊர்ந்து குகையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

பாம்பைப் பார்த்து விட்ட சேவல் உடனே குகைக்குள் வந்து உரத்த குரலில் 'கொக்கரக்கோ', 'கொக் கரக்கோ' என்று கூவியது. சேவலின சப்தத்தைக் கேட்ட தீனன் தூக்கத்தி லிருந்து விழித்துக் கொண்டான்.

அவனைப் பார்த்ததும் சேவல் வெளியே வந்து மீண்டும் பெரிய குர லெடுத்துக் கூவியது. அது தன்னிடம் ஏதோ சொல்ல முயல்கிறது என்று தெரிந்து கொண்ட தீனன் வெளியே வந்து பார்த்தான்.

தூரத்தில் மிகப் பெரிய மலைப் பாம்பு மெதுவாக ஊர்ந்து வருவதைப் பார்த்தான். பயந்து போய் விட் டான். 'பாம்பின் கண்ணில் பட்டு விட்டால் நிச்சயம் விழுங்கி ஏப்பம் விட்டு விடும். நம்மை இது விழுங்கு முன் நாமே இதைக் கொன்று விடுவதுதான் நல்லது.' என்று தீர் மானித்தான்.

மலை மேல் பெரிய பாறைகள் இருந்தன. அவற்றைக் கீழே உருட்டி விட்டால் பாம்பு அதில் அடிபட்டு நசுங்கி இறந்து விடும் என்று எண்ணி னான.

உடனே குகைக்குப் பக்கத்தில் இருந்த பாம்பு வரும் பாதையை நோக்கிப் பெரிய பாறை ஒன்றை உருட்டி விட முயன்றான். முடிய வில்லை. வெகுநேரம் மூச்சைப் பிடித் துக் கொண்டு அசைத்து அசைத்து அதை உருட்டி விட்டான்.

பாறை உருண்டு உருண்டு மலைப் பாம்பின் மீது மோதி அதை நசுக்கி மலையடிவாரத்திற்குக் கொண்டு சேர்த்தது.

மலையடிவாரத்தில் குடியிருந்த தீனனின் கிராமத்தைச் சேர்ந்தவர் கள் நடு இரவில் பெரும் பாறை மலை மேல் இருந்து உருண்டு வருவதைக் கண்டு பயந்து போய் விட்டனர்.

ஊர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தீப்பந்தங்களுடன் மலையடி வாரத்தை நோக்கிச் சென்றனர். அங்கு அவர்களைத் துன்புறுத்தி வந்த மலைப். பாம்பு பாறைக்கிடையே நசுங்கிச் செத்துக் கிடப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் மலை மேல் தீனன் தன் சேவலுடன் நின்று கொண்டிருப்பது அவர்களுக் குத் தெரிந்தது. உடனே அவர்கள் மலை மேல் ஏறிச் சென்று தீனனைத் தோள் மேல் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினர்.

மலைப் பாம்பு எப்படிக் கொல்லப் பட்டது என்ற கதையை தீனன் கூறி விட்டு, தக்க சமயத்தில் சேவல் கூவி எச்சரித்ததை விளக்கி அதன் உதவி யினால்தான் பாம்பைக் கொல்ல முடிந்தது என்ற உண்மையையும் புரிய வைத்தான்.

மலைப் பாம்பைக் கொன்றதற் காக ஊர் மக்கள் அனைவரும் ஒரு விழா எடுத்துத் தீனனைப் பாராட்டிப் பரிசளித்தனர். அத்துடன் நில்லாமல் அந்தச் சேவலுக்கும் ஒரு தங்கச் சங்கிலி பரிசளித்துப் பாராட்டினர்.

இப்பொழுது தீனனுடைய சேவல் எப்பொழுது கத்தினாலும் ஊர் மக்கள் எரிச்சல் அடைவதில்லை. மாறாக அதன் கத்தலை ஒரு சங்கீத மாக நினைத்து மகிழ்ச்சியடைகின்ற னர்!





டைனம் கிட்ஸின் உதவியுடன்
பாட்டி கூடப் பாடம் நடத்தலாம்.
ஃபிக்ஸ்-ஆன் பைப் கிட்
எஜுகேஷனல் வால்யூஸ்:
தூரப்பரப்பு உருவம், முப்பரப்பு உருவம், நெடுங்கிடை மற்றும் நேர்கிடை உருவம் இவற்றை நிர்மாணிக்க உதவுகிறது. பார்வை, செயல் இரண்டையும் நேர்முகப்படுத்தும் திறனை வளர்க்கிறது.
Price – Rs. 60/- + Rs. 20/- *
mobile
மொபைல் கிட்
பார்வை/செயல் இவற்றை நேர்முகப்படுத்தும் லாவகத்தை வளர்க்கிறது.* அழகான, அலங்காரமான, உருவங்களை அமைக்க உதவுகிறது.* உண்டாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.
Price – Rs. 18/- + Rs. 10/- *
ஷேப்-கால்-டெக்ஸ் கிட்
வடிவம், வண்ணம், அளவு, தன்மை இவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. கூட்டு முயற்சியை வளர்க்கிறது. பொருளார்ந்த சொற்பிரயோகத்தையும், மொழியறிவையும் வளர்க்கிறது. உருவாக்கும் திறனை ஊக்குவிக்கிறது.
Price – Rs. 84/- + Rs. 25/- *
ஸ்பைரா-பால் கிட்
வேகம், திசை இவற்றின் விசித்திரங்களை செயல்முறையாகக் கண்டுபிடிக்க உதவுகிறது.* ஈர்ப்பு சக்தியின் காரண காரியங்களைக் கண்டுபிடிக்கும் ஆசையைத் தூண்டுகிறது.
Price – Rs. 50/- + Rs. 20/- *
(*வரிகள், கட்டும் செலவு, அனுப்பும் செலவு)
நாங்கள் பாட்டியின் அறிவையும் அனுபவத்தையும் மதிக்கிறோம்: விளையாட்டு முறையில் கல்வி கற்பிப்பதின் உபயோகத்தை 25 வருட அனுபவம் எங்களுக்கு உணர்த்தியிருக்கிறது.
டைனம் கிட்ஸ் குழந்தைகளுக்குள்ள கண்டுபிடிக்கும் திறமையைத் தூண்டிவிடுகிறது. மற்றும், இளம் உள்ளங்களில் ஒளிந்துகிடக்கும் படைக்கும் திறனை ஊக்குவிக்கிறது!
டைனம் கிட்ஸ் வளரும் குழந்தைகளின் சுயமாகக் கற்கும் திறனைக் கூட்டுவதில் தன்னையே அர்ப்பணிக்கிறது! வகுப்பறை நிலைமையிலும், கூட்டு முயற்சியிலும் கல்வி கற்கும் திறமையை வளர்க்கவும் உதவுகிறது டைனம் கிட்ஸ்.
டைனம் கிட்ஸ் உதவியுடன் விளையாடும் உங்கள் குழந்தையின் தன்னம்பிக்கை வளருவதை கவனியுங்கள்!
Dynam
என்ஜினியரிங் கார்பொரேஷன்
138, கங்காதர செட்டி ரோட்,
பெங்களூர்-560 042.
ஆம்! எனக்கு ______ கிட்/கிட்டுகள் தேவை.
V.P.P. என்னை வந்து சேரும்போது முழுத்தொகையும் செலுத்துவதாக உறுதி அளிக்கிறேன்.
பெயர்: ______
விலாசம்: ______
climb ads/DC/901

அற்புத மனிதர்



ராம்ஜிக்கு ஒரே ஆச்சரியம்! ''என்னைத் தெரியுமா, உங்களுக்கு?''

''உன்னை மட்டுமல்ல, உன் குடும்பம் முழுவதைப் பற்றியும் எனக்குத் தெரியும். நான் யார் தெரியுமா? சொல்கிறேன். உனக்கு ஒரு மாமா உண்டு அல்லவா?'' என்றார் சாமியார்.

''தெரியும் ஐயா, அவர் கூடத் துறவியாகிவிட்டார் என்று வீட்டில் சொல்வார்கள்,'' என்றார் ராம்ஜி.

''அந்தத் துறவியான உன் மாமா நான்தான்,'' என்ற சாமியார், ''ராம்ஜி! உனக்கு விரைவில் ஒரு மகன் பிறப்பான். பிற்காலத்தில் அவன் இந்த உலகத்தாரால் போற்றப்படுவான்,'' என்று கூறி, ராம்ஜியை வழியனுப்பி வைத்தார்.

அந்தச் சாமியார் சொன்னது போலவே, கொஞ்ச காலத்தில் ராம்ஜிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது வேறு யாருமல்ல. டாக்டர் அம்பேத்கர்தான்!

அம்பேத்கர் பிறந்தது 1891 ஏப்ரல் 14 — ஆம் நாள். அவரது தந்தை ராம்ஜி. தாயின் பெயர் பீமா பாய். அவர்கள் அம்பேத்கருக்கு 'பீம்' என்று பெயரிட்டனர். 'ராவ்' என்பது குடும்பப் பட்டப்பெயர். அதாவது, பீமாராவ் அம்பேத்கர்.

'அம்பேத்கர்' என்பது அவரிடம் அன்பு செலுத்திய அவரது ஆசிரியரின் பெயர்.

மனிதன் பிறக்கும்போது, அவனிடம் எந்தவித ஜாதிப் பாகுபாடும் கிடையாது. அதெல்லாம் பாதியில் வந்தவை. பிற்காலத்தில் அந்த உயர்வு தாழ்வுகளற்ற இந்தியச் சமுதாயத்தைப் படைக்க விரும்பி, அதற்காகப் பாடுபட்டவர் அம்பேத்கர். அவர் பிறந்தது ஓர் எளிய ஹரிஜனக் குடும்பத்தில்தான். படிப்படியாகப் படித்துப் பல பட்டங்களைப் பெற்று, இந்தியாவின் அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவரானார்.

அம்பேத்கரின் தந்தை ராணுவத்தில் பணிபுரிந்தார். குழந்தை பீம் பிறந்து இரண்டு ஆண்டுகள் ஆனதும் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் குடும்பத்துடன், 'தாபோலி' என்ற கிராமத்தில் சென்று தங்கி, தனக்குக் கிடைத்த சொற்ப ஓய்வு ஊதியத்தைக் கொண்டு வசிக்கலானார்.

பீமுக்கு ஐந்து வயதாயிற்று. குழந்தையை முறைப்படிப் பள்ளியில் சேர்த்தார்.



அம்பேத்கர்

ஜானகிமணாளன்

ஆனால் அதற்குள் ஒரு சோதனை. பீமனின் தாய் பீமாபாய் நோயில் வீழ்ந்ததுடன், விரைவில் இறந்தும் போய்விட்டாள். ராம்ஜி கலங்கிப் போனார்.

அப்போது அவருடைய சகோதரி ஒருத்தி உதவிக்கரம் நீட்டி வந்தாள். அவள் பெயர் மீரா. குழந்தைகளைத் தனது பொறுப்பில் வளர்த்து ஆளாக்க முன்வந்தாள். ராம்ஜி படித்தவர். துவக்கக் கல்வி முடிந்ததும், பீமாவை ஓர் உயர் வகுப்புப் பள்ளியில் சேர்த்தார். அங்கு சென்ற முதல் நாளே அவருடைய வாழ்வில் ஒரு கசப்பான சம்பவம் நடந்தது.

பீமா தன் வகுப்பறைக்குள் நுழைந்தான். வரிசையாகப் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. அதில் பல மாணவர்கள் அமர்ந்திருந்தனர். பீமா அவர்களுடன் சென்று அமர்ந்தான். உடனே அம்மாணவர்கள் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டனர். என்ன சொன்னார்கள் என்பது புரியவில்லை. அதற்குள், ஆசிரியர் வந்து விட்டார்.



இலேசாகத் தலையை நிமிர்த்தி, கண்ணாடிக்குச் சற்று மேல் வழியாகப் பீமாவை உற்று நோக்கினார். பீமாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''உன் புத்தகங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, அந்த இடத்தை விட்டு வெளியில் வா. அதோ, தனியாக இருக்கிற அந்த இடத்தில் போய் உட்கார். அதுதான் இனிமேல் உனக்கு இடம். போ அங்கே.'' என்றார்.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் பெஞ்ச் — டெஸ்க் எதுவும் கிடையாது. பீமாராவுக்கு விவரம் புரிந்துவிட்டது. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வகுப்பில் சமமாக நடத்தப்படுவதில்லை என்பதை அவன் அப்போதுதான் முதன் முதலில் புரிந்து கொண்டான். அவன் மனம் வேதனைப்பட்டது. வேறு என்ன செய்ய முடியும்? குமுறினான்.

அன்றையதினமேமற்றொருநிகழ்ச்சியும் நடந்தது. சிறுவன் பீமாராவுக்கும் தண்ணீர் தாகம் எடுத்தது. எனவே, ஓடிச் சென்று மற்ற மாணவர்களுடன் வரிசையில் நின்று கொண்டான்

''டேய்,டேய்...நில்டா. பானையிலிருந்து நீரை எடுக்காதேடா,'' என்று கூச்சலிட்டவாறு ஓடி வந்தான். பீமாராவ் பதறிப் போய் நின்றுவிட்டான்.

''நீயெல்லாம் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து நின்று, அவர்கள் குடிக்கும் பாத்திரத்தில் தண்ணீர் குடிக்கக் கூடாது. இன்னொரு நாள் இப்படிச் செய்தாயோ, உதை விழும்.'' அதட்டினான் பணியாள்.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் அவன் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டன. என்றாவது ஒரு நாள் இந்தக் கொடுமைகளை ஒழித்துக் கட்ட

முயல வேண்டும் என்ற எண்ணம் அப்போதே, அவன் ஆழ்மனத்தில் பதிந்து விட்டது.

அந்த எண்ணத்தை மேலும் வளர்ப்பது போல் சில மாதங்களுக்குப் பிறகு மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது:

பீமாராவும் அவனுடைய அண்ணனும் 'கோரேகாவ்' என்ற ஊருக்குச் செல்லவேண்டியிருந்தது.

இருவரும் வண்டியில் ஏறி அமர்ந்தனர்.

நடுவழியில், அந்த வண்டிக்காரன், ''தம்பிகளா, அந்த ஊரில் நீங்கள் யாரிடம் போக வேண்டும்?'' என்று வினவினான்.

பீமாராவ், ''எங்கள் தந்தையிடம்,'' என்றான்.

''அப்படியா? சரி... உங்கள் தந்தையின் பெயர் என்ன?'' என வினவினார் வண்டிக்காரர்.


''ராம்ஜி ஸக்பால்...'' என்றான். பீம்.

உடனே, வண்டிக்காரர், ''என்ன சொன்னாய்? ராம்ஜி ஸக்பாலா? அவன் தீண்டத்தகாத இனத்தவன் ஆயிற்றே! அவனது பிள்ளைகளா, நீங்கள்? இறங்குங்கள் கீழே! இறங்கி எட்டி ஓடுங்கள், கிட்டத்தில் வராதீர்கள்,'' என்று அதட்டியவாறு, வண்டியை நிறுத்திவிட்டான்.

உடனே பீமா, ''ஐயா... ஐயா, எங்களுக்கு அந்த ஊருக்கு வழி தெரியாது வேண்டுமானால் நாங்கள் இரண்டு பங்கு வாடகை தருகிறோம். ஐயா தயவு செய்து எங்களை விட்டுவிட்டுப் போய்விடாதீர்கள் ஐயா,'' எனக் கெஞ்சினான். மேலும் தொடர்ந்து, ''ஐயா! எங்கள் உடைகளைப் பாருங்கள், எத்தனை தூய்மையாக இருக்கின்றன பாருங்கள். நாங்கள் தொட்டு ஏறி உட்கார்ந்ததால் உங்கள் வண்டி எப்படி ஐயா அசுத்தமாகியிருக்க முடியும்?'' என்றான்.

வண்டிக்காரனுக்குப் பீமாவின் பேச்சில் நியாயம் இருப்பது புலப்படாமல் இல்லை. தான் அவர்களை ஏற்றிக் கொள்ள அனுமதித்தாலும் ஊர்ச் சமுதாயம் ஏசுமே என்று தயங்கினான். அதே நேரத்தில், பீமா தரப் போகும் இரட்டிப்பு வண்டிச் சத்தமும் அவன் மனத்தில் ஆசையை மூட்டின. எனவே, சற்றுப் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க முன் வந்தான்.

''ம்... பாவமாக இருக்கிறது. இருந்தாலும் தாழ்ந்த ஜாதிக்காரர்களான உங்களை வைத்து நான் இந்த வண்டியை ஓட்ட மாட்டேன். என்னை உட்கார வைத்து உங்கள் இருவரில் ஒருவன் இந்த வண்டியை ஓட்டுங்கள். நான் ஊருக்குப் போய், வண்டி — மாடு எல்லாவற்றையும் தண்ணீர் ஊற்றிக் குளிப்பாட்டிச் சுத்தம் செய்து கொள்கிறேன்,'' என்றவாறு வண்டிக்குள் நகர்ந்து உட்கார்ந்து கொண்டு, மாடுகளின் தலைக் கயிற்றைப் பீமாவிடம் கொடுத்தான்.



வருந்துகிறோம்

'புனித ரம்ஜானின் புண்ணிய வரலாறு' கட்டுரையைப் பாராட்டும் முஸ்லிம் நண்பர்கள் இருந்தாலும், கண்டனம் தெரிவிப்பவர்களும் இருக்கிறார்கள். புனித நோக்கத்துடன் வெளியிட்ட அந்தக் கட்டுரையிலும் குறிப்பாகப் படத்திலும் முஸ்லிம்களின் மத உணர்வைப் புண்படுத்தும் அளவுக்குச் சில தவறுகள் நேர்ந்திருப்பதாய்த் தெரிய வருகிறது. இத் தவறுகள் நேர்ந்தமைக்காக மிகவும் வருந்துகிறோம்.

— ஆசிரியர்.

ஜல்ஜல் என்று வண்டி ஓடத் தொடங்கியது.

வழிநெடுகிலும் நடந்து முடிந்த அந்த நிகழ்ச்சியே பீமாவின் மனத்தில் திரும்பத் திரும்ப வந்து வேதனை தந்தது. நாமும் மனிதன்தான். வண்டிக்காரனும் மனிதன்தான். நாம் தொட்டால் எந்தப் பொருளும் அசுத்தமாகிவிடுகிறது. வண்டி அசுத்தமாகிறது; அதில் பூட்டியுள்ள மாடுகள் அசுத்தமாகி விடுகின்றன. இதெல்லாம் எப்படி? ஏன்?

சிறுவன் பீமாவுக்கு இதெல்லாம் புரியாத புதிராகவே இருந்தன. இந்தச் சமுதாயப் பாகுபாடுகள் ஏன் ஏற்பட்டன? எப்படி ஏற்பட்டன? இதைப் போக்குவதற்கு வழியே இல்லையா? இப்படியெல்லாம் அவன் மனம் சிந்தித்தது. இக்கொடுமைகளைக் களைய வழியே இல்லையா என்று மனம் கொதித்தான்.

அந்தக் கொதிப்பை மேலும் அதிகமாக்குவது போல் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது:

கோரேகாவில் தந்தை ராம்ஜியைச் சந்தித்து, அவருடன் சில நாட்கள் தங்கிய பிறகு, பீமாராவ், சதாரா திரும்பினான். அங்கு மேலும் சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் பீமா சாலையோடு சென்று கொண்டிருந்தான். அப்போது அவனுக்குத் தாகம் எடுத்தது. ஏற்கெனவே நடந்த அவமான நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. எந்த வீட்டில் சென்று குடிக்கத் தண்ணீர் கேட்டாலும் கொடுக்க மாட்டார்கள் என்பது பீமாராவுக்குப் புரிந்ததுதான். இருந்தாலும் தாகம் எடுக்கிறதே! அதை எப்படித் தணித்துக் கொள்வது? சுற்றுமுற்றும் பார்த்தான்.

தெருவின் நடுவில் ஒரு கிணறு இருந்தது. ஊர்ப் பொதுவானது. தண்ணீர் இறைத்தான். வாளியிலிருந்து இரண்டு கைகளாலும் நீரை அள்ளி உறிஞ்சிக் குடித்தான்.

அப்போது அங்கு வந்த ஒரு தெருவாசி, பீமாவைப் பார்த்து விட்டார். உடனே, உரத்த குரலில், "எல்லாரும் ஓடி வாங்க... ஒரு தீண்டத்தகாதவன் நம் கிணற்றில் தண்ணீர் இறைத்து விட்டான். அத்துடன் அல்லாமல், வாளியிலிருந்து கையால் தண்ணீரை அள்ளி உறிஞ்சி விட்டான்," என்று உரக்கக் கத்தினார்.

அவ்வளவுதான். வீட்டுக்கு ஒருவராக ஓடி வந்து பீமாவைச் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டனர். பீமாவுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. ஸ்தம்பித்து நின்று விட்டான்.

"படுபாவி, இப்போது எங்கள் கிணற்றை அசுத்தமாக்கி விட்டாயேடா, பாவி. உன்னை என்ன செய்கிறோம் பார்," என்று மிரட்டினர். பீமாவைத் தண்டிக்க ஏற்பாடு செய்தனர்.

குழந்தைகளே! நம் நாட்டில் தீண்டாமைக் கொடுமைகள் எந்த அளவுக்குப் பண்டைக் காலத்தில் வேரூன்றியிருந்தது என்று பார்த்தீர்களா?

இத்தகைய அனேக, சிறுசிறு சம்பவங்கள் உண்டு டாக்டர் அம்பேத்கரின் வாழ்வில். அவற்றின் மூலம் அவரது நெஞ்சில் பட்ட அடிகள் தான் அவரைத் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக நின்று, அவர்களின் நலனுக்காகப் பாடுபடத் தூண்டின.

அவரது நூற்றாண்டு தொடங்கியுள்ள இந்தச் சமயத்தில், மேலும் சில நிகழ்ச்சிகளையும், அவர் ஆற்றிய அருந்தொண்டுகளையும் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்கிறேன். அதுவரையில் காத்திருங்கள் சரிதானே!



ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா?

பெரியசாமி பயபக்தியோடு பூசாரியை அழைத்து வந்தார். இருவரும் வயல் வரப்புகளையெல்லாம் தாண்டி, கிணற்றை அடுத்து இருந்த புளிய மரத்தடியில் வந்து நின்றனர்.

''பெரியசாமி, இதோ, இந்த மரத்தடியில் பாருங்கள்.''

பூசாரி சுட்டிக்காட்டிய இடத்தைப் பெரியசாமி நோக்கினார். நொறுங்கிக் கரைந்த சிறுசிறு எலும்புகளும், உரோமங்களும் அங்கே கிடந்தன.

பெரியசாமியின் முகத்தில் பீதி நிறைந்தது. ''என்னங்க இது பூசாரி ஐயா? இது எப்படி வந்தது?''

''நான் மந்திரித்துக் கொடுத்த விபூதியில் இந்த ஏவலுக்கும் மந்திரம் போட்டிருந்தேன். அதனுடைய விளைவுதான் இந்தஎலும்புநொறுங்கலும், உரோமங்களும். காளியாத்தா என் பூஜையை ஏத்துக்கிட்டாள். உங்களுக்கு யாரோ வைத்த ஏவல் விலக ஆரம்பித்து விட்டது. அதற்கு அடையாளம்தான் இவை. இன்னும்கொஞ்ச காலம் வரை தினமும் மரத்தடியில் இதை நீங்கள் பார்க்கலாம். இனிமே உங்களுக்குக் குறையே இருக்காது. எல்லாம் காளியாத்தா கருணைதான்,'' என்று பெருமிதத்தோடு கூறினார் பூசாரி.

''உங்களுக்குக் கண்கண்ட தெய்வம் காளியாத்தா என்றால், எனக்குக் கண்கண்ட தெய்வம் நீங்கள்தான், பூசாரி ஐயா,'' என்று குழைந்தார் பெரியசாமி.

வைக்கோல்போருக்கு அருகில் கிடந்த பெரிய கல்லில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு பூசாரி கம்பீரமாக உட்கார்ந்து கொள்ள, கீழே பணிவோடு அமர்ந்து கொண்டார் பெரியசாமி.

கோழிக்கூண்டை மூடிவிட்டு இளநீரைச் சீவிக் கொடுத்தாள் பெரியசாமியின் மனைவி பொன்னம்மாள்.

''இவரு நல்ல உழைப்பாளிங்க. பசுமைப் புரட்சியில் இந்த மாவட்டத்தில் அதிக விளைச்சல் கண்டவர்னு அமைச்சரிடம் ஐந்தாயிரம் ரூபாய் பரிசு வாங்கியவர். திடீர்னு எலித் தொல்லை பெருகிப் பயிரெல்லாம் முதிராமல் சேதமடைந்ததைப் பார்த்தும் கலங்கிப் போயிட்டாரு. எலியை அழிக்க என்னென்னவோ பண்ணினோம். பணமும் ஏராளமாய்ச் செலவழித்தோம். எதுவுமே பலனளிக்கலே. அதுக்கு மேலேதான், இது வேண்டாதவங்க செய்த வேலையா இருக்கும்னு உங்ககிட்ட வந்து கேட்டோம். நீங்களும் இது ஏவல்தான்னு விபூதி மந்திரித்துக் கொடுத்தீங்க. நீங்க சொன்னபடி அதை வயல்ல தூவினோம். அடுத்த நாளிலிருந்தே எலித் தொந்தரவு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைஞ்சு, இப்போ எலிங்களைப் பார்க்கவே முடிவதில்லே! உங்களுக்கு எப்படி நன்றிக் கடன் கழிக்கப் போகிறோம்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினாள் பொன்னம்மா.

பூசாரி மீசையைப் பெருமிதத்தோடு முறுக்கிக் கொண்டார். குடிசைக்குள் சென்ற பொன்னம்மாள் ஒரு மூங்கில் தட்டை எடுத்துக் கொண்டு வந்தாள். அதில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் பழத்தோடு

ரேவதி

இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களும் இருந்தன.

"ஏதோ எங்களால் ஆன காணிக்கை. பெரிய மனசு பண்ணி ஏத்துக்கணும்." என்று பூசாரியிடம் தட்டைக் கொடுத்து வணங்கினார்கள், பெரியசாமியும் பொன்னம்மாவும்.

மரத்தின் பொந்துக்குள்ளிருந்த கூகையன், 'பெரியசாமி, உலகமகா முட்டாள் என்ற பட்டம் கொடுக்க நீதான் பொருத்தமான ஆள். உனக்கு ஏத்த மனைவிதான் பொன்னம்மா. நான் இங்கே வந்து குடியேறிய நாளிலிருந்து தினமும் ராத்திரியில் நடத்தும் எலி வேட்டைதான் எலிகள் ஒழிஞ்சதுக்குக் காரணம். பூசாரி கொடுத்த விபூதியால் எலிகள் ஒழியலேய்யா. என்னுடைய எலி பிடிக்கும் திறமையால் எத்தனை நூறு எலிகளை உன் வயலில் இருந்து புடிச்சி அழிச்சிருக்கேன் தெரியுமா? எலிகளை அழித்த பெருமைக்கு உரியவன் நான்தான். அதோட, மரத்தடியில் கிடக்கும் எலும்பு நொறுங்கலும், உரோமங்களும் நேற்று இரவு நான் விழுங்கிய எலி இரையின் ஜீரணமாகாத எச்சம்தான். ஏவலுக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இந்தப் பூசாரி திறமையாக உங்களை ஏமாற்றுகிறான். நீங்களும் நம்புகிறீர்கள். இந்தக் காணிக்கை நியாயமாக எனக்குச் சேர வேண்டியது.'' என்று பொருமிக் கொண்டது.

கூகையன் யாரென்பதை உங்களுக்குக் கூறவில்லையே! அது ஓர் ஆண் ஆந்தை. சாக்குருவி வகையைச் சேர்ந்தது.

பூசாரி மிகவும் பிகு செய்து கொண்டு காணிக்கையை வாங்கிக் கொண்டார்.

''பூசாரி ஐயா, கொஞ்ச நாளா நம்ம மச்சு வீட்டுக் கூரையில கோட்டான் அலறும் சத்தம் கேட்கிறது. ஆந்தை குடியேறினால் அபசகுனம் என்பார்களே?'' என்று கவலையுடன் கேட்டாள் பொன்னம்மாள்.

''யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பார்களே... அந்த மாதிரியே ஆந்தை வரும் முன்னே, எமன் அழைப்பு பின்னே என்பார்கள்.'' என்று பூசாரி கூறியதுதான் தாமதம், கணவனும் மனைவியும் நடுங்கிப் போனார்கள்.





''பயப்படாதே பொன்னம்மா. எல்லாத்துக்கும் வழி இருக்கு. ஆந்தை எமதர்மராஜரின் தூதுவன். தர்மராஜன், எமதர்மராஜனின் மகன். அதனால் தர்மராஜருக்குச் சாந்தி பூஜை செய்தால் இந்த ஆபத்தை விலக்கிக் கொள்ளலாம். நாளைக்கே பூஜை போடலாம்,'' என்று அபயமளித்தார் பூசாரி.

கூகையன் பொருமியது. 'பூசாரி, நீ உண்மையாகவே திறமைசாலிதான். எதையுமே சாதகமாப் பயன்படுத்திக்க உனக்குத் தெரிஞ்சிருக்கு. என் வருகை எமனின் வருகையா? கைவிடப்பட்ட கூடுகள், பாழடைந்த கோபுரங்கள், பங்களாக்கள், பொந்துகள்தான் நாங்கள் வசிக்கும் இடங்கள். நாங்கள் ஓர் இடத்தில் வசிக்க வந்து விட்டோம் என்றால், அது கவனிப்பார் இன்றிப் பாழாகிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். உங்கள் மச்சு வீட்டுக் கூரை இடிந்து கிடக்கிறது. அதனால் என் பெரியப்பா அங்கே குடி போயிருக்கிறார். அதை நீ செப்பனிட்டுச் சீரமைத்தால் அவர் வேறு இடம் போவார். அதைச் செய்யாமல் பூஜை போட்டுப் பூசாரிக்குக் காணிக்கை கொடுத்தால் அவர் நகர்வாரா? எங்கள் வருகை, வயல்வெளிகளில் உள்ள பயிர் பச்சைகளுக்குத் திருமகள் வருகைக்கான முன்னோடி. இதுகூட உனக்குத் தெரியலையே?'

''பூஜையை எங்கே வைச்சுக்கலாம்?'' என்று கேட்டார் பெரியசாமி.

''இது ஆந்தையின் செல்வாக்கை அழிக்கப் போகும் பூஜை. ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது. அதனால் பூஜையை இரவில், மச்சு வீட்டிலேயே போடலாம்,'' என்றார் பூசாரி.

பொந்துக்குள் இருந்த கூகையன் ஆத்திரம் தாங்காமல் பொருமியது. 'என்னுடைய உழைப்பை உன் மந்திரத்தின் பெருமை என்று காணிக்கை வாங்கிக் கொண்டாய். என் வருகை எமனின் வருகைக்கு முன்னோடி என்று அநியாயமாய்க் கூறினாய். இப்பொழுது எனக்குப் பகலில் கண் தெரியாது என்று கூசாமல் பொய் கூறுகிறாய். இனியும் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. எனக்குப் பகலில் பார்வை தெரியும் என்பதை இதோ நிரூபித்துக் காட்டி, உன் பித்தலாட்டத்தை வெளிப்படுத்துகிறேன்,' என்று பொந்தின் விளிம்புக்கு வந்தது கூகையன்.

வைக்கோல் போருக்கு அருகே இருந்த கோழிக்கூண்டிலிருந்து, இரண்டு நாட்களுக்கு முன்புதான் வெளியுலகைக் காண வந்த இளம் குஞ்சு ஒன்று தப்பி வெளியே வந்தது. சப்தமின்றி சிறகுகளை விரித்துப் பறந்த கூகையன் அதைக் காலில் இடுக்கிக் கொண்டு பறந்தது!

<u>அறிவியல் உண்மை:</u>

ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது என்பது உண்மையல்ல. நமக்குச் சூரியனைப் பார்த்தால் கண் கூசுவது போல், அதற்கும் வெளிச்சத்தைப் பார்த்தால் கண் கூசும். அவ்வளவே.

ஆந்தைக்குப் பிடித்த உணவு வயல் எலி. எலிகளை விழுங்கிவிட்டு இவை எலும்பு நொறுங்கல்களோடும், உரோமங்களோடும் எச்சமிடும். இதற்கும் ஏவலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

ஆந்தை உண்மையில் விவசாயிகளுக்கு உற்ற தோழன். இரவில் எலி வேட்டையாடிப் பயிர் பச்சைகளின் சேதத்தைக் குறைக்கிறது.

எங்கே அந்த 25 ரூபாய்?



த. ஜானகி

'வரட்டும், அந்தப் பய, என்ன செய்யறேன் பாரு...' மனத்திற்குள் உறுமியபடி சமையல் செய்து கொண்டிருந்தாள் கண்ணம்மா. 'நான் மட்டும் அவனோட வாத்தியாரை இன்னிக்குப் பார்த்துப் பேசாம இருந்தா இந்தப் பய செஞ்ச காரியம் எனக்குத் தெரிஞ்சிருக்குமா? அப்பனைப் போல குட்டிச்சுவராப் போகக் கூடாதுன்னு தானே, கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கறேன்? இந்த வயசிலே, இப்படிப் பொய்யா?' நினைக்க நினைக்க அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தது.

அன்று காலை வழக்கம் போல பாங்க் ஆபீசர் வீட்டுக்கு வேலை செய்யப் போய்க் கொண்டிருந்தாள் கண்ணம்மா. வழியில், குளிப்பதற்காகச் சோப்பு டப்பாவோடு வந்த அவள் மகன் அருள்வேலனின் ஆசிரியர் அவளைப் பார்த்து விட்டார்.

''கண்ணம்மா, கொஞ்சம் நில்லு.''

''என்னங்க ஐயா?''

''பரீட்சைக்குப் பணம் கட்ட நாளைக்குத்தான் கடைசி நாள். உன் மகன் ஏன் இன்னும் பணம் கட்டவில்லை?''

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. எவ்வளவு கஷ்டப்பட்டு எறும்பு சேர்ப்பது போலச் சேர்த்து — வள்ளிசாய் இருபத்தைந்து ரூபாயை அவன் கையிலே கொடுத்து அனுப்பினாள்? ஒரு மாதம் ஆகப் போகிறது. இன்னும் பணம் கட்டவில்லை என்றால்... பணத்தை என்ன செய்திருப்பான்? ஒருவேளை அப்பனைப் போல இவனும்...' நினைக்கும் போதே நெஞ்சை என்னவோ செய்தது. ஆசிரியர் முன்பு மகனைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.

''நாளைக்கு எப்படியும் கொடுத்தனுப்பறேங்க, ஐயா,'' என்றாள் தன் உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ளாமல்.

''மறக்காமக் கொடுத்தனுப்பு. இன்னொரு விஷயம். கிட்டத்தட்ட ஒரு மாசமா அருள்வேலன் என்கிட்டே படிக்க வர்றதில்லே. கேட்டா, வீட்டிலே வேலை இருக்குன்னு சொல்றான். இனிமே அவன்கிட்டே எந்த வேலையையும் கொடுக்காதே?''

''இது இன்னோர் அதிர்ச்சி!

இப்பொழுதெல்லாம் ஏழு மணிக்குத்தான் அருள்வேலன் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறான். வழக்கம் போல ஆசிரியர் வீட்டில் படித்துவிட்டு வருகிறான் என்றுதான் அவள் நினைத்தாள்.

பள்ளிக்கூடம் விட்டதும் பய ஊட்டுக்கும் வராம, வாத்தியார் ஊட்டுக்கும் போகாம என்ன செஞ்சுக்கிட்டிருக்கான்?' மனத்திற்குள் கேள்வி வண்டு போலக் குடைய ஆரம்பிக்கவே, அவளால் பதில் கூடச் சொல்ல முடியவில்லை.

''இதோ பாரு கண்ணம்மா! நல்லாப் படிக்கிற பையனை அநியாயமாக் கெடுக்காதே. இது பத்தாம்

கிளாசு — பப்ளிக் பரீட்சை. நிறைய மார்க்கு வாங்கினாத்தான் அதிக காசு பணம் செலவு இல்லாம மேற் கொண்டு படிக்க வைக்க முடியும். பரீட்சை முடியற வரை அவன் கிட்டே வேலைவாங்காதே... நாளையி லேர்ந்து ஒழுங்கா என்கிட்டே அனுப்பு... நான் வரட்டுமா?''

அவள் உள்ளத்தில் எரிமலையை எரிய விட்டுவிட்டு ஆசிரியர் சென்று விட்டார். ஆபீசர் வீட்டில் மளிகைக் கடைக்காரர் வீட்டில்... வேலை செய் யும் பொழுதெல்லாம் ஆசிரியர் கூறி யது அவள் காதில் ஊசி போலக் குத் திக் கொண்டேயிருந்தது.

கஞ்சி வழிந்து நெருப்பை அணைக்கும் சப்தம் கேட்கவே திடுக் கிட்டுச் சுயநினைவிற்கு வந்தாள் கண்ணம்மா. எரியும் குச்சியை வெளியே எடுத்தாள். அடுப்பின் இத மான சூட்டிற்கு ஏற்ப அரிசி பதமாகிக் கொண்டிருந்தது.

குடிசையின் உள்ளே யாரோ நுழை யும் காலடியோசை கேட்டது. வழக் கம் போல 'தண்ணி' போட்டு விட்டு வரும் தன் கணவனோ என்று பார்த் தாள். இல்லை. அருள்வேலன்தான் புத்தகப் பையுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.


''அம்மா! சோறு வெந்திடுச்சா? ரொம்பப் பசிக்குது!'' என்று கூறிய படி தன் அருகில் வந்து நின்ற பைய னைப் பார்த்தாள்.

முகம் வாடிய தாமரை மலர் போல் சோர்வாகக் காணப்பட்டது. பள்ளியி லிருந்து இரண்டு மைல் தூரம் உள்ள வீட்டிற்கு நடந்து வந்த களைப்பா? ஒரு வினாடி தாய் உள்ளம் கசிந்தது. மறு வினாடியே ஆசிரியர் கூறியது காதில் ரீங்காரமிட்டது.

''எங்கேயிருந்துடா வர்றே?''

''இதென்னம்மா கேள்வி? வழக் கம் போல வாத்தியார் வீட்டுக்குப் போயி படிச்சுட்டுத்தான் வர்றேன்.''

''உங்க வாத்தியாரு நல்ல வாத்தி



யாருதானே?''

''நான் வணங்கற தெய்வமே அவர் தான்னு கூடச் சொல்லலாம்மா. பத்தாம் வகுப்பிலே பள்ளிக்கூடத்துக்கே நான்தான் முதல் மாணவனா வரணும்னு என்கிட்டே காசு கூட வாங்கிக்காம எனக்கு இலவசமா ட்யூஷன் எடுக்கிறது உனக்குத் தெரியாதாம்மா?''

''அப்படிப்பட்ட தெய்வத்தை ஏமாத்தலாமாடா?'' ஆத்திரத்தோடு மகனை அடிக்கக் கையை ஓங்கினாள்.

அருள்வேலன் அடி தன்மீது படாமல் இருக்க, சற்றுத் தலையைச் சாய்த்துக் கொள்ளவே மகனின் சட்டைப் பையைப் பற்றி இழுத்தாள். அந்த இழுப்பில் அவன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து நான்கு பத்து ரூபாய் நோட்டுக்கள் வெளியே வந்து விழுந்தன.

தண்ணி போடக் காசில்லாமல் குடிசைக்குள் அப்பொழுதுதான் நுழைந்தான் அவள் கணவன் சென்னியப்பன். தன் மனைவி சத்தமாகப் பேசுவதைக் கண்டு அப்படியே நின்று விட்டான்.

நாற்பது ரூபாய் பணத்தைப் பார்த்ததும் கண்ணம்மாவுக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டது. எரிமலை போல் வெடித்தாள். ''டேய், மரியாதையாச் சொல்லு. தினம் வாத்தியார் வூட்டுக்குப் போறதா எங்கிட்டே பொய் சொல்லிட்டு எங்கேடா ஊர் சுத்திட்டு வர்றே? ஒரு டீத்தண்ணி வாங்கிக் குடிக்கக் கூட மனசில்லாம நாலணா, எட்டணான்னு சேர்த்து வள்ளிசா இருபத்தஞ்சு ரூபாய் கொடுத்தேனே. அதைப் பரீட்சைக்குக் கட்டாமே என்னடா செஞ்சே? உங்கப்பன் மாதிரி நீயும் சூதாட்டம் ஆடப் போறியா? இந்த நாற்பது ரூபாய் ஏது? பிக்பாக்கெட் அடிச்சியா?''

பளார், பளார் என்று இரண்டு அறைகள் கொடுத்தாள். மூன்றாவது முறை அடிக்கக் கையை ஓங்கிய போது ''அம்மா!'' என்று மகனின் தீனக் குரல் அவளை ஒரு நிமிடம் செயலிழக்கச் செய்தது. அவன் பேசுவதைக் கேட்டாள்.

''உண்மையைச் சொல்றேன். ஒரு மாசத்துக்கு முன்னாடி பணம் கட்ட நீ கொடுத்த இருபத்தஞ்சு ரூபாயைப் பத்திரமா என் தமிழ்ப் புத்தகத்துக்குள்ளே வெச்சிருந்தேன். காலையிலே நீ பாங்க் ஆபீசர் வீட்டுக்கு வேலை செய்யப் போயிட்டே. நான் குளிச்சிட்டுப் பள்ளிக்கூடம் போகும் போது பார்த்தா, அந்தப் பணத்தைக் காணலை. அப்பாதான் தண்ணி போட எனக்குத் தெரியாம அந்தக் காசை எடுத்திருக்கார்ன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. மறுபடியும் பரீட்சைக்குப் பணம் கட்ட உங்கிட்டே காசு இல்லைன்னு எனக்குத் தெரியும். அதனால் என்ன செஞ்சேன் தெரியுமா?''

பதில் கூடச் சொல்ல முடியாமல் திகைத்தபடி மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள் கண்ணம்மா.

''என் பிரண்டு கோகுல்னு ஒருத்தன் இருக்கான். அவன் எனக்குப் பணம் தரேன்னு சொன்னான். அப்படி வாங்கிக் கட்ட எனக்குப் பிடிக்கலை. அதனால பள்ளிக்கூடம் விட்டு வர்ற வழியிலே அவங்கப்பாவோட சோடா பாக்டரியிலே

''அந்தக் கோயில்லே ஏன் வேண்டிக்க மாட்டேன்றே?''

''அங்கே ஏற்கெனவே இரண்டு தேங்காய் நேர்த்திக் கடன் பாக்கியிருக்கு!''

— கடையநல்லூர் கணேசன்.





பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் தினம் ஒரு மணி நேரத்துக்கு மேலேயே வேலை செஞ்சேன். என்ன வேலை தெரியுமா? சோடா கலர் பாட்டில்களுக்கு மூடியை அடைக்கணும். தினம் ஒரு ரூபாய். ஒண்ணே கால் ரூபாய்ன்னு கூலி போட்டார். அதை எல்லாம் மொத்தமாச் சேர்த்து, இன்னிக்கு நாற்பது ரூபாய் கூலி வாங்கிட்டு வந்திருக்கேன். இந்தப் பணம் பூராவும் கை ஒடிய வேலை செய்து நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசும்மா. நாளைக்கு இருபத்தஞ்சு ரூபாயைக் கட்டிடறேன். மீதிக் காசிலே உனக்கு ஒரு ரவிக்கை வாங்கிப் போட்டுக்கோ. இனிமே வாத்தியார் வீட்டுக்குப் போய் ஒழுங்காப் படிக்கறேம்மா,'' என்று உண்மையைச் கூறினான்.

''பணம் காணாமப் போன அன்னிக்கே ஏண்டா என்கிட்டே சொல்லலே?''

''உங்கிட்டே உண்மையைச் சொல்லியிருந்தா நீ அப்பாருகிட்டே சண்டை போடுவே. அவரும் குடிச்சிட்டு வந்து உன்னைக் கண்டபடி திட்டுவாரு. அடிப்பாரு. உதைப்பாரு.. அவர்கிட்டே அடி வாங்கிட்டு நீ அழுவதைப் பார்த்தா என்னால தாங்கிக்கவே முடியாது. எனக்கும் அழுகை அழுகையா வரும். படிப்பிலே புத்தி போகாது. இதுக்காக அப்பாரு கிட்டே சண்டை போடாதேம்மா.''

மகனின் பதிலைக் கேட்டுத் தாய் அதிர்ந்து விட்டாள். தாய் மட்டுமல்ல, தந்தை சென்னியப்பனும் கூட அதிர்ந்து, திகைத்து விட்டார். மகனின் பெருந்தன்மையை எண்ணினார். பரீட்சைக்காக மகன் வைத்திருந்த பணத்தை எடுத்துக் குடித்த ஈனத்தனம் அவர் நெஞ்சைச் சுட்டது. மனம் உருக ஆரம்பித்தது.

''அருள்வேலா... நீ நல்ல மகன் தான். என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருக்க எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கே? ஆனால் நான் நான்... சொல்லவே வெட்கமாயிருக்கு. இனிமேல் குடிக்க மாட்டேன். இது சத்தியம். உன்னைப் பெரிய படிப்புப் படிக்கவைக்கப்போறேன்.'' தெளிந்த உள்ளத்தோடு திருந்திய மனிதராக உள்ளே நுழைந்தார் சென்னியப்பன்.

''அருள்வேலா... ஏதோ.. கோபத்திலே தப்புக் கணக்கு போட்டு உன்னை அடிச்சிட்டேன். என் ராசா இல்லே... சாப்பிட வா.''

தாய் வைத்த தட்டின் முன்பு மன நிறைவோடு சாப்பிட ஆரம்பித்தான் அருள்வேலன்.

டாக்டர் பக்கம்



தொண்டை வலி

டாக்டர். கு. கணேசன்

கமலி எதிர்வீட்டுப் பெண் எங்கள் ஊர் சின்மயா வித்யாலயாவில் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். படிப்பில் வெகு சமர்த்து. இவ்வாண்டு கோடை விடுமுறையில் கமலி திருநெல்வேலிக்குச் சென்றிருந்தாள். அங்கு அவள் பெரியப்பா வீட்டில் ஒரு மாதகாலம் தங்கிவிட்டு, இன்றுதான் ஊர் திரும்பியிருந்தாள். வீட்டிற்கு வந்தாளோ இல்லையோ, அடுத்த நிமிடமே என்னைச் சந்திக்க வந்துவிட்டாள்.

நான்: வா, கமலி. விடுமுறை எல்லாம் எப்படிப் போயிற்று?

கமலி: நாட்கள் போனதே தெரியவில்லை, மாமா. ஊரில் என் பெரியப்பா பையன் கண்ணனுடன் சேர்ந்து கொண்டு — ஒரே விளையாட்டும் பேச்சுமாக — ஆனந்தமாய் விடுமுறையை அனுபவித்து விட்டேன்.

நான்: நல்லது, கமலி. என்ன விஷயமாக வீட்டிற்கு வந்ததும் வராததுமாக என்னைச் சந்திக்க வந்திருக்கிறாய்?

கமலி: எனக்கு நான்கு நாட்களாகத் தொண்டையில் வலி மாமா. பேசும் போது தொண்டை கட்டிக் கொள்கிறது. உணவை விழுங்கும் போதும் சிரமம் இருக்கிறது. இதைத் தங்களிடம் சொல்லி வைத்தியம் பெறுவதற்குத்தான் இவ்வளவு அவசரமாக இங்கு வந்தேன்.

நான்: தொண்டையிலோ அல்லது அதைச் சார்ந்த டான்சில் மூச்சுக் குழல், உணவுக் குழல், குரல்வளை போன்ற பகுதிகளிலோ புண் உண்டாகும்போது தொண்டை வலி வருகிறது. இந்தப் புண் எப்படி உண்டாகிறது, தெரியுமா? நாம் சாப்பிடும் உணவு மூலமோ அல்லது குடிக்கும் தண்ணீர் மூலமோ ஸ்ட்ரெப்டோகாக்கஸ், ஸ்டெபெலோகாக்கஸ், நியூமோகாக்கஸ் போன்ற பாக்டீரியாக் கிருமிகளும், சிலவகை வைரஸ் கிருமிகளும் தொண்டைக்கு வந்து, அங்குள்ள சிலேட்டுமப் படலத்தை அரித்துப் புண்ணாக்கும். அப்போது தொண்டையில் வலி உண்டாகும்!

கமலி: தொண்டைவலி எந்தெந்தச் சமயங்களில் நமக்கு வரக்கூடும்?

நான்: ஜலதோஷம் பிடித்தாலே தொண்டை வலி வரலாம். ஃப்ளு காய்ச்சலின் போது, தொண்டை வலிக்கும். இதுதவிர தொண்டைச்

சதை வளர்ச்சி, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மணல் வாரி அம்மை, மொனிலியாசிஸ் போன்ற நோய்களின் போதும் தொண்டைவலி வரலாம்.

கமலி: தொண்டை வலியால் நமக்கு எந்த மாதிரியான பாதிப்புகள் உண்டாகும், மாமா?

நான்: தொண்டை கட்டிக் கொள்ளும். தொண்டையில் சளி பிடிக்கும். இருமல் வரும். விழுங்குவதில் சிரமம் உண்டாகும். தொண்டை வலி அதிக நாட்கள் நீடித்தால் கழுத்தில் நெறி கட்டிக் கொள்ளும். அதனால் காய்ச்சல் வரும். தொண்டை அடைப்பான் (**Diptheria**) நோய் காரணமாகத் தொண்டைவலி வந்தால், இருதயப் பாதிப்பு ஏற்படும். மற்றப்படி சாதாரணத் தொண்டை வலியினால் பயப்படும்படியாக எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

கமலி: என் வகுப்புத் தோழிகள் சிலருக்கு அடிக்கடி தொண்டைவலி வருவதைக் , கவனித்திருக்கிறேன். அதற்கு ஏதேனும் குறிப்பிடும்படியாகக் காரணம் இருக்குமா, மாமா?

நான்: இருக்கிறது, கமலி. சுத்தத்தின் அவசியத்தை அறியாத சிறுவர் சிறுமிகள் பலர் கண்ட கண்ட இடங்களில் கிடைக்கும் கண்ட கண்ட தண்ணீரையெல்லாம் சாப்பிடுவார்கள். ஐஸ், ஐஸ்கிரீம் போன்ற குளிர்ந்த பண்டங்களை அதிகமாகச் சாப்பிடுவார்கள். இன்னும் சிலர் எச்சில் பண்டங்களைத் தங்களுக்குள் பண்டமாற்றாக வாங்கிச் சாப்பிடுவார்கள். இதுபோன்ற காரணங்களினால் தொண்டைவலி அடிக்கடி வரக்கூடும். இதுதவிர புகைபிடித்தாலும், புகையிலை போட்டாலும் தொண்டை வலி அடிக்கடி வரும். ஆனால் இவ்விரண்டு காரணங்கள் சிறுவர்களுக்குப் பொருந்துவதில்லை. பெரியவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தும்!

கமலி: சரி மாமா, ஐஸ் சாப்பிடுவதற்கும் தொண்டை வலி வருவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? எனக்கு லேசாகத் தொண்டை வலித்தாலே, 'ஐஸ் சாப்பிடாதே!' என்று தடை உத்தரவு போட்டு விடுகிறாள் என் அம்மா.

நான்: தொடர்பு இருக்கிறது கமலி. எப்படித் தெரியுமா? ஐஸ், ஐஸ்க்ரீம் மற்றும் குளிர் பானங்களைச் சாப்பிடும் போது தொண்டையில் உண்டாகக் கூடிய குளிர்ச்சியான சூழ்நிலையில், தொண்டையில் ஏற்கெனவே தங்கியிருக்கும் பாக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகள் அதிக அளவில் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இதனால் தொண்டை வலியும் தொண்டைப் புண்ணும் அடிக்கடி வரலாமல்லவா? இதுதவிர மற்றொரு காரணமும் இருக்கிறது, கமலி. நம்மில் எத்தனை பேர் சுத்தமான கடைகளைத் தேர்ந்தெடுத்து ஐஸும் ஐஸ் க்ரீமும் சாப்பிடுகிறார்கள்? பெரும்பாலும் தெருக்களில் விற்கும் ஐஸைத்தான் வாங்கி உண்பார்கள். அதில் அவ்வளவாகச் சுத்தம் பராமரிக்கப்படுவதில்லை. அதனால் நோய்க் கிருமிகள் எளிதில் ஒட்டிக் கொள்ளும் வாய்ப்பு உண்டாகிறது. நாம் சாப்பிடும் குளிர் பண்டங்களோடு இந்தக் கிருமிகளும் பயணம் செய்து தொண்டையில் புண் உண்டாக்கும். பின்பு தொண்டை வலி வரும். வம்பை விலைக்கு வாங்குவது என்பது இதுதான்!

கமலி: நல்லவேளை, சொன்னீர்கள், மாமா. நான் இதுவரைக்கும் அம்மா சும்மாதான் சொல்கிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போதுதான் அதற்குக் காரணம் புரிந்தது. சரி, மாமா, தொண்டை வலி வந்துவிட்டால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

நான்: சொல்கிறேன். தொண்டை வலி வந்தவர்கள் சுமார் ஒரு வார





காலத்திற்கு வெந்நீரையே குடிநீராகப் பயன்படுத்த வேண்டும். மிகவும் குளிர்ச்சியான பானங்களையும் பண்டங்களையும் உண்பதைத் தவிர்க்க வேண்டும். தினமும் காலை, மதியம், மாலை, இரவு ஆகிய நான்கு வேளைகளிலும் ஒரு சிட்டிகை சமையல் உப்பை வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து—அதைக் கொண்டு வாயையும், தொண்டையையும் கொப்புளித்துக் கழுவ வேண்டும். இம்மாதிரிச் செய்வதால் தொண்டைப் புண்ணில் சேரும் அழுக்கும், சீழும் உடனுக்குடன் அகற்றப்பட்டு, புண் விரைவில் குணமாகும். தொண்டை வலியும் நீங்கும். இம்மாதிரியே இரவில் படுக்கச் செல்வதற்கு முன்பு சுமார் 20 சொட்டு டிங்க்சர் பென்சாயின் மருந்தை 3 லிட்டர் வெந்நீரில் கலந்து ஆவிபிடித்தால் தொண்டை வலி விரைவில் குணமாகும். தொண்டை வலி உள்ள சமயங்களில் காரம் நிறைந்த உணவுகளைச் சாப்பிடக் கூடாது. புகை பிடிக்கக் கூடாது; புகையிலை போடக் கூடாது. ஆரம்பத்திலேயே மருத்துவரை அணுகி, 'ஆன்ட்டி பயாடிக்' எனப்படும் கிருமிக்கொல்லி மருந்துகளையும், வலி நிவாரணி மாத்திரைகளையும் வாங்கி, சுமார் ஒரு வாரத்திற்கு உட்கொண்டு வந்தால் தொண்டை வலித் தொந்தரவு நம்மை விட்டு நீங்கும்!

கமலி: தொண்டை வலி வராமல் தவிர்க்க வழிமுறைகள் உள்ளதா, மாமா?

நான்: எப்போதுமே குடிதண்ணீரைக் கொதிக்க வைத்து ஆற வைத்துச் சாப்பிட்டால் தொண்டை வலி வர வாய்ப்பில்லை. பள்ளி செல்லும் சிறுவர்கள் தங்களுக்கென்று தனியாகத் தண்ணீர் பாட்டிலை வீட்டிலிருந்தே எடுத்துச் சென்று விடுவது நல்லது. அதை மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது. தெருவில் விற்கும் ஐஸ், ஐஸ்க்ரீம் மற்றும் ஈ மொய்த்த எந்தப் பண்டத்தையும் வாங்கிச் சாப்பிடக் கூடாது. ஐஸ்க்ரீம் ஆசையைக் கட்டுப்படுத்த இயலாதவர்கள் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ வீட்டிலேயே ஐஸ்க்ரீம் செய்து சாப்பிடலாம்; அல்லது சுத்தமான கடைகளில் ஐஸ்க்ரீம் வாங்கிச் சாப்பிடலாம். தவறில்லை. நாம் எப்போது சாப்பிட்டாலும், சாப்பிட்ட கையோடு வாயையும், தொண்டையையும் நன்கு கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வாசனைப் பாக்கு உபயோகிப்பது, புகையிலை போடுவது, சூயிங்கம் மெல்வது போன்ற பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். புகைபிடிக்கவே கூடாது. எச்சில் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. இதுபோன்ற தவிர்ப்பு முறைகளைக் கடைப்பிடித்தால் தொண்டை வலி நம்மை அண்டுவதில்லை. அது உறுதி!


கமலி: நன்றி மாமா! தொண்டை வலியைப் பற்றி விரிவாகச் சொன்னீர்கள். என் தொண்டை வலிக்கு இப்போது வைத்தியம் செய்யுங்கள். இனி எப்போதும் எனக்குத் தொண்டை வலி வராமல் பார்த்துக் கொள்கிறேன்.

நான்: நல்லது, கமலி. அப்படியே செய்வோம்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.

In a class of its own

Exclusive pencils for one and all,



LION
PREMIER®
HB PENCILS


Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.






LION
PINKY®
PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours. Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION
Geematic®
DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6 H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka